ஏழா 7வது மண்டப லக்ஷணம்	485	,,
எட்டா 8வது ,, ,,	,,	10
ஒன்பதா 9வது ,, ,,	486	6
பத்தா 10 வது ,, ,,	487	4
பதினொன்ரு 11வது ,,	488	3
பன்னிரண்டாவது ,,	489	1
பதிமூன்ரு 13வது ,,	,,	14
பதினான்கா 14 வது ,,	490	13
34 பத்திவரையில் சதுரச்ரமண்டபங்கள்	491	11
நீண்ட சதுரச்ரமண்டப லக்ஷணம்	492	3

விஷயங்கள்	பக்கம்	வரி
நீண்ட சதுரச்ரமண்டபங்களில் முதலாவது மண்டப லக்ஷணம்	493	7
2வது மண்டப லக்ஷணம்	495	5
3வது ,, ,,	,,	15
4வது ,, ,,	496	10
5வது ,, ,,	497	1
6வது ,, ,,	498	,,
7வது ,, ,,	499	,,
இவ்விதம் 14 தீர்க சதுரச்ர மண்டபவிதி	500	,,
5 விதமான பத்தி விஸ்தாரங்கள்	,,	7
முகபத்திர லக்ஷணம்	,,	12
ஸோபான ,,	,,	14
படிக்கட்டில் ஏறவேண்டிய முறை	502	8

45-வது படலத்தில்—

கோபுர லக்ஷணம்	503	2
துவார சோபை முதலிய பெயர்கள்	,,	8
துவார சோபையின் லக்ஷணம் (1)	,,	12
துவார சாலையின் ,, (2)	,,	15
துவார பிராஸாத ,, (3)	504	3
துவார ஹர்மிய ,, (4)	,,	5
துவார கோபுர ,, (5)	,,	7
விகல்ப ஆபாஸ ஹர்மியங்களில் சோபாதி மானம்	505	1
சந்த ஹர்மியத்தில் சோபாதி மானம்	,,	9
ஜாதி ஹர்மியத்தில்	,,	14
விகல்ப ஆபாஸ சந்த ஹர்மியங்களுக்கு மற்றொருவித மானம்	506	8
ஜாதி ஹர்மிய மானம்	507	1
க்ஷுத்திர ஹர்மியத்திற்கு ஹஸ்தமான விதி	,,	13
ஸார்வதேசிக ஹர்மிய மானங்கள்	,,	18

விஷயங்கள்	பக்கம்	வரி
மற்றொரு விதமான சோபா விஸ்தார மானம்	508	14
துவார பிராஸாத விஸ்தார மானம்	509	2
துவாரஹர்மிய விஸ்தார மானம்	,,	6
துவார கோபுர ,,	,,	10
சோபாதிகளின் நீள அளவுகள்	,,	15
அதில் விசேஷம்	510	8
சோபாதிகளின் உயர அளவுகள்	511	9
அகல நீளங்களில் ஸூத்திர ஸ்தானம்	512	8
கூடாதிகளின் நிர்கமமானம்	,,	13
க்ஷுத்திர ஹர்மிய துவார விஸ்தாரமானம்	513	1
மத்தியஹர்மிய ,, ,,	,,	7
மஹாஹர்மிய ,, ,,	,,	11
7 விதமான துவார உயரமானங்கள்	514	1
துவார மத்திய மென்பது	,,	7
கோபுரத்தின் உயரத்தைக் குறிப்பது	315	1
அகல நீளங்களில் பித்திகள்	515	6
ஏக தலத்தில் கர்ப கிரஹாதி பாகங்கள்	,,	11
இரண்டு தலத்தில் ,,	516	5
மூன்று தலத்தில் ,,	517	10
மற்றொருவிதம்	518	,,
நான்கு தலத்தில் கர்ப கிரஹாதி பாகங்கள்	519	,,
ஐந்து தலத்தில் ,,	520	16
ஆறுதலத்தில் ,,	521	9
ஏழுதலத்தில் ,,	522	7
மற்றொருவிதம்	523	1
ஏகதலத்தில் உயரத்தின் கணக்கு	524	8
மற்றொருவிதம்	,,	17
இரண்டு தலத்தில் உயரத்தின் கணக்கு	525	5
மூன்று தலத்தில் ,,	527	1
நான்கு தலத்தில் ,,	,,	10
ஐந்து தலத்தில் ,,	528	12

விஷயங்கள்		பக்கம்	வரி
ஆறு தலத்தில் உயரத்தின் கணக்கு		529	13
ஏழுதலத்தில் ,,		530	10
துவார சோபையின் அலங்காரம்		531	15
துவார சாலையின் ,,		,,	17
துவார பிராஸாதத்தின் ,,		532	1
துவார ஹர்மியத்தின் ,,		,,	3
துவார கோபுரத்தின் ,,		,,	5
துவார சோபையில், ஸ்ரீ காந்த லக்ஷணம்	(1)	,,	9
,, ரதிகாந்த ,,	(2)	533	10
,, விஜயகாந்த ,,	(3)	534	1
துவாரசாலையில் விஜய விசால ,,	(1)	,,	9
,, விசாலாலய ,,	(2)	535	1
,, விப்ரதீகாந்த ,,	(3)	,,	10
துவார பிராஸாதத்தில் பத்திர நாஸிக லக்ஷணம்	(1)	536	3
,, கேச விசால லக்ஷணம்	(2)	,,	12
துவார பிராஸாத குட்டிய லக்ஷணம்	(3)	537	6
துவார ஹர்மியத்தில் யுக்மஸ்தூபிக லக்ஷணம்	(1)	,,	11
,, அயுக்ம ,,	(2)	538	4
,, ஸோபபீட ,,	(3)	,,	9
துவார கோபுரத்தில் மாத்திரா தண்ட லக்ஷணம்	(1)	539	6
துவார கோபுரத்தில் ஸ்ரீவிசால லக்ஷணம்	(2)	,,	16
,, சதுர்முக ,,	(3)	540	12
அதில் விசேஷங்கள்		,,	14
சாலாகார லக்ஷணம்		541	15
ஸபாகார ,,		542	7
மாலிகாகார ,,		543	9

காசியப சில்பம் பூர்வபாகத்தில் விஷயானுக்கிரமணிகை முற்றும்.

வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால் அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

ஶ்ரீ மஹேஶாய நம: ।

॥ காஶ்யபஶில்பஶாஸ்த்ரம் ॥

(அம்ஶுமத்பேத:)

அத ப்ரதம: படல: ॥

மஹாதேவம் ஶர்வம் பரம் ஸர்வலோகைகநாயகம் ।
மஹேந்த்ரமத்யஸ்தம் ஶாந்தம் பார்வதீஸஹிதம் பரம் ॥ ௧ ॥

தேவதாநவஸித்தாத்யை: ஸேவிதம் ஸுரபூஜிதம் ।
த்ராணார்த்தம் தேவ ச(ஸ)ங்காநாம் நத்வா ப்ரோவாச ஸ காஶ்யப: ॥ ௨ ॥

ஶம்போ: (ஸத்ய:)பரமுகாச்ச்ருதம் ப்ரோ(க்)தஸ்ய ஸ்ருஷ்டிகாரணம்(ணாத்) ।

காசியப சில்ப சாஸ்திரம்.

பூர்வபாகம்

முதலாவது படலம்.

சந்திரனை தரித்தவரும், சகல உலகங்களுக்கும் ஒரே நாயகனாக இருப்பவரும், மஹேந்திரமென்னும் மலையின் மத்தியில் வீற்றிருப்பவரும், மிகவும் சாந்தமான ஸ்வரூபமுடையவரும், பார்வதீ தேவியுடன் கூடி இருப்பவரும், தேவர்கள், தானவர்கள், ஸித்தர்கள் முதலியவர்களினாலே சேவிக்கப்பட்டவரும், தேவர்களினால் பூஜிக்கப்பட்டவரும், (துன்பத்திலிருந்து) தேவர்களைக் காப்பாற்றுகின்றவருமான மஹாதேவனை வணங்கி, காசியபமுனிவர், இவ்விதம் கூறலானார்.

ஜகதாமபிவ்ருத்த்யர்த்தம் யோகிநாமுபகாரகம் ॥௩॥

தேவாநாஞ்ச ஹிதார்த்தாய சிவஜ்ஞானம் (சில்பதந்த்ரம்)
பரம் மஹத் (மஹோந்நதம்) ।
மஹார்த்தம் ஸூக்ஷ்மரூபம் ச கர்ஷணாத்யர்ச்சநாந்தகம் ॥௪॥

அம்ஶுமத்தந்த்ராத் ஸர்வோக்தம் ஹி பூர்வாயகஃ ।
தந்த்ரம் ததர்ஹதேவாநாம் ருத்ராணாமதிகாரிணாம் ॥௫॥

அல்பாயுஷ்யாதியுக்தாநாம் நராணாம் அதிகாரிணாம் ।
அநுக்ரஹாய ஸர்வேஷாம் ஸங்க்ஷேபாத்வத மே
ப்ரபோ ॥௬॥

முக்காலத்திலும் அழிவில்லாதது என்ற பொருளுடைய ஸத்ஸ்வரூபியான பரமேசுவரன், பிறகு, (மாயா சம்பந்தத்தினாலே) அசத் பாவத்தை யடைந்து, உலகத்தைப் படைப்பதற்குக் காரணமானர். அவரிடத்திலிருந்து, உலக அபிவிருத்தியை உத்தேசித்தும், யோகிகளின் உபகாரத்திற்காகவும், தேவர்களின் நன்மைக்காகவும், சிறந்த கருத்துடையதும், கர்ஷணம் (பூமியை உழுவது) முதல் அர்ச்சனம் (தேவர்களை பூஜிப்பது) வரையிலுள்ளதும், சிறிய கிரந்த (நூல்) வடிவமுடையதும், சிறந்ததுமான சிவஜ்ஞானமானது (சில்பதந்திரமானது) உண்டாயிற்று. 4

பெருமைவாய்ந்தவரே, தாங்கள், முன்பு, அம்சுமந்த தந்திரத்திலிருந்து, பல விஷயங்களைக் கூறினீர்கள். அவைகளைத் தெரிந்துகொள்ளுவதற்கு அதிகாரிகளான (தகுதிவாய்ந்தவர்களான) தேவர்கள், உருத்திரர்கள் அல்பாயுள் முதலியவைகளுடையவர்களாயும், அவைகளை யறிந்துகொள்ளத்தக்க தகுதிவாய்ந்தவர்களுமான மனிதர்கள்; இவர்களை அனுக்கிரஹிப்பதற்காக, அந்த தந்திரத்தை (சில்பநூலை) எனக்குச் சுருக்கமாகக் கூற வேண்டும். 6

ஸாராத்ஸாரமஹாவித்யம் த்வயா ப்ருஷ்டம் த்விஜோத்தம |
துர்லபம் தந்த்ரம் வக்ஷ்யே ஶ்ருணுஷ்வைகாக்ரமாநஸ: ||

பௌஷ்யாதிஷண்மாஸா மாகமாஸேதரே ஶுபா: |
தக்ஷிணே சாஶ்வயுங்மாஸ: ஶ்ராவண: கார்த்திகஸ்ததா ||

பூஜிதா: கர்ஷணாதீநாம் ஶேஷமாஸா விவர்ஜிதா: |
ரேவத்யாதித்ரயே ஸ்வாதீ ஸாவித்ரத்வாஷ்ட்ரமைத்ரகம் ||

ஶ்ரவணே ச ப்ரஜேஶஹஸ்தே திஷ்யாஶ்விநக்ஷத்ரயோ:
(ம்ருகஶீர்ஷகா:) |
ஸதநே ச பூஜிதாஸ்தாரா: ப்ரதிஷ்டாயாம் விஶேஷத: ||௭||

ஹே சிறந்த அந்தணனே, நீ கேட்டது நன்கு! நன்கு!!, அரிதான அந்த நூலை உனக்கு நான் கூறுகிறேன். ஒன்றுபட்ட மனதுடன் கவனமாகக் கேட்பாயாக. 7

(உத்தராயணத்தில்) புஷ்யமாதம் முதலான ஆறு 6 மாதங்களுள், மாகமாதம் நீங்கிய (ஐந்து 5) மாதங்கள், (பூ) கர்ஷணாதிகளுக்குச் சிறந்தவைகளாகும். தக்ஷிணாயனத்தில், ஆசுவயுஜமாஸம், ச்ராவணமாதம், கார்த்திகமாதம், இவைகள் பூஜிக்கப்பட்டவைகளாகும். மற்ற மாதங்கள், (ஜ்யேஷ்ட, ஆஷாட, பாத்ரபதமாதங்கள்) விலக்கப்பட்டவைகளாகும். 8½

ரேவதீ 1, புனர்பூசம் 2, மகம் 3, ஸ்வாதீ 4. உத்திரம் 5, சித்திரை 6, அனுஷம் 7, திருவோணம் 8, ஹஸ்தம் 9, ரோஹிணீ 10, பூசம் 11, அசுவதி 12, மிருகசீர்ஷம், இந்த நக்ஷத்திரங்கள் கிரஹாரம்பம் செய்வதற்குச்சிறந்தவைகளாகும்.

சுக்லபக்ஷத்தில், பிரதமை, ஷஷ்டி, சப்தமி, திருதீயை,

𑌤𑍃𑌤𑍀𑌯𑌾 𑌪𑌞𑍍𑌚𑌮𑍀 𑌚𑍈𑌵 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾 𑌚 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑍀 ।
𑌦𑌶𑌮𑍀 𑌤𑌿𑌥𑌯𑌶𑍍𑌶𑌸𑍍𑌤𑌾𑌃 𑌶𑍁𑌕𑍍𑌲𑌪𑌕𑍍𑌷𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥௧௧॥

*𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌚𑍍𑌚 𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍀 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌪𑌞𑍍𑌚𑌮𑍀 𑌤𑌥𑌾 ।
𑌦𑍍𑌵𑌿(𑌤𑍃)𑌤𑍀𑌯𑌾 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑌪𑌕𑍍𑌷𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥

𑌷𑌷𑍍𑌠𑍀 𑌚 𑌦𑌶𑌮𑍀 𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌽𑌨𑍍𑌯𑌾𑌨𑌿 𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑍇 ।
𑌶𑍁𑌕𑍍𑌰𑌸𑍌𑌮𑍍𑌯 𑌶𑌶𑍀𑌜𑍀𑌵𑌾𑌃 𑌵𑌾𑌰𑌾𑌃 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌤𑌮𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ॥

𑌤𑍇𑌷𑌾𑌮𑌂𑌶𑍋𑌦𑌯𑍋 𑌹𑍋𑌰𑌾 𑌦𑍍𑌰𑍇𑌕𑍍𑌕𑌾𑌣𑌶𑍍𑌚𑍈𑌵
𑌶𑍁𑌭𑌦𑌾𑌃 ।
𑌸𑌂𑌧𑍍𑌯𑌾 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌤𑌤𑍍𑌰 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌂𑌶𑌯𑌂 𑌵𑌿𑌨𑌾 ॥

பஞ்சமீ, துவிதீயை; திரயோதசி, தசமீ, பௌர்ணிமை, இந்த திதிகள் மிகச்சிறந்தவைகளாகும். 11

கிருஷ்ணபக்ஷத்தில், பிரதமை, துவிதீயை, பஞ்சமி, துவிதீயை, (திருதீயை) இவைகள் மத்திமதிதிகளாகும்.

கிருஷ்ண பக்ஷத்தில், ஷஷ்டீ, தசமீ, இவ்விரண்டு திதிகளும், அதமமானவைகளாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. மற்ற திதிகள் விலக்கப்பட்டவைகளாகும்.

சுக்கிரவாரம், புதவாரம், ஸோமவாரம், குருவாரம், கிரஹாரம்பத்திற்குச் சிறந்தவாரங்களாகும், என்று கூறப்பட்டிருக்கிறது. 13

அவர்களின் அம்சோதயம், (உதயம்–லக்கினம்) ஹோரை, திரேக்காணம், இவைகள் சுபத்தையளிக்கக் கூடியவைகளென்று கூறப்பட்டிருப்பதையறிந்து கொள்ள வேண்டும்.

---

*𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍 𑌶𑌿𑌲𑍍𑌪𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌚 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌤𑌯𑌾 𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 ।

* பிரதமையானது, சில்பநூல்களிலோ, ஜ்யோதிஷநூல்களிலோ சிறந்ததாகக்கூறப்படவில்லை.

𑌮𑍇𑌷𑌂 𑌕𑌰𑍍𑌕𑌟𑌕𑌂 𑌤𑍌𑌲𑌿𑌂 𑌮𑌕𑌰𑌂 𑌚 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ।
𑌶𑍇𑌷𑌰𑌾𑌶𑍍𑌯𑌂𑌶𑌕𑌾𑌶𑍍𑌶𑌸𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌪𑌤𑍍𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌦𑌾𑌃 ॥

𑌉𑌚𑍍𑌚𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍋 𑌵𑌿𑌤𑍍𑌤𑌗𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌶𑌤𑍍𑌰𑍁𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌗𑌤𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌨𑍀𑌚𑌸𑍍𑌥𑍋𑌽𑌪𑌿 𑌧𑌨𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑍍 ॥௧௫॥

𑌸𑌕𑍍𑌷𑍀𑌣𑍇𑌨𑍍𑌦𑍁𑌕𑍁𑌜𑌾𑌰𑍍𑌕𑌰𑌾𑌹𑍁𑌸𑍌𑌰𑌾 𑌲𑌗𑍍𑌨𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ।
𑌆𑌯𑍁𑌷𑍍𑌯𑌂 𑌧𑌨𑌧𑌾𑌨𑍍𑌯𑌂 𑌚 𑌨𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌨
𑌸𑌂𑌶𑌯𑌃 ॥

𑌧𑌨𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑌾𑌃 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌃 𑌧𑌨𑌧𑌾𑌨𑍍𑌯𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌾𑌃 ।
𑌸𑍌𑌮𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌧𑌨𑌧𑌾𑌨𑍍𑌯𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌃 ॥

ஆனால், அதில், ராசியின் உதயம் கூடாது (உதயம்-ஆரம்பம்.)

(கிரஹாரம்பத்திற்கு) மேஷம், கடகம், துலாம், மகரம், ஆகிய (சர) ராசிகளை நீக்கி, மற்றராசிகள் யாவும் சிறந்தவைகளாகும். சகலவிதமான சம்பத்துக்களையும் விருத்தி செய்பவைகளாகும். 15

உச்சஸ்தானத்திலிருக்கும் சந்திரனும், வித்தஸ்தானத்தில் (இரண்டாவது வீட்டில்) இருக்கும் சந்திரனும் அவ்விதமே சகலவிதமான செல்வத்தையும் விருத்தி செய்பவனாவான்.

பகை வீட்டையடைந்த சந்திரனும், நீசஸ்தானத்தையடைந்த சந்திரனும், செல்வத்தையழிப்பவனாவான். 16

அங்காரகன், சூரியன், சந்திரன் (கிருஷ்ணபக்ஷம் பஞ்சமிக்குமேல் க்ஷீணதசையையடைந்த சந்திரன்) ராஹு சனி; இவர்கள் லக்னத்திலிருந்தால், யஜமானனுடைய ஆயுள், தனம், தானியம், இவைகள் அழியும். சந்தேகமில்லை

தனஸ்தானத்தில் (இரண்டாவது வீட்டில்) குரூரகிரகங்

𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑍍𑌪𑌤𑍍𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌿𑌦𑌾𑌃 ।
𑌬𑌨𑍍𑌧𑍁𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑌾𑌃 𑌪𑌾𑌪𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌭𑌯𑌾𑌵𑌹𑌾𑌃 ॥

𑌪𑍁𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑌾𑌃 𑌕𑍍𑌰𑍂𑌰𑌾𑌃 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌭𑍀𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌶𑌤𑍍𑌰𑍁𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑌾𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌭𑌯𑌾𑌵𑌹𑌾𑌃 ॥

𑌭𑌾𑌰𑍍𑌯𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑌗𑌤𑍋 𑌜𑍀𑌵𑌃 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌯𑍁𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌆𑌯𑍁𑌰𑍍𑌧𑌨𑌂 𑌧𑌾𑌨𑍍𑌯𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 ॥௨௧॥

களிருந்தால், தனம், தானியங்களை நாசம் செய்பவர்களாவார்கள்.

ஆனல், அந்த குரூர கிரஹங்கள், தனஸ்தானத்தில் சுப சந்திரனுடன் கூடியிருந்தால், தனம், தானியங்களை விருத்தி செய்வார்கள். 18

மூன்ருவது வீட்டில் சகல கிரஹங்களும், சகலவிதமான சம்பத்துக்களையுமளிப்பார்கள்.

நான்காவது வீட்டில் பாபகிரஹங்களிருந்தால் அவர்கள் சகலவிதமான துக்கத்தையும் பயத்தையுமளிப்பவர்களாவார்கள்.

புத்திரஸ்தானத்தில் (ஐந்தாமிடத்தில்) குரூர கிரஹங்களிருந்தால், மரணபயமுண்டாகும்.

சத்துருஸ்தானத்தில் (ஆருவது வீட்டில்) இருக்கின்ற கிரஹங்கள் யாவும், சகலவிதமான துக்கத்தையுமளிப்பார்கள். 20

குருவானவர், பார்யா (ஏழாவது) ஸ்தானத்தில் இருந்தாலும், அவர் சந்திரனுடைய பாவத்தில் (வீட்டில்) இருந்தாலும், அல்லது, சந்திரன் வீடாகவும், ஏழாவதாகவுமிருக்குமிடத்திலிருந்தாலும், அவர், ஆயுள், தனம், தானியம் எல்லாவற்றையும் விருத்தி செய்பவராவார். 21

ந்ய ஙஷ்டா ந ஶா ஷ்ஸெவ ஃ கத ஃ ர ஷ்ஃ ய நஶாஷிமெஶஃ
(ஓாயி நஃ) ।
ஶாஹ ஒ ஹா நவஷ்டா மெந ஸவ ஃ ஸள வூ ய ஙா வ ஹா ஃ ॥

கூஃ ஷ்டா ந ஶ தா ஃ கூ ஶுா ஃ ஸவிக்ஷாய ஃ க்ஷயா வ ஹா ஃ ।
ஶாஹ ஒ ஹஷ்ஷ கூஃ ஷ்ஃ ஸவ ஃ வித்ரவிவய ஃ ஙஃ ॥உரு॥

அஶாஹஸ்ஹ ஶாஹமெஷ்வ மூாஹஷ்டா ந ஶ தா ஃ ஶாஹா ஃ ।
ஆாஷஶமெஷ்டா ஊாயொ ஜீவஃ வித்ரவூ ஷிஂ ஸஶாரமெஶஃ ॥

ஙக்ஷ த்ராணெ வ ஊாஸாணெ வக்ஷாணெ மெவ
ஷக்ஷிணெ ।

எட்டாவது வீட்டிலிருக்கின்ற கிரஹங்கள் யாவும் எஜமானனுக்கு மரணத்தையளிப்பவைகளாவார்கள்.

ஒன்பதாவது வீட்டிலிருக்கின்ற சுபகிரஹங்கள், சகல விதமான சௌக்கியத்தையும், தனத்தையுமளிப்பவைகளாகும். 22

பத்தாவது வீட்டில் குரூரகிரஹங்களிருந்தால், அவர்கள், செல்வத்தையும், ஆயுளையும், நாசம் செய்து விடுவார்கள்.

சுபகிரஹமானது, பத்தாவது வீட்டிலிருந்தால், சகல விதமான செல்வத்தையுமளிப்பதாகும். 23

பதினோராவது வீட்டில், சுபகிரஹங்களிருந்தாலும், பாபகிரஹங்களிருந்தாலும், அவர்கள், சுபமான பலனையே யளிப்பார்கள்.

பன்னிரண்டாவது வீட்டில் புதன், குரு, இவர்களிருந்தால், அவர்கள் செல்வத்தைப் பெருக்குவார்கள். 24

நக்ஷத்திரத்தின் கடைசிபாகம், மாசத்தின் கடைசி

வ்யதீபாதே ச ஶூலே ச வைத்ருதே வா காலகண்டகே ||

கண்டே ச ததா தூர்ணே ச (சைவ வ்யாகாதே)
பரிவேஷே ச துர்திநே |
உல்காபாதே நிபாதே ச (ச பரிகே) விஷ்டௌ ச
விஷநாடிகே ||௨௬||

ஷடஶீதி முகே சைவ மாஸஶூந்யே ததைவ ச |
கர்ஷணாதிப்ரதிஷ்டாந்தம் ஸர்வகார்யம் ந காரயேத் ||௨௭||

ஊர்த்வகாலாயுஷம் கர்தும் க்ருஷ்ணபக்ஷேऽபி சந்த்ரவத் |
தஸ்மாத் தர்ம யத்நத: ஶீக்ரம் கர்தவ்யோ யத்நஸம்ப்ரம: ||

அல்பதோஷம் குணாதிக்யம் தினம் முஹூர்தம் ச ஸங்க்ரஹேத் |
அநேககோடிதோஷாட்யம் தினம் வா முஹூர்தமேவ வா ||௨௯||

'பாகம், பக்ஷத்தின் கடைசிபாகம், தக்ஷிணாயனம், வியதீபாதம், சூலம், திருதி, காலகண்டகம், கண்டம், தூர்ணம் (வியாகாதம்) பரிவேஷம், (சூரியனைச்சுற்றிலும் வட்டமிட்டிருக்கின்ற நாள்) துர்தினம், (மேகங்களின் மூட்டத்திஞல் சூரியகிரணமே தெரியாமலிருக்கின்ற நாள்) கொள்ளிக்கட்டைகள் விழுகின்றநாள். பரிகம், விஷ்டி விஷநாடிகாலம், ஷடசீதி முதலிய பிதிருகாலங்கள், மாஸசூனியம், (கருநாள்) ஆகிய காலங்களில் கர்ஷணம் (பூமியை உழுவது) முதல், தேவதா பிரஷ்டைவரையில் கூறப்பட்டிருக்கின்ற எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது (துவக்கக்கூடாது.) 27

மனிதர்களின் ஆயுளையளிப்பதற்கு கிருஷ்ணபக்ஷத்திலும் நல்ல (சுபகரனை) சந்திரனைப்போல், சீக்கிரமாக, முயற்சியுடன், தர்மகாரியங்களைச் செய்யவேண்டும். ஆகையால்,

தோஷஹீநதரம் யாதி ஜீவத்ருஷ்ட்யா விஶேஷத: ।
அநேககோடிதோஷாணாம் *ஜீவேநைகேந விநா தயா ॥

தமோऽவஸ்திதம் ராத்ரௌ ரவிணைகேந நஶ்யதி ।
ததைவ ஜீவத்ருஷ்ட்யா து ஸர்வதோஷவிநாஶநம் ॥

ஏவம் பரீக்ஷ்ய பஹுதா கர்ஷணாதிஸமாசரேத் ॥
தத்ரைவ ஸதிநம் காலஜ்ஞாஸ் ததம்ஶே கர்ஷணம் சரேத் ॥

(தோஷமில்லாமல், முழுமையும் குணமாகவே இருக்கின்ற காலம் கிடைப்பது துர்லபம்) ஆகையால், தோஷம் குறைவாகவும், குணம் அதிகமாகவுமிருக்கின்ற தினத்தையும், லக்கினத்தையும், தேர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஹே அந்தணனே, தினமோ, லக்கினமோ, அனேக கோடி தோஷங்களுடையதாக இருந்தாலும், குருவினால் பார்க்கப்பட்டால், அது முற்றிலும் தோஷமற்றதாகும்.

குருவின் பார்வையில்லாவிட்டால், அநேக கோடி தோஷங்களுடையதாகும். (தோஷங்கள் விலகாது என்பது பொருள்.) 30

இரவில் எல்லையற்ற இருள் சூழ்ந்திருக்கிறது. (ஆனாலும்) அது, சூரியன் உதித்தவுடன் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விடுகிறது அல்லவா, அவ்விதமே, குருவின் பார்வையினாலே, சகல தோஷங்களும் நாசமடைகின்றன.

இவ்விதம், பலவிதமாக (குணதோஷங்களை) ஆராய்ந்து பார்த்து, (குணாதிகமான காலத்தில்) கர்ஷணம் முதலிய காரியங்களைச் செய்ய (த்துவக்க) வேண்டும்.

அவ்விதமான காலத்திலேயே, கிரஹாரம்பத்தைச்

---

*ஜீவேநைகேந நஶ்யதி । இதி வாசோயுக்த இதி பாட: ।

ஸுஷுப்திகேஷு ச கர்தவ்யம் க்ராமாதிஷு ஶிவாலயம் ।
பைஶாசபதகே கார்யம் க்ராமாபிமுகம் து வர்ஜயேத் ॥

ஸஶிவா(ல)ஸ்ய த்ரிஹஸ்தாதி யாவத்த்ரிம்ஶத்தஸ்தகம் ।
தாவத்வஹ்ந்யாதிதிஶி(தைஶே)ஷு கர்தவ்யம் ஶிவமந்திரம் ॥

ஸஶிவாஹ்நந்தராவபி பைஶாசபதகே க்ரமாத் ।
மாநுஷே து பதே வாபி கர்தவ்யம் ஶிவமந்திரம் ॥௩௫॥

விப்ரக்ஷத்ரியவிட்ஶூத்ராஸ்த்வநுலோமாஸ்ததைவ ச
(ப்ரதிலோமகா:) ।
ஸமாஸாந் மநுஜாகாரா: (மநுஜா: ப்ரோக்தா:) ஸர்வ
ப்ராணிஹிதாய வை ॥

செய்ய வேண்டும். அந்த அம்சத்திலேயே, கர்ஷணத்தை (பூகர்ஷணத்தை துவக்கி) ச் செய்ய வேண்டும். 32

கிராமாதிகளில், எட்டு 8 திக்குகளிலும், சிவாலயத்தை கட்டவேண்டும். அது பைசாசபதத்தில் கல்பிக்கப்பட வேண்டும், கிராமத்தை நோக்காமல் இருக்க வேண்டும்.

சிவாலயமானது, மூன்று 3 முழம் முதல் முப்பது 30 முழம் வரையில் சுற்றளவுடையதாக இருக்கவேண்டும். அது அகிழுக்கு உள் கையிலிருப்பதானல், அதை பைசாச பதத்தில் கல்பிக்க வேண்டும்.

சிவாலயத்தை மானுஷ பதத்தில் கல்பிப்பதுமாகும். 35

பொதுவாக மனிதர்கள், பிராமண ஜாதி, க்ஷத்திரிய ஜாதி, வைசிய ஜாதி, சூத்திர ஜாதி, அனுலோமஜாதி, பிரதிலோமஜாதி, என்பவர்களாவார்கள், இந்த பேதமானது, ஸகலவிதமான ஜீவராசிகளின் நன்மைக்காகக் கல்பிக்கப்பட்டதாகும். 36

அத² பூ⁴பரீக்ஷாவிதி⁴꞉ ||

ஹஸ்தமாத்ரம் *தத꞉ காத்வா காத்வா தந்ம்ருதை³வ ஹி |
பூரிதே து யதா³ பாதே³ ஹ்யதி⁴கா சோத்தமா மஹீ ||

ஸமா து மத்⁴யமா ஹீநா ஸா கநீயஸா மதா |
†உத்தமோத்தமயா க்³ராமாத்³யம் ஹீநாம் நிர்வாஸயேத்³ பு⁴வம் ||௩௮||

ஶ்வேதா ரக்தா ச பீதா ச க்ருஷ்ணா ஷட்³ரஸயா
(வேதி³காமஹீ) க்ரமாத் |

பூபரீக்ஷா விதி

(தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற இடத்தில்) ஒரு 1 முழம் அகலம், ஒரு 1 முழம் நீளம் ஒரு 1 முழம் தாழத்திற்கு, பூமியைத் தோண்டி, மண்ணை எடுக்கவேண்டும். பிறகு, தோண்டி எடுத்த மண்ணை அந்தப்பள்ளத்தில் தள்ளி நிரப்ப வேண்டும். அப்பொழுது, தோண்டி எடுத்த மண் மீதமிருந்தால், அந்த பூமியானது உத்தமமான பூமியாகும் குழிநிரம்பி, மண் மீதமில்லாமல் ஸமமாக இருந்தால், அது மத்திமமான பூமியாகும். அந்தக்குழி நிரம்புவதற்குப் போதுமான மண் இல்லாமலிருந்தால், அது அதம பூமியாகும்.

*உத்தமமான பூமியையே, (கிராமாதிகளை கல்பிப்பதற்கு) சிறந்ததாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும் மத்திம பூமியானது, மத்திமமாகும். அதம பூமியை ஒதுக்கி விடவேண்டும். 38

*வஷேகஷ ஹஸ்தம் இதி பாட²꞉ ஶோத⁴நீயோ பா⁴தி |

† க்³ராமாத்³யா ஹஸ்தோத்தமா யயா யயா த்³ராக்ஷாங்கிதா மஹீ ||
இதி பாட²꞉ ஶோத⁴நீயோ பா⁴தி |

* இங்கு மூலம் சரியாக இல்லாதபடியால் அதைத்திருத்தி உரை எழுதப்பட்டிருக்கிறது.

𑌯𑌥𑌾𑌵𑌰𑍍𑌣𑌕𑍍𑌰𑌮𑍇𑌣𑍈𑌵(𑌯𑌾𑌵𑌰𑍍𑌣𑌾)𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌤𑌤𑍍𑌤𑌜𑍍𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌚
(𑌕𑍍𑌷𑌿𑌤𑌿)𑌤𑌾 𑌶𑍁𑌭𑌾 ‖ ௩௯ ‖

𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌚𑍍𑌚𑌾𑌵𑌰𑌾 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾(𑌸𑍍𑌵)𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌵𑌰𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾 ।
†𑌤𑌤𑍍𑌤𑌦𑍋𑌷𑌾𑌹𑍍𑌵𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾 𑌏𑌤𑌦𑍍𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾 𑌨𑌾𑌨𑍍𑌯𑍋𑌽𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 ‖

§𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍇 𑌤𑍁 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌭𑍂𑌤𑌪𑍍𑌰𑍇𑌤𑌪𑌿𑌶𑌾𑌚𑍇𑌭𑍍𑌯𑌃 *𑌊𑌨𑌾𑌂 𑌵𑌾 𑌬𑌲𑌿𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑍇𑌤𑍍 ‖

பூமியானது, வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு, என்று முறையே, நான்கு 4 விதமாகும். இந்த நான்கு 4 விதமான பூமியும், முறையே பிராம்ஹணாதி ஜாதியினருக்கு சிறந்ததாகும். 39

கீழ்ஜாதியினருக்கு, மேல்ஜாதியினருக்குக் கூறப்பட்டிருக்கின்ற பூமியானது சிறந்ததாகும். மேல் ஜாதியினருக்கு, கீழ் ஜாதியினருக்குக் கூறப்பட்டிருக்கிற பூமியானது கிரஹிக்கத்தக்கதல்ல.

ஆகையால், அந்தந்த ஜாதியினருக்கேற்ற பூமியையே அவரவர்களுக்குச் சிறந்ததாகக் கொள்ளவேண்டும்.

அப்படி கிரஹிக்கப்பட்டவிடத்தில் தேவாலயத்தை நிர்மாணம் செய்யவேண்டும். 40

ஆகையால், எல்லாவிதத்திலும் (ஸகலஜாதியினருக்கும்) விசேஷித்து தேவர்களுக்கும், சிறந்தான விடத்தில் தேவாலயத்தைக் கட்டவேண்டும்.

முதலில், பூதங்கள், பிரேதங்கள், பைசாசங்கள், இவர்களுக்கும், (வன) தேவதைகளுக்கும், பலி கொடுக்க வேண்டும். 41

---

† 𑌤𑌤𑍍𑌤𑌜𑍍𑌜𑌾𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾, 𑌇𑌤𑌿 𑌵𑌾 𑌪𑌾𑌠𑌃 𑌶𑍋𑌧𑌨𑍀𑌯𑌃 ।
§ 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌪𑌿, 𑌇𑌤𑌿 𑌵𑌾 𑌪𑌾𑌠𑌃 𑌶𑍋𑌧𑌨𑍀𑌯𑌃 ।
* 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌚, 𑌇𑌤𑌿 𑌵𑌾 𑌪𑌾𑌠𑌃 𑌶𑍋𑌧𑌨𑍀𑌯𑌃 ।

அஸ்த்ரேணோ‡ச்சாட்ய தாந்தேஶாத் பஶ்சாத் கர்ஷணமாசரேத் |
ஶ்வேதா ரக்தா ச பீதா ச க்ருஷ்ணா ஜாத்யநுக்ரமாத்
(க்ரமிதா)க்ரமாத் || ௪௨ ||

*யௌவ (யோவா) நாந் கர்ஷணாக்ஷமாந்
ஶ்ருங்காட்யாந் பலாந்விதாந் |
ஹேமஶ்ருங்கக(வா)ரோக்ரைவேயகாலங்கார(ஹாரண)
ஸம்யுக்தௌ(யாநதாந்) || ௪௩ ||

ஸம்பூஜ்ய த்விஷி(வ்ருஷ)காயத்ரீ(த்ர்யா)ஶத-
பாஷாக்ஷதைர்பூரய: |
பஶ்சாத் நிவேதநம் க்ருத்வா ப்ராங்முகேந
ஸம்ஸ்திதௌ வ்ருஷௌ || ௪௪ ||

அதன் பிறகு, அஸ்திர மந்திரத்தினால், அவைகளை, அந்த விடத்திலிருந்து, உச்சாடனம் செய்யவேண்டும், (அந்த இடத்தை விட்டுச் செல்லும்படி செய்யவேண்டும்.) பிறகு பூகர்ஷணம் செய்ய (அந்த பூமியை உழுவதற்கு) துவக்க வேண்டும்.

பூமியானது, வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு என்று நான்கு விதமாகும். இவைகள் முறையே, நான்கு 4 ஜாதியினருக்கும், தகுதியுள்ளதாகும். 42

யௌவனப்பருவமுடையவைகளும், உழுவதற்கான சக்தியுள்ளவைகளும், கொம்புகளுடையவைகளும், நல்ல வலுவுள்ளவைகளும், தங்கக்கொம்பு, குளம்பு கழுத்தணிகளுடன் கூடியவைகளுமான இரண்டு காளைமாடுகளை,

‡ உச்சாடயேத் பஶ்சாத் பஶ்சாத்கர்ஷண இதி பா: ஶோதநீய: |

* யௌவநாந் கர்ஷணே ஶக்தாந் ஶ்ருங்கயுக்தாந் பலாந்விதாந் | இதி பா: ஶோதநீயோ பாதி ||

[1]யஜ்ஞாஹீமெஹாஸவ்ருக்ஷெ ஶுக்ஷ்ணெ நயாமம்
ஸஙூடி ।

[2]ஸீதாயாஉதிஹஷாஶ்வாம் நாஹம் ஸஹாம ஶாஞும் ஹவெசு॥

[3]வ்ருத்தகூஈஉஶெஷெ தா வம்ஶாம்ஶுஉஶுகடி ।
உவவிஶொஷ(ம)தி த்ராஞும் ஸ்ராசு த்ரஉாத்ரம் தக்ஷவநடி
ஹவெசு ॥ சசு ॥

கிழக்கு முகமாக திருத்தி, புத்திமானுக இருப்பவன், அவை களை விருஷப காயத்திரியினுலே, சந்தணம், புஷ்பம், அக்ஷதைகளினுலே முதலில் பூஜை செய்து, நிவேதனம் செய்யவேண்டும். 44

யாகத்திற்குரிய மரங்களினுலோ, அழுத்தமான மரங்களி னுலோ, நுகத்தடியையும், கலப்பையையும் செய்யவேண்டும்

கலப்பையின் உயரமானது, மூன்று 3 முழமாகும். அதன் அகலமானது, ஏழு 7 அங்குலமாகும். குந்தமானது (அதன் மேல்பாகமான கைப்பிடியானது) வட்டமாக இருப் பதாகும். அல்லது, 8 அஷ்டாச்ரம், அல்லது 4 சதுரச்ர மாகவுமிருப்பதாகும். மேகலையின் (அதன் மேல் பாகத்தின்) உயரமானது, மூன்று 3 தாளமாகும். அதன் கனமானது, மூன்று 3 அங்குலமாகும். அது அடியிலிருந்து நுனி வரையில் முறையே சிறுத்திருக்க வேண்டும். அதன் நடு வானது, சிறிது சிறுத்திருக்கவேண்டும்.

---

1 யாஜ்ஞிகெஷாஸவ்ருகெஷவ-ா உதி வாம: ஶாய-நீயொ ஹவதி ।

2 ஸீராயாஉம் த்ரூஹஷாஶ்வம், உதி வாமொ யாதக: ।

3 வ்ருத்தம் கூஞுஉஶெஷம் தா உமும் வஷுஶுஉஶுகடி । உதி வாமொ யாதக: ।

[1]𑌮𑍂𑌲𑌾𑌦𑌗𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑍀𑌣𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌷𑍀𑌣𑌂 𑌤𑍁 𑌯𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌮𑍇𑌖𑌲𑌾𑌧𑌸𑍍𑌤𑌲𑍇 𑌤𑍁 [2]𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍍𑌵𑍇𑌶𑍋 𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥

[3]𑌵𑌸𑍍𑌵𑌂(𑌦𑌶)𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌾𑌮𑌂 𑌵𑌾 𑌤𑌦𑍍𑌘𑍍𑌨𑌾(𑌘𑍍𑌨)𑌮𑌧𑍍𑌯𑌰𑍍𑌧𑌕𑌮𑍍 ।
𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌾𑌮𑌂 𑌘𑍍𑌰𑌾𑌣𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌤𑍁 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌃 (𑌪) ॥ ௪௮ ॥

𑌸𑍀𑌤𑌾(𑌤𑌾)𑌰𑍍𑌧𑍇 𑌘𑍍𑌰𑌾𑌣𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ।
𑌘𑍍𑌰𑌾𑌣𑌾𑌗𑍍𑌰𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑌦𑌾𑌯𑌤𑌮𑍍 ॥

𑌶𑍇𑌷𑌂 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰(𑌵𑌕𑍍𑌤𑍍𑌰)𑌮𑌿𑌤𑌿 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌸𑍀𑌮(𑌮𑌂)𑌮𑍇𑌖𑌲𑌾𑌸𑌂𑌮𑌿𑌤(𑌤𑌂) ।

மேகலையின் அடியில் திர்யக்வேசமானது, (ஏறுகாலைச் சொருகுமிடமானது) ஒன்பது 9 அங்குலமாகும். அது எட்டு 8 அங்குலம், அல்லது பத்து 10 அங்குலம் நீளமிருப்பது மாகும். அதன் கனமானது, ஒண்ணரை 1½ அங்குலமிருக்க வேண்டும். 47½

ஹேகாசியபரே! க்ராணத்தின் (மூக்கின்-மோழியின்) நீளமானது, இருபத்திநான்கு 24 அங்குலமிருக்க வேண்டும். கலப்பையின் பாதியில், க்ராணத்தின் உயரமானது, ஐந்து 5 அங்குலமிருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. கிராணத்தின் முகமானது (மேல் பாகமும் கீழ்பாகமும்)

---

1 𑌮𑍂𑌲𑌾𑌦𑌗𑍍𑌰𑌂 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑍀𑌣𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌷𑍀𑌣𑌂 𑌤𑍁 𑌯𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 । 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌃 𑌶𑍋𑌧𑌨𑍀𑌯𑍋 𑌭𑌾𑌤𑌿 ।

2 𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍍𑌵𑍇𑌶𑌂, 𑌇𑌤𑌿 𑌵𑌾 𑌪𑌾𑌠𑍋 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 ।

3 𑌵𑌸𑍁𑌂 𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌾𑌮𑌂, 𑌇𑌤𑌿 𑌵𑌾 𑌪𑌾𑌠𑍋 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 ।

ஷண்ணா த்ரும் வ்யாணவிஷ்லாரம் வ நம் ஷெவா(வெஷாம்)
ஶாரும் ஹவெச ॥ ௫௰ ॥

சுஶ்ரம் வஷீவா(ஶவா)காரம் உநவஷிவபும்
(சுநவஷிவபூா)கூரஶம் ஹவெச ।
த்ரிவஙுஶா த்ருஶித்ரூக்ஷம் வீவ(ர)வ்யாணாஶ்ரயொஷ்ல-
(ஶஜ)ரபு ॥ ௫௧ ॥

ஸுயவா ஹவஜிஹ்வாம் த வ்யாணாஶ்ரெ யொஜயெச
வாயஃ ।
வீதா(ரா)யாஶவஶாநம் வ யாஶம் வஜ்ர(ஶஜ)யாஶாநிதபு ॥

கநிஷ்டாம் ஶாஶிவரீணாஹம் ஶொவஶபூ ஷிகாராநி(ய)தபு ।

இணைந்திருக்க வேண்டும். அதன் நீளமானது எட்டு 8 அங்குலமாகும். மீதமுள்ளது இஷ்டம் போலிருப்பதாகும். கலப்பையானது, மேகலையுடன் (ஏர்க்காலுடன், அல்லது மூக்கணையுடன் இணைத்துக் கட்டப்படும் கயிற்றுடன்) இணைந்திருக்க வேண்டும். 49½

மோழியின் விஸ்தாரமானது, ஆறு 6 அங்குலமாகும். கனமானது, நான்கு 4 அங்குலமாகும். நுணியானது முறையே ஊசிமுனை போல் சிறுத்திருக்கவேண்டும். ஸீரம் க்ராணங்களின் மத்தியமான (இணைப்பானது) பதினைந்து 15 அங்குலமாகும். அல்லது? புத்திமானாக இருப்பவன், ஹலஜிஹ்வையை, (ஹலம்–கலப்பை, ஜிஹ்வா–நாக்கு, ஹல ஜிஹ்வை என்பதற்கு கொழுமுனை என்று பொருள் கொள்ளுவதாகும்.)

நுகத்தடியானது, கலப்பைக்கு ஸமமாக இருக்க வேண்டும். அல்லது, இஷ்டமான அளவுடையதாக இருப்பதுமாகும்.

கோசர்மமானது சிறுவிரல் கனமும், இரண்டு 2 முழம் நீளமுமிருக்கவேண்டும். புத்திமானாக இருப்பவன் நுகத்

ஹ்ருதயம் ஸமுச்சார்ய யோஜயேத் யுக்மயோர் வ்ருஷௌ ॥

யாமதக்ஷே ஸர்வம் பத்வா கிஞ்சித் தக்ஷிணாச்ரிதः ।
ஶிவமந்த்ரம் ஸமுச்சார்ய ப்ராங்முகோ வா உதங்முகः ॥

கர்ஷயேச்ச ததோ விப்ரः த்ருணாதீநி வ்யபோஹ்ய ச ।
திலஸர்ஷபமுத்காம்ஶ்ச நேத்ரமந்த்ரேண வாபயேத் ॥

ஆசார்யம் பூஜயேத்பஶ்சாத் ஹலயுக்மவ்ருஷாந் ததா ।
த்ரிராத்ரஞ்சோத்தமம் ப்ரோக்தம் வேதராத்ரம் து மத்யமம் ॥௫௩॥

பஞ்சமம் ஹ்யதமராத்ரம் து ஷஷ்டம் பரிவர்ஜயேத் ।

தடியின் நடுவில் கலப்பையை இணைத்துக்கட்டி, அதில் நுகத்தடிக்கு சோபையளிக்கக்கூடிய இரண்டு 2 காளை மாடுகளை, ஹ்ருதய மந்திரத்திலே, நுகத்தடியில் பூட்ட வேண்டும்.

பிறகு, ஏற்காலுக்குச் சிறிதளவு வலது பக்கத்திலிருந்து கொண்டு, சிவமந்திரத்தை ஜபித்துக் கொண்டு, கிழக்கு முகமாகவோ, வடக்கு முகமாகவோ உழவேண்டும். அவ்விடத்திலுள்ள புல் பூண்டுகளை எடுத்து விட்டு அந்த பூமியில், எள்ளு, கடுகு பயறு, இவைகளை, நேத்திரமந்திரத்திலே விதைக்கவேண்டும். 53

பிறகு ஆசாரியனை பூஜித்து, இரு காளைகளையும், கலப்பையையும், தானியங்களையும் கொடுக்க வேண்டும்.

மூன்று 3 நாளில் முளைப்பது உத்தமமாகும். நான்கு 4 நாள் முளைப்பது மத்திமமாகும். ஐந்து 5 நாள் முளைப்பது அதமமாகும். (மூன்று 3 நாள்களில், விதைத்த விதைகளில் முளை கண்டால், அது உத்தமமான

---

1 த்ர்யஹாத் மாஸஸஸ்யலக்ஷயேத் । உதிவா வாஸரே யதः ।

1 [illegible] ॥

[illegible]
[illegible] ।
2 [illegible]
[illegible] ॥ ௫௮ ॥

[illegible] ।
[illegible] ॥

பூமியாகும் நான்கு 4 நாட்களில் முளை கண்டால் அது மத்திம பூமியாகும். ஐந்து 5 நாட்களில் முளை கண்டால், அது அதம பூமியாகும். என்பது பொருள்) எனவே அதம மான பூமியை விலக்கி விட வேண்டும்.

அபூபம் (அதிரஸம்) பழங்கள், பணியாரங்கள், கோக்ஷீரம் (பசும்பால்) இவைகளை (அந்த பூமிக்கு) நிவேதனம் செய்து வரவேண்டும். இவ்விதமாக, ஒரு 1 நாள் இரண்டு 2 நாள், அல்லது மூன்று 3 நாட்கள், அவ்விடத்தில் பூஜிக்க வேண்டும். இவ்விதமாக, பூபரீக்ஷாதந்திரத்தைச் செய்ய வேண்டும்.

பிறகு, அந்த பூமியின் மத்தியில், மண்மேடை செய்து கெட்டித்து, அதை ஸமதலமாகச் செய்து, அந்த மேடையை, கோமூத்திரத்துடன் கோமயத்தைக் கலந்து, மொழுகி, அதில், திக்பரிச்சேதத்தைச் செய்யவேண்டும். (திக்கை நிச்சயிக்க வேண்டும்.)

---

1 [illegible] ।

2 [illegible] ।

3 [illegible] ।

அத திக்பரிச்சேதநம் ॥

ஶங்கு: ஷோடஶமாத்ராயாம: நாஹஸ் தத்ஸ(ம)மோ பவேத் ।
அக்ரம் தாராஷ்டமாம்ஶேந ஹீநம் ஸ்யாத்(வி)ஶாலகம் ॥

ஸுவ்ருத்தம் காரயேச் சங்கும் ஸாரவ்ருக்ஷம் விஶேஷத: ।
ஶங்குத்விகுணமாநேந தந்(மத்)யே மண்டலம்
லிகேத் ॥ ௬௧ ॥

தந்மத்யே ஸ்தாபயேச் சங்கும் சதுர்திக்ஷு விஶேஷத: ।
பூர்வாபராஹ்ணயோஶ்சாயா யத்ர தத்ர விந்யஸேத்
(ரேத்) ॥ ௬௨ ॥

திக்பரிச்சேதனம்

(திக்கை நிச்சயம் செய்வதற்கு) சங்குவானது பதினாறு 16 அங்குலம் நீளமுள்ளதாக இருக்கவேண்டும். அதன் சுற்றளவானது, அதற்கு ஸமமாக (16 அங்குலம்) இருக்க வேண்டும். அதன் நுணியின் விசாலமானது, அடியின் விசாலத்தில் எட்டி 8ல் ஒரு 1 பாகம் குறைவாக இருக்க வேண்டும், 60

சங்குவை வட்டமாக இருக்கும்படி செய்து கொள்ள வேண்டும். சங்குவை செய்வதற்கான மரமானது, நல்ல அழுத்தமுள்ளதாக (உறுதியுள்ளதாக) இருக்க வேண்டும்.

சங்குவை வைக்க வேண்டிய இடத்தில், சங்குவின் அளவைப்போல் இரண்டு 2 பங்கு அளவுடையதாக மண்டலத்தை (வட்டத்தை) வரைந்து கொள்ளவேண்டும்.

அந்த வட்டத்தின் நடுவில், நான்கு பக்கங்களும் ஸமமாக இருக்கும்படி, சங்குவை வைக்க வேண்டும்.

முன்பகல், பின்பகல்களில், சங்குவின் நிழலானது

ச்சாயாக்ரமத்யம் ஸம்லக்ஷ்யம் ததைவ சாபராஹ்ணகே ।
பிந்துத்வயாந்தரம் ஸூத்ரம் பூர்வாபரதிசிஸ்திதே ॥

தயோர்பிந்த்வந்தரம் க்ராஹ்யா(ஹ்யம்)மத்ஸ்யாநாம் ந-
பார்ச்வயோ: ।
தக்ஷிணோத்தரம் ஸூத்ரம் த யெத்யே வ ஸாரயேத்॥

யே(யத்)மத்யமத்யமாயாம்(யாம்) து சாயாக்ரம்
வ்ரஜேத் ।
மண்டலம் குப்ஜதாமேந அம்சகம் து விபாஜயேத் ॥௬௫॥

வட்டத்தில் விழும் பொழுது, அந்த நிழலின் உச்சியின் நடுவைத் தெரிந்து கொண்டு, (அந்த விடத்தில் அடையாளம் செய்து கொள்ள வேண்டும்.) இவ்விதம், காலையிலும், மாலையிலும், புள்ளிகளை வைக்க வேண்டும். அந்த இரண்டு 2 புள்ளிகளின் மத்தியில் நூல் பிடித்துக் கோடிட்டுக் கொள்ள வேண்டும். இது, கிழக்கு திக்கு, மேற்கு திக்குகளை குறிப்பிடுகின்ற ஸூத்திரமாகும். 63

இந்த இரண்டு 2 புள்ளிகளின் இடைவெளியை (மத்தியத்தை) தெரிந்து கொள்ளவேண்டும், அது சபரத்தின் (மீனுடைய) தலையும் வாலுமாகும். (இரண்டு 2 பக்கங்களிலும், மத்தியில், இரண்டு 2 புள்ளிகளை வைத்துக் கொண்டு) இரண்டு 2 புள்ளிகளின் மத்தியில், முன்பு போலவே ஸூத்திரபாதம் செய்ய வேண்டும். இது தெற்கு திக்கு வடக்கு திக்குகளைக் குறிப்பிடும் ஸூத்திரமாகும். 64

சங்குவின் நிழலானது, மத்தியரேகையின் மத்தியத்தையடையும் பொழுது, அபச்சாயாங்குலத்தை யடையும். (அபச்சாயா—குறைக்க வேண்டிய நிழல்.) அப்பொழுது, அந்த மண்டலத்தை, குப்ஜ (குறைவான) காலத்தினால் அங்குல விபாகம் செய்ய வேண்டும். 65

‡ஸாநாஷ்டாவிம்ஶாம்ஶம் ஸப்தவிம்ஶாம்ஶயா
(உ)த்தரே |
மதே சவேஜவநத்வக்ஷா கந்யாயாம் ச ததைவ ஹி ||

[மதே தே ஜவநம் த்வக்ஷா, கந்யாயாம் ச ததைவ ஹி |]
மீநேஷ்டாவிம்ஶகம்ஶே ஹி பாதம் வ்ருத்த்யர்த்தகம் |
வர்த்தயேந்மிதுநே ஸப்தவிம்ஶகம்ஶாவஸாநகே || ௬௭ ||

ததோ வ்ருத்தி(க்ஷி)ஶாத்ரம் க்ஷீணம் ஸ்யாத் பாதம் வ்ருத்தி
விஶேஷத: |
கந்யாயாம் ஷாஷ்(வாஷ்ட)விம்ஶாம்ஶம்(ஶே) தஸாநாம்
(த்வயாம்)ஶம் விவர்த்தநாத் || ௬௮ ||

---

*சூரியன், மீனத்தில் இருபத்தெட்டு 28, இருபத்தேழு 27 அம்சம், வடக்கை அடையும் பொழுது, வேகமானது குறைகின்றது. கன்னியிலும் அவ்விதமேயாகும்.

மீனத்தில் இருபத்தெட்டாவது (மிதுனத்தில் 28 வது அம்சத்தையடையும்பொழுது) பாகமானது அரை ½ மாத்திரை (அங்குலம்) விதமாக, மிதுனத்தில் இருபத்தேழு அம்சம் முடியும் வரையில், விருத்தியடையும், பிறகு ஒவ்வொரு பாகமும் (மாக) விசேஷித்துக் குறைவடையும்.

கன்னியில், இருபத்தெட்டு 28 அம்சம் வரையில் சாயாம்சமானது, விருத்தியடையும். பிறகு, அவ்விதமே குறைவடையும். இவ்விதமாக, நிழலின் விருத்தியையும், குறைவையும் அறிந்து கொள்ளவேண்டும்.

---

‡ 66–70. ஶ்லோகாந்தரே ஸாம:, சதுஶ்ஶ்லோக:, சதுர்ஷ்டா-ம்ஶ:, சதுர்மாத்ராயாஶ்ச ஸவதி |

* இங்கு மூலம் பிழைகள் நிறைந்தது. விஷயமும் தெளிவாக இல்லை.

𑌛𑌾𑌯𑍋(𑌯𑌾)𑌷𑌡𑍍𑌵𑌿𑌂𑌶𑌦𑌂𑌶𑌾𑌂𑌶𑌂 𑌤𑌥𑌾 𑌹𑍍𑌰𑌾𑌸𑌂
𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌛𑌾𑌯𑌾𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌂 𑌕𑍍𑌷𑌯𑌂 𑌚𑍈𑌵 (𑌯𑌾𑌤𑌿)𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌂𑌶𑌂
𑌪𑌾(𑌕𑌾)𑌶𑍍𑌯𑌤𑍇 ॥ ௬௯ ॥

𑌛𑌾𑌯𑌾𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌯𑍋𑌰𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌪𑌰𑌾𑌹𑍍𑌣𑌯𑍋𑌃 𑌛𑌾𑌯𑌾𑌗𑍍𑌰𑌯𑍋𑌰𑌗𑍍𑌰𑌂 𑌚 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

𑌪𑍍𑌰𑌾𑌗𑌾𑌦𑌿𑌵𑌾𑌞𑍍𑌛𑌿𑌤𑌂(𑌤𑌃)𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑌨𑌂 𑌤𑌥𑌾
𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।
𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌹𑌂 𑌵𑌾𑌚𑌯𑍇𑌤𑍍 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦-
𑌖𑌾𑌤𑌨𑌮𑍍 ॥ ௭௧ ॥

𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌂 𑌸𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌚𑍈𑌕𑌾𑌶𑍀𑌤𑌿𑌪𑌦𑌂 𑌕𑌰𑌮𑍍 ।

கிருத்திகாம்சமானது, பூர்வமத்தியமாகும். அப்பொழுது சாயையின் மானமானது மத்தியில் செல்லும் அப்பொழுது, பிரம்ஹஸூத்திர பிரஸாரணம் செய்ய வேண்டும். 69½

பூர்வான்ஹம், அபரான்ஹத்தில், சாயையின் மத்தியின், மானமானது, (அளவானது) விலக்கப்பட்டிருக்கிறது.

(இவ்விதமாக திக்கு நிர்ணயம் செய்தபிறகு) வேண்டிய அளவை நிச்சயித்துக் கொண்டு, கிழக்கு முதலாக, சுற்றிலும், ஸூத்திரவிந்யாஸம் செய்யவேண்டும்.

பிறகு, புண்ணியாஹவாசனம் செய்ய வேண்டும். (புண்யாஹவாசன ஜலத்தினால், அந்த இடத்தை புரோக்ஷிக்க வேண்டும்.)

அதன் பிறகு, பிராஸாதத்தை ஆழமாகத் தோண்ட வேண்டும். (வீட்டுக்கு அஸ்திவாரம் போடுவதற்காக பூமியைத் தோண்ட வேண்டும்.)

தத்ர வாஸ்து தேவாம்ஶ்ச ஸம்பூஜயித்வா ஸமாஹித: || ௭௨ ||

க்ஷௌத்³ராஜ்யகு³ட³ஸம்மிஶ்ரம் தே³வாநாம் து ப³லிம் க்ஷிபேத் |
* ப்ரணவாதி³ம் ஸ்வநாம்நம் மத்⁴யே து ஸ்வாஹாந்தம் ப³லி-
தா³பயேத் || ௭௩ ||

வாஸ்துஹோமம் ததா² க்ருத்வா மத்⁴யே வா சோத்தரேऽபி வா |
வாஸ்துஹோமம் விநா க்ருத்வா தத்³வாஸ்து விநஶிஷ்யதி ||

பிராஸாதமானது (மாளிகையானது) விஸ்தாரமுள்ளதாக (அதிக அகல நீளமுள்ளதாக) இருந்தால், அதை எண்பத்தோறு 81 பதங்களாகச் செய்து கொள்ள வேண்டும். (பதம்—இடம்)

அந்த பதங்களில், வாஸ்து தேவதைகளைச் சுருக்கமாக பூஜிக்கவேண்டும். 72

அந்த வாஸ்து தேவதைகளுக்கு, தேன், நெய், வெல்லம், இவைகளைச்சேர்த்து, பலி கொடுக்கவேண்டும்.

பிரணவாதியாகவும், நாமாவை (பெயரை) மத்தியிலுடையதாகவும், ஸ்வாஹாந்தமுமான மந்திரத்தினுலே பலி கொடுக்க வேண்டும். 73

அங்கு, மத்தியிலோ, வடக்குப்பக்கத்திலோ, அவ்விதமே (அந்த மந்திரத்தினுலேயே,) வாஸ்து ஹோமம் செய்யவேண்டும்.

வாஸ்து ஹோமம் செய்யாவிட்டால், அந்த வாஸ்துவானது நாசமடையும். 74

---

* ப்ரணவாத்³யம் நாமமத்⁴யம், இதி வா பாட²: ஶோப⁴நீய: |

𑌪𑌰𑍍𑌯𑌗𑍍𑌨𑌿𑌕𑌰𑌣𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌯𑍇𑌚𑍍𑌚

𑌪𑌞𑍍𑌚𑌗𑌵𑍍𑌯𑌕𑍈𑌃 ।

𑌕𑌰𑍍𑌷𑌣𑌂 𑌹𑍋𑌮𑌵𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌶𑍃𑌣𑍍𑌵𑌾𑌷𑍍𑌟𑌕-

𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌕𑌮𑍍 ॥ ௭௫ ॥

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑌿𑌲𑍍𑌪𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌕𑌰𑍍𑌷𑌣𑌪𑌟𑌲𑌃 ॥

வாஸ்து ஹோமம் செய்து, பர்யக்நிகரணம் செய்து, (பர்யக்நிகரணம் — வாஸ்து ஹோமம் செய்த அக்நியை மனையைச் சுற்றிலும் இழுத்து வருவது) பிறகு, பஞ்சகவ்வியத்தினுலே புரோக்ஷிக்க வேண்டும். (பஞ்சகவ்வியத்தைத் தெளிக்க வேண்டும்)

இவ்விதமாக, கர்ஷணமானது கூறப்பட்டிருக்கிறது. இனி, அஷ்ட 8 வாஸ்துவைக் கூறுகிறேன். கேட்பாயாக

காசியபீய சில்ப சாஸ்திரத்தில் கர்ஷண விதி என்னும் முதலாவது படலம் முற்றும்.

அத த்விதீய: படல: ||

ப்ராஸாதவாஸ்துலக்ஷணம் ||

அத வக்ஷ்யே விசேஷேண ப்ராஸாதம் வாஸ்துலக்ஷணம் |
ப்ராஸாதஸ்ய விசாலம் து நவபாகவிபாஜிதம் || 1 ||

ப்ராகக்ரதசஸூத்ரம் ஸ்யாத் உதகக்ரம் ததைவ ஹி |
ஜாதஞ்ச நவநவாம்சம் து ப்ரஹ்மா மத்யே நவாம்சகே || 2 ||

1 ஸவித்ரீ சைவபூஷாதே து விவஸ்வாந் தக்ஷிணே ததா |
மித்ர: பஸ்சிமபாகே து ஸௌம்யாக்ஷே ப்ருதிவீதர: || 3 ||

இரண்டாவது படலம்

பிராஸாத வாஸ்து லக்ஷணம்.

இனி, விசேஷித்து, பிராஸாத வாஸ்து லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

பிராஸாதத்தின் விசாலத்தை (அகலம் நீளங்களை) ஒன்பது 9 பாகங்களாகச் செய்து கொள்ளவேண்டும். 1

(வாஸ்துவிற்காக அளந்தெடுக்கப்பட்ட பூமியில்,) கிழக்கு நுணியாக பத்து 10 ஸூத்திரங்களும், வடக்கு நுணியாக பத்து 10 கோடுகளும் வரைந்து கொள்ள வேண்டும். அப்பொழுது, அது நவநவாம்சமாகும். (கிழக்கு மேற்கில் ஒன்பது 9 பாகங்களும் தெற்கு வடக்கில் ஒன்பது 9 பாகங்களுமுடையதாகும். எனவே, 9 × 9 — 81 பதங்களுடையதாகும். இதற்கு நவநவாம்சம் என்று பெயர்.)

இந்த நவ நவாம்சத்தில், நடுவிலுள்ள ஒன்பது பதங்களுக்கு, பிரம்ஹதேவன், அதிபதியாவார். 2

---

1 ஸூர்யக:, உக்தி யஸதே |

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 [1] 𑌷𑌟𑍍
𑌪𑌦𑌭𑌾𑌗𑌿𑌨𑌃 ।
𑌆𑌪𑌶𑍍𑌚𑍈𑌵𑌾𑌪𑌵𑌤𑍍𑌸𑌶𑍍𑌚 𑌐𑌶𑌾𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑌿 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ॥

𑌸𑌵𑌿𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑌃 𑌆𑌗𑍍𑌨𑍇𑌯𑍍𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ।
𑌇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌜(𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌜)𑌯𑌶𑍍𑌚𑍈𑌵 𑌨𑍈𑌋𑌤𑍍𑌯𑌾𑌂
𑌦𑌿𑌶𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ॥ ௫ ॥

𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌜𑌯𑌶𑍍𑌚𑍈𑌵 𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌾𑌂 𑌦𑌿𑌶𑌿 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 ।
𑌏𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌪𑌦𑌭𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑌃 𑌸𑌂𑌶𑌯𑌦𑍍𑌵𑌯𑌂 𑌤𑌥𑌾 ॥ ௬ ॥

𑌐𑌶𑌾𑌨𑍍𑌯𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑍋 𑌜𑌯𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌃 ।

(பிரம்ஹஸ்தானத்தைச் சுற்றி இருக்கின்ற பதினறு 16 பதங்களில்) கிழக்கில் ஸமரியும் (ஆர்யகனும்) தென் திசையில் விவஸ்வானும், மேற்கு திக்கில் மித்திரனும், வடக்கு திக்கில் பிருதிவீதரனும், பிரம்ஹாவை நோக்கி இருக்கின்றார்கள். இவர்கள் ஆறு 6 பதங்களை (நான்கு 4, நான்கு 4 பதங்களை) அனுபவிப்பவர்களாவார்கள். 3½

(அதைச்சுற்றியுள்ள 7 × 7 = 49 பதங்களுள்) ஆபன், ஆபவத்ஸன், இவ்விருவரும ஈசான திக்கில் இருக்கிறார்கள். ஸவித்திரன், ஸாவித்திரன், இருவரும் அக்கினி திக்கிலிருக்கிறார்கள். இந்திரன், இந்திராதயன் (இந்திரஜயன்) இருவரும், நிருருதிதிக்கில் இருக்கிறார்கள். ருத்திரன், ருத்திரஜயன், இருவரும், வாயு திக்கிலிருக்கிறார்கள். இவர்கள், இரண்டு 2 பதங்களையுடையவர்களாவார்கள். இவர்களுடைய ஸ்தானமானது, ஒரு அம்சத்தை (பதத்தை) இரண்டு 2 பங்குகளாகச் செய்யப்பட்டதாகும். 6

(அதற்கு வெளியில் சுற்றியுள்ள முப்பத்திரண்டு 32

---

1 𑌪𑌦𑌪𑌦𑌾𑌯𑌿𑌨𑌃 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑍋 𑌯𑌾𑌤𑍁𑌕𑌃 ।

ஆதித்யஸ் ஸத்யகஶ்சைவ ப்ருஶ(ப்ருஶ)ஶ்சைவா-
ந்தரிக்ஷக: ॥ ௭ ॥

அக்நி: பூஷா ச விததோ(விதத:) ராக்ஷஸஸ்து யமஸ்ததா ।
கந்தர்வோ ப்ருங்கராஜஶ்ச ம்ருஷஶ்சைவ து தக்ஷிணே ॥

நிர்ருதிர் தௌவாரிகஶ்சைவ ஸுக்ரீவ: புஷ்பதந்தக: ।
[1]வருணோऽஶேஷரோகாஶ்ச பாபக்ஷயவிபுஸ்ததா ॥ ௰ ॥

வாயுர்நாகமுக்யஶ்ச பல்லாட: ஸோமஏவ ச ।
[2]ருகாதிதிஶ்சைவ பர்ஜந்யஶ்சைகாம்ஶஶோபித: ॥

பத(கு)வீதா(பதகீ வ)விதாநீ ச பராஶ்ரிதா
பாவாராக்ஷவீ ।

பதங்களில்) ஈசான திக்கில், (திக்கிலிருந்து, முறையே, வலமாக) பர்ஜந்யன் 1, ஜயந்தன் 2, மஹேந்திரன் 3, ஆதித்யன் 4, ஸத்தியகன் 5, பிரமன் 6, (பிருசன்) அந்தரிக்ஷன் 7, அக்னி 8 (இவர்கள் கிழக்கிலும்) பூஷா 9, விததன் 10, ராக்ஷஸன் 11, யமன் 12 கந்தர்வன் 13, பிருங்கராஜன் 14, மிருஷன் 15, நிருருதி 16, இவர்கள் தெற்கு திக்கிலும், தௌவாரிகன் 17, ஸுக்ரீவன் 18, புஷ்பதந்தன் 19, வருணன் 20, அசேஷன் 21, ரோகன் 22, பாபக்ஷயன் 28, (அஸுரன் 21, சேஷன் 22, ரோகன் 23,) வாயு 24, இவர்கள் மேற்கு திக்கிலும், நாகன் 25, முக்கியன் 26, பல்லாடன் 27, ஸோமன் 28, ருக்கு 29, ஆதிதி 30, அதிதி 31, (மிருகன் 29, ஆதிதி 30, அதிதி 31 ஈசானன், 32,) இவர்கள், வடக்கு திக்கிலும், ஒவ்வொரு பதங்களுக்கு அதிபதிகளாவர்கள். 10

---

1 வருணோயாஸுரஶ்சைவ ஶோஷோ ரோகஸ்ததைவ ச । இதி பாட: ஶோதநீய: ॥

2 ம்ருகாதித்யதிதீஶாநா:, இதி பாட: ஶோதநீய: ॥

𑌚𑌰𑌕𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌕𑍋𑌣𑍇𑌷𑍁 𑌬𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑍁(𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌃)
𑌪𑌦𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 ॥ ௪௧ ॥

𑌏𑌤𑌾𑌶𑍍𑌚𑍈𑌕𑍋𑌨𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌦𑍍 𑌦𑍇𑌵𑌤𑌾𑌃 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ।
𑌵𑌿𑌂𑌶𑌦𑍍𑌰𑌜𑍍𑌜𑍁𑌭𑌿𑌰𑍍𑌦𑍃𑌢𑍈𑌸𑍍𑌤𑍇 𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵
𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌨𑍍𑌯𑌧𑍁𑌃 ॥ ௪௨ ॥

𑌅𑌧𑍋𑌮𑍁𑌖𑌂 𑌶𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 (𑌶𑌾𑌯𑌯𑌿𑌤𑍍𑌵𑌾) * 𑌨𑌾𑌸𑌾𑌨𑌿𑌲
𑌵𑌿𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌤𑌯𑌾 𑌦𑍇𑌵(𑌤𑌥𑌾𑌦𑍇𑌵𑌾𑌃)𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌤𑌂
𑌶𑌾𑌯𑌯𑍇𑌤𑍍(𑌯𑌨𑍍)𑌕𑌥𑌂 ॥ ௪௩ ॥

𑌦𑍇𑌵𑌾𑌸𑍁𑌰𑌮𑌹𑌾𑌯𑍁𑌦𑍍𑌧𑌂 𑌵𑌰𑍍𑌜𑌯𑌨𑍍𑌤𑍁 𑌯𑌥𑌾 𑌤𑌥𑌾 ।
𑌅𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌂 𑌹𑌿𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂(𑌯𑌂)𑌉𑌗𑍍𑌰𑌃
𑌕𑌶𑍍𑌯𑌪𑌾𑌰𑍍𑌹𑌂 𑌤𑌤𑌃(𑌮𑌹𑌾𑌤𑌪𑌾𑌃) ॥ ௪௪ ॥

சரகீ 1, விதாரீ 2, பூதனை 3, பாபராக்ஷஸீ 4, இவர்கள் கீழே கூறப்பட்ட பதங்களுக்கு வெளியில், ஈசானியம் முதலிய கோணங்களில் இருப்பவர்கள் ஆவார்கள், இவர்களுக்கு பதங்கள் கிடையாது. 11

இவ்விதமாக நாற்பத்தொன்பது 49 தேவதைகள் கூறப்பட்டிருக்கின்றன.

தேவர்கள் யாவரும், வாஸ்து புருஷனை, இருபது 20 கயிறுகளினாலே கட்டி, அவனை தலைகுப்புற பூமியை நோக்கி, படுக்கையாகத் தள்ளி, மூச்சு விடமுடியாமல் மூக்கையும் பற்றி, (அவன் மேலே) நின்றார்கள்.

தேவர்கள் வாஸ்து மூர்த்தியை எவ்விதமாகக்கட்டி குப்புறத் தள்ளினார்கள். தேவாஸுர யுத்தம் நடக்காமலிருக்கும்படி எப்படிச் செய்தார்கள். மஹாதபஸ்வியான

---

* 𑌨𑌾𑌸𑌾𑌂 𑌵𑌿𑌧𑌾𑌯 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 । 𑌇𑌤𑌿 𑌵𑌾 𑌪𑌾𑌠𑌃 𑌶𑍋𑌧𑌨𑍀𑌯𑌃 ॥

𑌅𑌸𑍁𑌰𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌤𑌾 𑌸𑌂𑌹𑌾𑌰𑌕𑌾(𑌯) 𑌦𑍇𑌵𑍈𑌰𑍍𑌯𑍁𑌦𑍍𑌧𑌂
𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ‖ ௰௫ ‖

𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌾𑌯𑍁𑌧𑍈𑌰𑍍𑌦𑍇𑌵𑍈𑌃 𑌵𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌤𑍁
(𑌵𑌧𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂) 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌾𑌸𑍍𑌤𑌦𑌾 𑌭𑍂𑌤𑌂 𑌪𑌾𑌤𑌯𑍇𑌯𑍁𑌰𑌧𑍋𑌮𑍁𑌖𑌮𑍍 ‖

𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌪𑌾𑌶𑍈𑌸𑍍𑌤𑍁 𑌤𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯
𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ।
𑌸 𑌏𑌵 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑌥𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ‖

𑌤𑌦𑍍𑌭𑍂𑌤(𑌸 𑌏𑌵𑌾)𑌧𑍋𑌮𑍁𑌖𑍋 𑌹𑍀𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂
𑌦𑍁𑌃𑌖𑌕𑌾𑌰𑌕𑌃 ।
𑌯𑌤𑍍𑌰(𑌤𑍍𑌰)𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌨𑌿 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁-
𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌵𑌤𑍍 ‖ ௰௮ ‖

அந்த உக்கிரனல்லவா அஸுரர்களின் அந்தக்காரியத்தைச் செய்து வந்தான். தேவர்களுடன் போர் புரியும்படி, அஸுரர்களை, அவனல்லவா தூண்டினான். 15

ஸகல தேவர்களினாலேயும், ஸகல ஆயுதங்களினாலேயும், அவனை வதைக்க முடியவில்லை. ஆகையால், தேவர்கள் யாவரும் (ஒன்று கூடி) அந்த பூதத்தை, இருபது 20 கயிறுகளினாலே கட்டி, அதோமுகமாகத்தள்ளி, (எழுந்திருக்க முடியாமல், அவனைப்பிடித்து) தடுத்துக்கொண்டிருந்தார்கள். அவ்விதம் செய்யப்பட்டவனே, வாஸ்து புருஷனாவான். அவனே, வாஸ்துமூர்த்தி என்று கூறப்படுகிறான்.

பலஹீனனான அவன் அதோமுகமாக இருந்து கொண்டு, எல்லோருக்கும், துன்பத்தை விளைவித்து வருகிறான். அந்த வாஸ்துவில் வைக்கப்பட்ட பொருள்கள் யாவும், வாஸ்து மூர்த்தியை போலவே ஆகி விடுகின்றன.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌯(𑌸𑍍𑌯𑍈𑌵)𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍋𑌷-𑌨𑌿𑌵𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 |
𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌕𑌰𑌂 𑌚𑌂 𑌚(𑌚𑍈𑌵𑌾𑌸𑍍𑌯)𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌹𑍋𑌮𑌂 𑌬𑌲𑌿𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ||௧௯||

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌤𑍃𑌪𑍍𑌤𑌿(𑌪𑍍𑌤𑍍𑌯𑍈) 𑌹𑍋𑌮𑌂 𑌬𑌲𑌿𑌂 𑌹𑌰(𑌚𑌰𑍇𑌤𑍍) |
*𑌤𑌾𑌸𑌾𑌂 𑌤𑍃𑌪𑍍𑌤𑌿𑌕𑍃𑌤𑌂 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌵𑌾𑌸𑍍𑌤𑍋𑌷𑌾 𑌯𑌾𑌤𑌿 𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ||௨௰||

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿(𑌦𑍀)𑌨𑌾𑌂 𑌬𑌲𑌿𑌂 |
𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌹𑍋𑌮𑌸𑍍𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌨𑌾𑌮𑌤𑌃 ||

ஆகவே, அதை விலக்குவதற்காக (துன்பங்களில்லாமல் செய்வதற்காக) அந்த வாஸ்து புருஷனை, எடுத்துக்கொள்ளவேண்டும். (அவ்விதம் செய்தால்) ஸகலவிதமான துன்பங்களும் விலகிவிடும். ஸகலவிதமான ஸித்திகளையுமளிக்கும். (எனவே, அந்தவாஸ்துவில்) வாஸ்து ஹோமத்தையும், வாஸ்து பலியையும் செய்யவேண்டும். 19

கீழே கூறப்பட்டிருக்கிற பிரம்ஹா முதலான நாற்பத்தொன்பது 49 தேவதைகளை திருப்தியடையச் செய்வதற்காக, வாஸ்து ஹோமமும், வாஸ்து பலியும் செய்யவேண்டும். அவர்களை திருப்தியடையும்படி செய்தால் வாஸ்து புருஷன் நாசமடைவான். (வாஸ்து புருஷனால் துன்பம் உண்டாகாது என்பது பொருள்.) 20

ஆகையால், ஸகலவிதமான முயற்சிகளினாலேயும், பிரம்ஹாதி தேவதைகளுக்கு பலிஹரணம் செய்யவேண்டும். பிரம்ஹாதி தேவர்களுக்கு, அவரவர்களின் பெயரினாலே, (பலிஹரணம் செய்யவேண்டும்.) வாஸ்து ஹோமம் செய்யவேண்டும். 21

* 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍃𑌪𑍍𑌤𑍌 𑌕𑍃𑌤𑍇, 𑌇𑌤𑌿 𑌵𑌾 𑌪𑌾𑌠𑌃 𑌸𑌾𑌧𑍀𑌯𑌃 ||

ஐஶான்யாம் து ஶிரோ ந்யஸ்ய பாதௌ நைர்ருதி
கோசரே ।
ஸ்தேயம் வாயவ்யாக்நேயே கூர்பரௌ ஜாநுஶாயிநௌ ॥

[ஐஶான்யாம் து ஶிரஸ்தஸ்ய பாதௌ நைர்ருதி-
கோசரே ।
ஸ்தேயஸ்யாம் வாயவ்யாக்நேயே கரபாதௌ து ஶாயிதௌ ॥]

உபரிஷ்டேவ(ஸ)ஸ்திதா தேவாஃ ஶரீரே(ண)
ஶிரஸி ஸ்திதஃ ।
நேத்ரஸ்தாநே(ந து) பர்ஜந்யோ ஜயந்தாதிதீ
கர்ணயோஃ ॥

ஆபஃ ஸ்தநாதிகாஷ்டே(காஷ்டே) து ஆபவத்ஸஸ்
(த்ஸ)ஸ்ததைவ ச ।
நாபிஸூத்ரோபரி(த்ரோபரி) ப்ரஹ்மா பீஜாலிங்க-
ஜயந்தீ(பீஜயோர்லிங்க ஸம்ஸ்திதஃ) ॥ ௨௪ ॥

லிங்கே இந்த்ரஜயஶ்சைவ பாதயோ நிர்ருதி(ரு)ஸ்திதிஃ ।
ஸமீர் ப்ருதிவீசைவ ஸ்தநஸ்யோபரிஸ்திதௌ(தே) ।

அவனுடைய (வாஸ்து புருஷனுடைய) சிரமானது ஈசானதிக்கிலும், கால், நிருருதிதிக்கிலுமிருக்கிறது மற்றிருகையும் பாதமும், அக்கினிதிக்கிலும், வாயுதிக்கிலுமிருப்பதாகும். தேவர்கள், வாஸ்து மூர்த்தியினுடைய சரீரத்தின் மேலே இருக்கிருர்கள். அவனுடைய சிரஸ்ஸில் ஈசானன் இருக்கிருர். நேத்திரஸ்தானத்தில் பர்ஜனியன் இருக்கிருர். காதுகளில் ஜயந்தன், ஆதிதி, இவர்கள் இருக்கிருர்கள். ஆபன், ஆபவத்ஸன், இருவரும் பிடரியின் மேலே இருக்கிருர்கள். நாபி ஸூத்திரத்திற்குமேலே பிரஹ்மா இருக்கிருர். பீஜங்களில் இந்திரன் இருப்பதாகக்கூறப்பட்டிருக்கிறது. லிங்கத்தில் இந்திரஜயன் இருக்கிருர். பாதங்களில் நைருருதி இருக்கிருர். ஸமீரி, பிருதிவீ, இவ்விருவரும், ஸ்தன

விவஸ்வாந் மித்ரகௌ குக்ஷிபார்ஶ்வோர்த்வமீரிதௌ ।
ஹஸ்தே(தக்ஷ)மத்யே தலம்(லே) சைவ ஸாவித்ரம்
(ஸவிந்த்ரம்) து ப்ரகல்பயேத் ॥ ௨௬ ॥

மணி(தஃ)பந்தே கோஷ்ட(ஸ்ய) மத்யே து ஸாவித்ரம்
(இந்த்ரம்) து ந்யாஸயேத் ।
ருத்ரம் ருத்ரஜயம் சைவ வாமபார்ஶ்வே து
பூர்வவத் ॥ ௨௭ ॥

மஹேந்த்ராத்ய(இந்த்ராத்ய)ந்தரிக்ஷாந்தாஃ ஸர்வா
(பூர்வஸ்யாம்) பூமி ஸம்ஸ்திதாஃ ।
தஜ்ஜாநுகூர்பரே வித்யாத் அக்நிமூர்த்திம் ந்யாஸயேத் ॥

பூஷா(ஷா)திம் ம்ருக(ம்ருஷ)பர்யந்தம் ஜங்காயா
தக்ஷிணே ந்யஸேத் ।
தௌவாரிகாதிபாபக்ஷ்மாந்தம் ஜங்காயா தக்ஷிணே ந்யஸேத் ॥

ஸூத்திரத்திற்கு மேலே இருக்கிறார்கள். விவஸ்வான், மித்திரன், இருவரும் வயிற்றுப்பக்கத்திற்குமேலே இருக்கிறார்கள். வலது கையிலும், அதன் உள்ளங்கையிலும், ஸவிந்திரனை வைக்க வேண்டும். அந்த வலக்கை மணிக்கட்டின் நடுவில், ஸாவிந்திரனை வைக்கவேண்டும். ருத்திரன், ருத்திரஜயன், இவர்களை, முன்புபோலவே இடதுபக்கத்தில் வைக்கவேண்டும். 27

மஹேந்திரன் முதல், அந்தரிக்ஷன் வரையிலுள்ள தேவதைகள், கிழக்குதிக்கில் பூமியிலிருக்கிறார்கள். அந்த வாஸ்து புருஷனுடைய முழங்கால், முழங்கைகளில் அக்கினி மூர்த்தியை வைக்க (பிரதிஷ்டை செய்ய) வேண்டும்.

பூஷா முதல், மிருஷன் வரையில், வாஸ்துவின் வலது (தெற்கு) பக்கத்தில் முழங்கால் வரையில் வைக்கவேண்டும்.

தௌவாரிகாதிரோகாந்தம் ஜங்காய:பஸ்சிமே ந்யஸேத் ।
வாமகூர்பரஜாந்வோஸ்து வாயுமூர்த்திம் ந்யாஸயேத் ।
நாகாதிமஜ(த்யதி)பர்யந்தம் வாமபார்ஸ்வே து

ஸம்ஸ்திதா: ॥ கய ॥

சரகீ(ப்ர)ப்ருதயஸ்தஸ்ய கர்ணகர்ணஸூத்ராக்ரகா

ஸ்திதா (கா: ஸ்திதா:) ।

ஸேதே ஹ்யதோமுகோ வாஸ்து மூர்த்திரேவ(வம்)

த்விஜோத்தமா: ॥ கக ॥

ப்ராக்வதேவ பலிம் தத்வா வாஸ்து ஸங்கல்பயேத் த்விஜா: ।

மேற்குதிக்கில், முழங்காலுக்குக் கீழே, தௌவாரிகன் முதல், ரோகன் வரையில் கூறப்பட்டிருப்பவர்களை வைக்க வேண்டும்.

இடது முழங்கை, முழங்கால், இவைகளில் வாயு மூர்த்தியை வைக்க வேண்டும். வாஸ்து புருஷனுடைய இடது பக்கத்தில் நாகன் முதல் அதிதிவரையில் கூறப் பட்டிருக்கிற தேவதைகள் இருக்கிறார்கள். 30

சரகீ முதலிய (நான்கு 4) தேவதைகளும் நான்கு 4 கர்ணங்களிலும் (கர்ணம் மூலை, ஈசானம் முதலிய விதிக்கு) கர்ணஸூத்திரத்தின் நுணியிலிருப்பவர்களாவார்கள்.

ஹே அந்தணர்களே! வாஸ்து மூர்த்தியானவன் இவ்விதமாக, அதோமுகமாக (கீழே பார்த்துக்கொண்டு குப்புற) படுத்திருக்கிறான். (அவனுடைய, அங்கங்களிலும், அவனைச்சுற்றிலும், தேவர்களிருக்கிறார்கள். தேவர்களிருப்ப தாகக்கொள்ளவேண்டும்) 31

பிராம்ஹணர்களே! முன்பு போலவே வாஸ்து பலியை

ப்ராஸாதவாஸ்த்வேவம் ஹி வாஸ்துஹோமம் தத: பரம் ॥

இதி காச்யபசில்பே த்விதீய: ப்ராஸாதவாஸ்துபடல: ॥

செய்ய வேண்டும். பிறகு பிராஸாத வாஸ்து ஹோமம் செய்வதற்கு ஸங்கல்பம் செய்ய வேண்டும். இவ்விதமாக பிராஸாத வாஸ்துஹோமவிதியானது கூறப்பட்டிருக்கிறது

'காசியப சில்பத்தில்' பிராஸாத வாஸ்து'வென்னும்
இரண்டாவது படலம் முற்றும்.

—o—

அத த்ருதீய: படல: ||

க்ருஹே வாஸ்த்வி(ஷ்டே)ஷ்டகாயாம் லிங்க
ஸ்தாபனகே (ந) ததா |
ஸகலஸ்தாபனே சைவ ஸம்ப்ரோக்ஷே ததைவ ச ||

பாணலிங்கப்ரதிஷ்டாயாம் மண்டபே ந்ருத்தரங்ககே |
ஸபாயாம் யாகசாலாயாம் வாஸ்துஹோமம் ஸமாசரேத் ||

ஆசார்யலக்ஷணோபேத: ஸ்தாபகோ
ஹோமமாசரேத் |
ஸமீபே ப்ராக்ப்ரதேசே வா ஸௌம்யே வா ப்ரஹ்மகே
(ப்ரஹ்மண:) பதே || ௩ ||

ஸ்தண்டிலம் ஸிகதை: குர்யாத் ஹஸ்தமாத்ரப்ரவிஸ்தரம் |
உத்ஸேதம் த்வ்யங்குலம் ஜ்ஞேயம் சதுரச்ரம் ஸமம் சரேத் ||௪||

மூன்றுவது படலம்

வீட்டில் ஆதியேஷ்டகை (முதலாவது கல்) வைக்கும் பொழுதும், லிங்கஸ்தாபன காலத்திலும், சகலமூர்திஸ்தாபன காலந்திலும், சம்புரோக்ஷணம் செய்யும் பொழுதும், பாண லிங்கத்தை பிரதிஷ்டை செய்யும் பொழுதும், மண்டபத்திலும், நிருத்தரங்கத்திலும், ஸபையிலும், யாகசாலையிலும், வாஸ்து ஹோமம் செய்ய வேண்டும். 2

லக்ஷணத்துடன் கூடிய ஆசாரியன், ஹோமம் செய்ய வேண்டும்.

ஸமரிக்கு? கிழக்கிலோ, வடக்கிலோ, பிரம்ஹ பதத்திலோ, ஒரு 1 முழம் அகலம் நீளத்திற்கு, மணலால் மேடை செய்யவேண்டும். அதன் உயரமானது, இரண்டு2 அங்குலம் இருக்கவேண்டும். சமசதுரச்ரமாகவும் இருக்க வேண்டும். 4

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௫ ॥

[illegible]
[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௭ ॥

[illegible]
[illegible] ।

ஹேபிராம்ஹஸ்ரேஷ்டர்களே! அந்த மேடைக்குக் கிழக்கு திக்கில், சம்பா நெல்லைப்பரப்பி, அதன் மேல் ஜல கும்பத்தை வைக்க வேண்டும். குடும்பத்தில் (உள்ளேயும் மேலேயும்) ஸ்வர்ணத்தை வைத்து, கந்தோதகத்தை அதில் விட்டு, மாவிலை, கூர்சம், முதலியவைகளினாலே கும்பத்தை அலங்காரம் செய்ய வேண்டும். பிறகு அந்த கலசதீர்த்தத்தில், பிரம்ஹாதி ஸகலதேவதைகளையும் (ஆவாஹனம் செய்து) சந்தணம், புஷ்பம், முதலியவை களினால் பூஜை செய்யவேண்டும். 6

அக்கினியாதாநம் முதலாகக்கூறப்பட்டிருக்கிற அக்னி காரியத்தைச் செய்யவேண்டும், பிறகு, பிரம்ஹாமுதலிய வாஸ்து தேவதைகளை அக்னியில் ஆவாஹனம் செய்ய வேண்டும்.

அவர்களை, அவரவர்களின் நாமாக்களினாலே பூஜை செய்யவேண்டும்.

[1] ப்ரணவாதி நாம (நமோந்தம்) து ஸ்வாஹாந்தம்
ஹோமயேத் க்ரமாத் || அ ||

[2] ஸமிதன்னாஜ்ய ஹவிஷா ஹோமயேத் ப்ருதக் ப்ருதக்
ஹோமயேத் க்ரமாத் |
ஶதமேகம் ததர்த்தம் வா ஹோமயேத் பாதமேவ வா ||

ஆஜ்யேனைவ பாயஸேன சருணா ப்ரத்யேகம் து ஶதாஹுதீ: |
ஜயாபிஹோத்ராதானம் ச ராஷ்ட்ர ப்ருத்ஸு கூஷ்மாண்ட ஹோமகம் ||

ஸ்விஷ்டாஹுதிம் ச கூஷ்மாண்டம் ப்ராயஶ்சித்தாஹுதிம் சரேத் |
ஹவ்யவாஹேதி ஸம்ஜ்ஞேன ஸ்விஷ்டக்ருதி ஹோமயேத் ||

பிறகு, பிரணவாதியும் நமோந்தமுமான நாமாக்களினாலே ஹோமம் செய்யவேண்டும். 8

ஸமித்து, அன்னம், ஆஜ்யம், இவைகளினால் (பிரம்ஹா முதலிய தேவர்களுக்கு) தனித்தனியே ஹோமம் செய்ய வேண்டும்.

கோகிருதம், (பசுநெய்) பாயஸம், சரு (அன்னம்) இந்த திரவியங்களினாலே, ஒவ்வொரு தேவதைகளுக்கும், தனித்தனியே, நூறு 100 தடவை ஹோமம் செய்ய வேண்டும். அல்லது, ஐம்பது 50 தடவை, அல்லது இருபத்தைந்து 25 தடவை ஹோமம் செய்யவேண்டும்.

ஜயாதிஹோமம், அப்பியாதான ஹோமம், ராஷ்டிரப்ருத் ஹோமம், ஸ்விஷ்டாஹுதி, கூஷ்மாண்டஹோமம் இவைகளை கிரமமாகச் செய்துவிட்டு, பிறகு பிராயச்சித்தாஹுதியை செய்யவேண்டும். அதன் பிறகு ஹவ்யவாஹம் என்ற

---

1 ப்ரணவாத்யம் ஸ்வஸ்வநாம, இதி வா பாட: |

2 ஸமிதாஜ்யான்னைஶ்ச இதி, ப்ரணவாதீனாம் து ஷஷ்ட்யந்தம் இதி வா பாட: ||

[illegible] |
[illegible] ||

‡ [illegible] |
* [illegible]
[illegible] || ௰௩ ||

[illegible] |
[illegible] ||

[illegible]
[illegible] |

மந்திரத்தினுலே பிராயச்சித்தாஹுதியை செய்ய வேண்டும். பிறகு, யதஸ்ய என்ற மந்திரத்தினுலே கிருதாஹுதி செய்ய வேண்டும். பிறகு, பிராஸாத மந்திரத்தினுலே பரிஷேசனம் செய்யவேண்டும். 12

அதற்குப்பிறகு, பரிஸ்தரணத்தை எடுத்து வடக்கு திக்கில் போட்டுவிட்டு, ஆஜ்யபாத்திரத்தையும் வடக்குப் பக்கத்தில் வைக்கவேண்டும். அதன்பிறகு, பிரம்ஹாவுக்கு வரம் தக்ஷிணை கொடுத்துவிட்டு, ஸூரியனை தரிசனம் செய்யவேண்டும். 13

பிறகு, பிரணீதையின் ஜலத்தினுலே (ப்ரணீதாபாத்திரத்திலுள்ள ஜலத்தினுலே) பாவமான மந்திரத்தினுலே தன்னை புரோக்ஷித்துக்கொள்ளவேண்டும்.

இவ்விதமாக ஹோமத்தை முடித்துவிட்டு, நமஸ்காரம் செய்து அபராத க்ஷமாபணம் செய்யவேண்டும். 14

‡ [illegible] |
[illegible] ||

* [illegible] |
[illegible] ||

ததக்னௌ தீபயித்வா து தயா ப்ராஸாதமண்டபே ||கரு||

ப்ராகாரே கோபுரஸ்தானே பர்யக்னிகரணம் சரேத் |
பாஹ்யே (பாஹ்யே) ததக்னிம் ஸந்த்யஜ்ய *விஸ்ருஜேத் து
ஜலேந பாய: ||கசு||

ஸர்வத்ர ப்ரோக்ஷயேச்சாத்ர சுசீவோ ஹவ்யமந்த்ரத: |
வாஸ்து(வாஸ்து)தேவோத்ஸாரணார்த்தம் து பர்யக்னிகரணம்
சரேத் || கஎ ||

வாஸ்துஹோம: ஸமாக்யாத: ப்ரதமேஷ்டகாவிதிம்
ச்ருணு ||கஅ||

இதி காச்யபசில்பே வாஸ்துஹோமவிதிர்நாம த்ருதீய: படல: |

பிறகு, தர்பம், பலாசபத்ரம் (புரச இலை) காய்ந்த இலை (ஓலை) இவைகளைச்சேர்த்துக்கட்ட வேண்டும்.

அதை, அந்த அக்னியில் கொளுத்தி பிராஸாதம், மண்டபம், பிராகாரம், கோபுரஸ்தானம், இவைகளில் பர்யக்னிகரணம் செய்யவேண்டும். (பர்யக்னிகரணம் தீப்பந்தத்தை சுற்றிலும் இழுத்துச் செல்வது) பிறகு, அந்த அக்னியை, வெளியில் விஸர்ஜனம் செய்து விட்டு, (முன்பு பிரதிஷ்டை செய்யப்பட்ட) கும்பஜலத்தினாலே, சுசீவோ என்ற மந்திரத்தினாலே, எங்கும் ப்ரோக்ஷணம் செய்ய வேண்டும்.

அவ்விடத்தை விட்டு வாஸ்து புருஷனை வெளிப்படுத்துவதற்காக, பர்யக்னிகரணம் செய்யவேண்டும். 17

இவ்விதமாக வாஸ்து ஹோமம் கூறப்பட்டிருக்கிறது. இனி, ஆத்யேஷ்டகாவிதியை (முதல்கல் நாட்டு விதியை) கேட்பாயாக. 18

காசியப சில்பத்தில் வாஸ்து ஹோமவிதி என்னும்
மூன்றாவது படலம் முற்றும்.

---

*விஸ்ருஜேத் ஜலேந து | இதி பாட: ஸாதீயோ பாதி |

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

॥ 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇𑌷𑍍𑌟𑌕𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ॥

𑌅𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌰𑍍𑌥𑌂
𑌪𑍍𑌰𑌥𑌮𑍇𑌷𑍍𑌟𑌕𑌾𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑍇 𑌮𑌣𑍍𑌡𑌪𑍇 𑌸𑌾𑌲𑍇 𑌗𑍋𑌪𑍁𑌰𑍇 𑌚 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇𑌷𑍍𑌟𑌕𑌾𑌮𑍍 ।
𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌂 𑌚𑍈𑌵 𑌤𑌥𑌾𑌽𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌂 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌭𑍂𑌮𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌕𑍍𑌲𑌿𑌨𑍍𑌨𑌂 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌢𑍍𑌯𑌂 𑌚 𑌅𑌶𑌕𑍍𑌯𑌖𑌨𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥
𑌸𑌾𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑌮𑌿𑌤𑌿 𑌵𑌿𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌾𑌦𑍈𑌰𑌸𑌂𑌶𑌯𑌮𑍍 ॥௧॥

நான்காவது அத்தியாயம்.

பிரதமேஷ்டகா விதானம்

இனிபிரதமேஷ்டகாவிதியைக் கூறுகிறேன் கேட்ப்பாயாக.

பிராஸாதம், (கோவில், வீடு முதலியவை) மண்டபம், ஸாலம் (மதிள்) கோபுரம், பரிவாரதேவதைகளின் ஆலயம், இவைகளில், பிரதமேஷ்டகையை (முதல் கல்லை) வைக்க வேண்டும்.

பூமிலக்ஷணமானது, (பூமியானது) ஸ்நிக்தம், அஸ்நிக்தம், என்று இரண்டு 2 விதமாகும். (ஸ்நிக்தம்—களிப்புள்ளது, பசையுள்ளது. அஸ்நிக்தம்—பசை இல்லாதது)

பசையுள்ளதாகவும், மணலுடன் கூடியதும், தோண்ட முடியாததுமான பூமியானது, ஸாஸ்நிக்தம், என்று கூறப்பட்டிருக்கிறது.

ஸாம்புஷாஞ்ஜலிமாத்ரம் து த்ருஷ்டா தோயஸமந்விதம் ।
அசேஷம் (அசக்ய) கநநம் யத்ர(து) ஸ்நிக்தாவ்யாத
(வ்யம்) ப்ரகீர்திதம் ।।

*ப்ராஸாதஸ்ய து விஸ்தார: விவிஹஸ்தாய
விஸ்ருத: ।
ஹஸ்தமாத்ரம் கநேத் விப்ர ஸாஸ்நிக்தம் து ப்ரகீர்திதம் ।

யாவத்த்ர ஜலம் த்ருஷ்டம் கநேத்தாவத்து ஸம்மிதே(கம்) ।
ஸகர்தம் வாலுகை: ஸ்தூலை: ஸம்பூரயித்வா ஜலாந்விதம் ।

ஸம்பூரயித்வா ஜலம் ஸர்வாந் ஜலேந ஸமதாம் கதம் ।

சிறு மணலுடன் கூடியதும், புருஷாஞ்ஜலியளவு ஜலத்துடன் காணப்பட்டு, அதற்கு மேல் தோண்ட முடியாததுமான பூமியானது, அஸ்நிக்தம், என்று கூறப்பட்டிருக்கிறது.

* பிராஸாதத்தின் விஸ்தாரமானது, நான்கு 4 முழம் விஸ்தாரமுடையதாகவோ ஒரு 1 முழம் விஸ்தாரமுடையதாகவோ இருக்கவேண்டும்.

ஹே அந்தணனே! ஸாஸ்நிக்தமான பூமியை ஒரு 1 முழ அளவு, (ஒரு 1 முழம் அகலத்திற்கு) அந்த பூமியில் ஜலம் தென்படும் வரையில் தோண்டவேண்டும்.

ஜலத்துடனிருக்கின்ற அந்தப்பள்ளத்தை, பெருமணலை கொட்டி நிறவேண்டும். (ஜலமட்டத்திற்கு சிறிதளவு

---

*ப்ராஸாதாதார விஸ்தார: வேதவஹ்ந்யக்ஷிஹஸ்தக: । இதி பாட: ஸோயஞ்நீய இதி பாதி ।

* பிராஸாதாதார விஸ்தாரமானது, நான்கு 4 முழம், மூன்று 3 முழம் அல்லது, இரண்டு 2 முழம், என்று இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

ஸ்தலஸமே(த்தநும்)ஹஸ்திபாதைஸ் ஸுத்ருடம் க்ருதம்
வ்யாஹஸ்தி(த்த)ரோ: ||௭||

ஸ்தானாதாரம் ச அதிகம் கனனம் கார்யம் |
மானஸூத்ராதிஸூத்ரம் ச பாதயேத்தத்ர தேசிக: ||

ப்ரதமம் மானஸூத்ரம் ச த்விதீயம் த்விதீயகம் |
த்ருதீயமதிஷ்டானஸீமாந்தம் சதுர்த்தம் பீடஸீமகம் ||௯||

பஞ்சமம் ஹோமஸூத்ரம் ச ஷஷ்டம் ச
ப்ரதிஸூத்ரகம் |
ஏவம் க்ரமேண கர்த்தவ்யம் ஸூத்ரஷட்ககம்
விப்ரோத்தமா: ||௰||

அதிகமாகவே) அதற்குமேலே, ஜலத்தை நிறப்பி, ஸமதலமாகச் செய்யவேண்டும். அந்த பூமியை, பெரிதான (கனமான) ஹஸ்திபாதங்களினாலே, (துமஸ்கட்டைகளினாலே) ஸ்நிக்தமாக, (மேடுபள்ளமில்லாமல்) செய்யவேண்டும்.

தேசிகன், (ஸ்தபதி) அதிக ஆழம் தோண்டப்பட்ட அவ்விடத்தில், மானஸூத்திர பாதனம் செய்து, (பிராஸாதமானத்தை நூல்பிடித்தளந்து) ஆதாரமானத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். (ஆதாரம் ஸமப்படுத்திய தலம்) 8

ஹே பிராம்ஹணோத்தமர்களே, மானஸூத்திரமானது, பிரதம (முதலாவது) மானஸூத்திரம், துவிதீய (இரண்டாவது) மானஸூத்திரம் 2, அதிஷ்டான ஸீமாந்த ஸூத்திரம், 3 மூன்ருவது ஸூத்திரம் உபபீடஸீமாந்தம் நான்காவது ஸூத்திரம் 4, ஹோமஸூத்ரம் 5, ஐந்தாவது ஸூத்திரம், பிரதிஸூத்திரம் ஆருவது ஸூத்திரம் 6, இவ்விதமாக முறையே, ஆறு 6 சூத்திரங்களை கல்பித்துக்கொள்ளவேண்டும்.

தஸ்யோத்தரே ப்ரபாம் க்ருத்வா நவஹஸ்தப்ரமாணத: |
ஷோடசஸ்தம்பஸம்யுக்தம் விதான த்வஜ(வஸ்த்ர)பூஷிதம் ||

தோரணைர் தர்பமாலாபிர் முக்தாதாமைரலங்க்ருதம் |
மண்டபஸ்ய த்ரிபாகைகம் வேதிகாயாஸ்து விஸ்தரம் ||

ஹஸ்தமாத்ரஸமுத்ஸேதம் தர்பணோதரஸந்நிபம் |
மத்யே பார்ச்வே ச குண்டானி ஹோமார்தம் (சாலாயாம் து)
ப்ரகல்பயேத் ||13||

†வேதாச்ரம் ச ஸமவ்ருத்தம் ச அப்ஜம் ஐந்த்ராதித: க்ரமாத் |

அதற்கு வடதிசையில் ஒன்பது 9 முழம் அளவில், பிரபையை (ஹோமசாலையை) கல்பிக்கவேண்டும். அது பதினாறு தூண்களுடனிருக்கவேண்டும். அதை மாவிலை, தோரணம், தர்பமாலை, முத்துமாலை. இவைகளினாலே அலங்காரம் செய்யவேண்டும்.

வேதிகையின் விஸ்தாரமானது, மண்டபத்தின் விஸ்தாரத்தில், மூன்றில் 3ல் ஒரு 1 பாகமிருக்கவேண்டும்.

அது ஒரு 1 முழம் உயரமிருக்கவேண்டும். கண்ணாடியின் நடுவைப்போலிருக்கவேண்டும்.

அந்த சாலாமத்தியத்திலும், சுற்றிலும், அக்னி குண்டங்களைக் கல்பிக்க வேண்டும். 13

*வேதாச்ரம் (சதுரச்ரம்) விருத்தம், (வட்டம், அப்ஜம்,

---

†அத்ர க்ரந்தபாதோ லுப்த இவ பாதி | அத: ஏவம் ஸோத்யமிதி பாதி |

வேதாச்ரம் யோனிமர்தேந்தும் த்ர்யச்ரம் வ்ருத்தம் ஷடச்ரகம் |
பத்மம் சாஷ்டாச்ரம் ஐந்த்ராதிஷு க்ரமாத் || இதி

* இங்கு, மூலத்தில், கொஞ்சம் விட்டுப்போயிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஆகையால், இவ்விதம் திருத்திக்கொள்ள

ஹஸ்தமாத்ரஂ ச விஸ்தாரஂ தாவந்மாத்ரஂ ச நிம்ந(த்ரி)
மேகலம் ।

கோமயேநைவ ஸம்லிப்ய ப்ரோக்ஷயேத்
பஞ்சகவ்யகை: ।

பிஷ்டசூர்ணாதிநாலங்க்ருத்ய ததோ வை ப்ராஹ்மண
போஜநம் ॥ ௧௫ ॥

உச்சிஷ்டம் ஸம்பரித்யஜ்ய வாஸ்துஹோமம்
ததஶ்சரேத் ।

பர்யக்நிகரணம் க்ருத்வா ப்ரோக்ஷயேச்ச குஶாந்
ந்யஸேத் ॥ ௧௬ ॥

(தாமரை வடிவம்) இவைகளை, கிழக்கு முதலிய திக்குகளில் கல்பிக்கவேண்டும்.

குண்டமானது, ஒரு 1 முழம் விஸ்தாரம், ஒரு 1 முழம் ஆழம், மூன்று 3 மேகலைகளுடன் கூடியதாக இருக்க வேண்டும்.

குண்டங்களை, கோமயத்தினுலே மொழுகி, பஞ்சகவ்வியத்தினுலே ப்ரோக்ஷிக்கவேண்டும். அரிசிமா முதலியவைகளினுலே, அதை அலங்காரம் செய்து, பிறகு பிராம்ஹணபோஜனம் செய்து வைக்கவேண்டும். 15

எச்சிலை எடுத்து எறிந்துவிட்டு, வாஸ்து ஹோமத்தைச் செய்யவேண்டும்.

பர்யுக்னிகரணம் செய்து, ப்ரோக்ஷணம் செய்து, குசங்களை வைக்கவேண்டும். (பிறகு) 16

வேண்டும், என்று தோன்றுகிறது. சதுரச்ரம் 1, யோநி 2, அர்த்த சந்திரன் 3, முக்கோணம் 4, வட்டவடிவம் 5, ஷடச்ரம் 6, பத்மம் 7, அஷ்டாச்ரம் 8, பஞ்சாச்ரம் 9, ஆகியகுண்டங்களை, முறையே, மத்தியிலும், கிழக்கு முதலிய திக்குகளிலும் கல்பிக்கவேண்டும்.

ஸ்தண்டிலம் வேதிகாயாம் து அஷ்டத்ரோணைஶ்ச
ஶாலிபி: |
ததர்தை: தண்டுலைஶ்சைவ ததர்தைஸ்து திலைரபி

ஸ்தண்டிலம் கல்பயேச்சாஸ்து தர்பை: புஷ்பை:
பரிஷ்க்ருதை: |
ஶிலாபித்தௌ ஶிலாபிஸ்து காரயேச்ச ப்ரதமேஷ்டகா:
(காம்) ||கஅ||

ஆத்யேஷ்டகாஞ்ச க்ருதஸ்யம் விபரீதம் விநாஶனே ச |
ஏவம் விஜ்ஞாபி: ஶிலாபிஸ்து காரயேச்ச ப்ரதமேஷ்டகா: ||

த்வாரபந்தஸ்து கல்பயேத் ஸ்த்ரீகவாட (ஸ்த்ரீஶிலா)பி-
விஶேஷத: |

வேதிகையில், (மேடையில்) எட்டு 8 தூணிநெல்லைக் கொட்டி ஸ்தண்டிலத்தைச் செய்யவேண்டும். (மேடையாகச் செய்யவேண்டும்.) அதற்குமேலே, நெல்லில் சரிபாதியளவு, அரிசியைக் கொட்டிப்பரப்பவேண்டும். அதற்கு மேலே, அரிசியில் பாதியளவு, எள்ளைக்கொட்டிப்பரப்பவேண்டும். இவ்விதமாக வேதிகையைச் செய்து அதில், தர்பைகளையும், புஷ்பங்களையும்பரப்பவேண்டும்.

சிலையினாலே கட்டப்பட்ட சுவற்றில். சிலைகளினாலேயே பிரதமேஷ்டகையை (முதல் கல்லை) கல்பிக்கவேண்டும். மரத்தினாலே கட்டப்படுகின்ற கிரஹத்தில், ஆதியேஷ்டகையானது, மரத்தினாலே இருக்கவேண்டும். 18

இவ்விதமாக, ஆதியேஷ்டகையை கல்பிக்க வேண்டும். வேறு விதமாகச் செய்யக்கூடாது.

பிரதமேஷ்டகையை, புருஷசிலையினாலே கல்பிக்க வேண்டும். துவாரபந்தத்தை, விசேஷித்து, ஸ்திரீசிலை

நபும்ஸகஶிலாயாந்து மூர்த்தேஷ்டகாம்
(ஸ்த்ரீஶிலாம்) விவர்ஜயேத் ॥௨௰॥

யதாலப்தஶிலாயாந்து பித்திஸ்தம்போதயோ பவேத் ।
நவாங்குலம் ஸமாரப்ய த்வ்யங்குலவிவ்ருத்திதஃ ॥௨௧॥

ஷோடஶாகாரஸம்யுக்தம் வேதவேதாங்குலேந து ।
விஸ்தாரம் ச கனம் ப்ரோக்தம் ஏகாதி
ஷோடஶம் ॥௨௨॥

ஏகாதிஷோடஶாந்தானாம் பூதலானாம் ப்ரகல்பிதே ।
மூர்த்தேஷ்டகாதிபும்ஸ்த்ரீஷண்டாதி பரீக்ஷயேத் ॥

ஸ்வரூபரேகாபேதேந ச ஸம்ப்ரகீர்த்திதா ।

யினாலே செய்யவேண்டும். (அதை, ஸ்திரீ சிலையினாலே கட்டவேண்டும்.) ஹே அந்தணனே! மூர்த்தேஷ்டகையை நபும்ஸகசிலையினால் கல்பிக்கப்படலாகாது. 20

சுவர், தூண், இவைகளின் உதயமானது, கிடைத்த சிலைகளினாலே இருப்பதாகும். (உதயம்-உயரம்.)

அதன் விஸ்தாரமானது, ஒன்பது 9 அங்குலம் முதல் முப்பத்தொன்பது 39 அங்குலம் வரையில், இரண்டு 2, அங்குலம் வீதம் கூட்டிவர, பதினாறு 16 விதமாகும். அதன் கனமானது, நான்கு 4, நான்கு 4, அங்குலமாம்.

இது ஏகதலம் முதல் ஷோடாசதலம் வரையிலுள்ள பூதலங்களுக்குக் கூறப்பட்டதாகும்.

மூர்த்தேஷ்டகை முதலியவைகளில், புருஷசிலை, ஸ்திரீ சிலை, நபும்ஸகசிலை, என்பதை, அவைகளில் காணப்படும் ரேகைகளினால் பரீக்ஷித்து பார்த்துத்தெரிந்து கொள்ள வேண்டும். 23

*யா ஹ்ருஸ்வா வ யா ஹ்ரஸ்வா(க்ஷ)ண்ணா ஹாவஸா தவா ம்ஸகா ||

ஸிஸ்விஸ்த்ருஷா ருஜு ரேகவா ஸ்பிதஷ்டு ।
உத்தரோச்சத்ரிபாகைகம் வாஜனோத்ஸேதநீப்ரகம் ।
உத்தரோத்ஸேததுல்யம் து துலாநீப்ரம் ஸமாஹ்ருதம் ॥

ததர்த்தம் வா த்ரிபாதம் வா தஸ்ய விஸ்தாரமேவ ஹி ।
வாஜனே து (மா) குல்மகோர்த்வே து துலாஸ்தாபன-
மாசரேத் ॥ சச ॥

உத்தரத்தின் உயரமானது, ஒரு 1 தண்டம், முக்கால் ¾ தண்டம், அரை ½ தண்டம், இருப்பது, முறையே, உத்தம மானம, மத்திமமானம், அதமமானமாகும், என்று கூறப்பட்டிருக்கிறது.

அதன் (உத்தரத்தின்) விஸ்தாரமானது, பாதமூல விஸ்தாரமானம், பாதமத்திய விஸ்தாரமானம் பாதாகிர விஸ்தாரமானமிருப்பது, முறையே, உத்தம, மத்தியம, அதம மானமாகும. இவ்விதம் உத்தரத்தின் விஸ்தாரம் கூறப்பட்டிருக்கிறது. 42

வாசனத்தின் உயரமும் நீப்பிரமும், உத்தரத்தின் உயரத்தில மூன்றில் ஒரு 1 பாகம் இருக்கவேண்டும.

துலாத்தின் நீப்பிரமானது, உத்தரத்தின் உயரத்திற்கு ஸமமாக இருக்கவேண்டும என்று கூறப்பட்டிருக்கிறது. 43

அதன விஸ்தாரமானது, அதில் (உத்தரத்தின உயரத்தில) அரை ½ பங்கு, அல்லது, முக்கால் ¾ பங்கு இருப்பதாகும.

வாசனத்தில், குல்மகத்திற்குமேலே, துலாஸ்தாபனம் செய்யவேண்டும. (துலாக்கட்டையை வைக்கவேண்டும.)

𑌤𑍁𑌲𑌾𑌯𑌾𑌃 𑌨𑍀𑌵𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌜𑌯𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌤𑍁𑌲𑍋𑌪𑌰𑌿 ।
𑌜𑌯𑌨𑍍𑌤𑌾𑌯𑌾𑌂𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌤𑍁𑌲𑌾𑌰𑍍𑌧𑌮𑌰𑍍𑌧𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௪௫ ॥

𑌤𑍁𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑍁𑌲𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌤𑌜𑍍𑌜𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑌦𑌨𑍍𑌤𑌰𑌮𑍍
𑌤𑍁 (𑌅)𑌨𑍁𑌮𑌾𑌰𑍍𑌗𑌂 𑌤𑌥𑌾 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌂 𑌦𑌣𑍍𑌡𑌮𑌾𑌨𑍇𑌯𑌥𑍋𑌦𑌿𑌤𑌾
(𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌃) 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥ ௪௬ ॥

𑌕𑌪𑍋𑌤𑌾𑌦𑍀𑌨𑌿 𑌨𑍀𑌵𑍍𑌰𑌾𑌣𑌿 (𑌣𑌾𑌂) 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌦𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌅𑌥𑌵𑌾 𑌤𑍁𑌲𑍋𑌪𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌤𑍍𑌤𑍁 𑌇𑌷𑍍𑌟𑌕𑌾𑌸𑍍𑌤𑌰𑌣𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ ௪௭ ॥

𑌸𑍁𑌧𑌯𑌾 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌤𑍋𑌯𑍈𑌰𑌿𑌷𑍍𑌟𑌕𑌾𑌸𑍍𑌤𑌰𑌣𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌕𑌰𑌾𑌲𑌮𑍁𑌦𑍍𑌗(𑌕𑍁)𑌲𑍍𑌮𑌾𑌷𑌕𑌲𑍍𑌕𑍈𑌃 𑌶𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌣𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ ௪௮ ॥

துலாத்திற்கு மேலேயிருக்கும் ஜயந்தத்தின் நீப்பிர விஸ்தாரமானது, துலாத்தில் அரை ½ பங்கு இருக்க வேண்டும்.

அநுமார்கமானது, ஜயந்தத்தில் அரை ½ பங்கு விஸ்தாரமும் உயரமுமுடையதாக இருக்கவேண்டும். என்று கூறப்பட்டிருககிறது. 45

துலாந்தரம (துலாமத்தியம்–அல்லது, துலாவிஸ்தாரம்) துலாத்தின் உயரம், ஜயந்தியின் அந்தரம் (விஸ்தாரம்) அநுமார்கம், இவைகளை, தண்டமானத்தினுலே கூறியுள்ள படி கல்பிக்கவேண்டும். 46

கபோதாதிகளையும் நீப்பிராந்தத்தையும் பிரஸ்தரத்தில் கூறியிருப்பதைப்போல கல்பிக்கவேண்டும்.

அல்லது. துலாத்திற்குமேலே இஷ்டகாஸ்தரணம் செய்யவேண்டும். (செங்கறகளைப்பரப்பவேண்டும்.) 47

இஷ்டகாஸ்தரணமானது, ஸுதை, குடதோயம் (வெல்ல ஜலங்கலந்த ஸுதை) இவைகளினுல் கல்பிக்கப்பட வேண்டும். அதை, கராளமுதகீ (கருப்புப்பயறு, அல்லது உளுந்து) குல்மாஷம், இவைகளின் கல்கத்தினுல் பசையுள்ள தாகச்செய்யவேண்டும். 48

ஜஷ்டகாஸ்தரணம் ப்ரோக்தம் ததூர்த்வே ஏகதலே ஸதி ।
ஶைலஜோத்து (வ) ஸகாஸ்தம் பாதயேத்து விஶேஷத: ॥

வாஜநே ஸ்யாத் தது வாஸாத்ய ஸுதாகர்ம ஸமாசரேத் ।
ஏவமாதிதலம் ப்ரோக்தம் தத்தூர்த்வம் தலம் ச்ருணு ॥ ५० ॥

[1] மூல ஸ்தம்போச்சம் தச நவாஷ்டாம்சகே
ஏகாம்சஹீனாம்சஸ்து ததூர்த்வோர்த்வ ஸ்தம்பயோ: ॥

ஏவமேவ ததா [2] உர்த்வமேகைக தலோ (லே) பி வ ।

இவ்விதமாக இஷ்டகாஸ்தரணம் கூறப்பட்டிருக்கிறது. ஏக 1 தலத்திற்குமேலே, சிலையையும் (கருங்கல்லேயும்) உபயோகிப்பதாகும்.

விசேஷித்து, அதன் மேல்பாகத்தை கருங்கல் செங்கல், இவைகளைப்பரப்பி மூடவேண்டும். 49

வாசனத்திற்கு மேலேயாவது, ஸுதாகாரியத்தைச் செய்யவேண்டும். (ஸுதாலேபனம் செய்யவேண்டும்.) இவ்விதமாக ஆதிதலம் கூறப்பட்டிருக்கிறது.

இனி, அதன் மேல்தலத்தைக்கூறுகிறேன். 50

மூலதலத்தின் ஸ்தம்போச்சத்தை பத்து 10 ஒன்பது 9 அல்லது எட்டு 8 பாகமாகச் செய்துகொண்டு, அவைகளில், ஒரு 1 பாகத்தைக் குறைத்துக்கொண்டு, மேல்தலத்தின் ஸதம்போச்சத்தைக்கொள்ளவேண்டும். இவ்விதமே மேலே மேலே, தலங்களின் ஸ்தம்போச்சத்தைக்கொள்ள வேண்டும்.

1. மூலதலஸ்தம்போச்சம் தசநவாஷ்டாம்சகே । ஏகாம்ச-ஹீனம் ஸ்ம்ருத:, இதி வாசோ பாட: ।

2. காயம், இதி வா பாடோ பாட: ।

ப்ரஸ்தரோபரி கந்தரூபம் பித்திரேவ விசேஷத: ॥ ௫௨ ॥

ச்சத்ராகாரசிரோபேதம் ஸபா (ஸா) காரமதாபி வா ।
கோபானமதவா வாஜம் ஸதா கல்பயேத் த்விஜ ॥ ௫௩ ॥

ம்ருண்மயை: லோஷ்டகைர்வாபி ஸாரதாருமயேன வா ।
கோபானச்சாதனம் கார்யம் ரூபாக்ரியாசிரோந்விதம் ।

ஸபாகாரமிதம் ப்ரோக்தம் யதேஷ்டம் தேஷு கல்பயேத் ।
ஜாதி: பஞ்சதலம் ப்ரோக்தம் ச்சந்தம் வேததலம் பவேத் ॥

விகல்பம் த்ரிதலம் வித்யாத் ஆபாஸம் சைவ
(த்வ்யேக) ஸம்ஞிதம் ।

பிரஸ்தரத்திற்கு மேலே பித்தியையே (பித்தியின் உயரத்தையே) ஸ்தம்போச்சமாகக்கொள்ளவேண்டும். 52

ஹே அந்தணனே! எப்பொழுதும், கோபானம், அல்லது வாஜத்தை, குடைபோன்ற சிரத்துடன் கூடியதாகவோ, ஸபையைப்போன்ற வடிவமுடையதாகவோ கல்பிக்கவேண்டும். 53

மண்ணாலே ஓடுகளினாலே, (செங்கற்களினாலே) அல்லது உறுதியான மரத்தினாலே, கோபானச்சாதனம் செய்ய வேண்டும். அது, ரூபாகிரியை, சிரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும்.

இது, ஸபாகாரமாகும், என்று கூறப்பட்டிருக்கின்றது. இவைகளில் இஷ்டமானதைக்கல்பித்துக்கொள்ளுவதாகும்.

பஞ்ச 5 தலமானது, ஜாதி என்று பெயருடையதாகும். நான்கு 4 தலமுள்ளது, சந்தம், என்று பெயருடையதாகும். மூன்று 3 தலமுள்ளது விகல்பபவனமாகும். இரண்டு 2 தலம் ஒரு 1 தலமுடையது, ஆபாஸபவனமாகும்.

ஜாத்யாதீநாம் து ஸர்வேஷாம் யோக்யம் ஸாலதலம்

கல்பயேத் ॥ ௫௭ ॥

மர்யாதாஸாலமாஶ்ரித்ய பாவகே பசநாலயம் ॥ ௫௮ ॥

நைர்ருத்யாமாயுதஸ்தாநம் வாயவ்யே ஶயநாலயம் ।
ஶாங்கரே யோகஶாலா ஸ்யாத் ப்ருஶபாதேऽதவா
பதே ॥ ௫௮ ॥

ஆக்நேயயாம்யயோர்மத்யே கல்ப்யம் ஜநாலயம் ।
ஶக்ரஶாங்கரயோர்மத்யே மஜ்ஜநாலயமேவ ச ॥ ௫௯ ॥

தாந்யாலயம் ச தத்பார்ஶ்வே ப்ருங்கராஜபதேऽபி வா ।
நைர்ருதிவாருணயோர்மத்யே புஸ்தகாலயம் ॥

ஜாதி முதலியவைகளுக்கேற்றதாக, பொலதலத்தை (மதிளில் கல்பிக்கப்படும் கோபுரவாசலை) கல்பிக்கவேண்டும்

மர்யாதாஸாலத்தை (எல்லைச்சுவற்றை) அடுத்து அக்கினிதிக்கில், பசனாலயம் (சமயல்கட்டு) இருக்க வேண்டும்.

தென்மேற்கு திக்கில், ஆயுதாகாரம், வாயுதிக்கில் சயநாலயம், ஈசாநதிக்கில் அல்லது பிருசபாகத்தில் யோக சாலே, இவைகளைக்கல்பிக்கவேண்டும். 58

அக்கினி மூலே, தெற்கு திக்கு, இவைகளின் மத்தியில் ஜநாலயத்தைக்கல்பிக்கவேண்டும். 59

கிழக்கு திக்கு, ஈசானமூலே, இவைகளுக்கு மத்தியில் மஜ்ஜநாலயத்தை (ஸ்நாநசாலேயை) கல்பிக்கவேண்டும்.

அதன் பக்கத்தில், அல்லது பிருங்கராஜபதத்தில் தானியாலயத்தை கல்பிக்கவேண்டும்.

திருருதிமூலே, மேற்கு, இவைகளின் மத்தியில், புஸ்த காலயமிருக்கவேண்டும். 60

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௬௨ ॥

[illegible] ।
[illegible]
[illegible] ॥ ௬௩ ॥

[illegible] ।
[illegible] ॥

அதன் இரு பக்கங்களிலும் சிறந்த வ்ரஞ்ஜனலயத்தை (வ்யஞ்ஜனலயம) கல்பிக்கவேண்டும். (வ்யஞ்ஜனம்—வருகாய், வ்யஜனம் —விசிறி)

வடக்குதிக்கு, வடமேற்குதிக்கு இவைகளின் மத்தியில் ஆடைகள் வைக்கும் ஆலயமிருக்கவேண்டும். 61

வடக்கு திக்கு, ஈசானதிக்கு, இவைகளின் மத்தியில், கௌரீதேவியின் ஆலயத்தைக்கல்பிக்கவேண்டும்.

அதன் பக்கத்தில், கட்டிலுடன் கூடிய சயன ஸ்தானத்தைக்கல்பிக்கவேண்டும். 62

புஷ்பதந்த பதம், அல்லது, மஹேந்திரபதத்தில் புஷ்ப மண்டபத்தையும், கிருஹக்ஷப (த) பதத்தில், தானியாலயத்தையும் கல்பிக்கவேண்டும். 63

ஹே அந்தணனே! (இவைகளை) சுற்றிலும் மாலை வடிவமாக, இவ்விதமே கல்பிக்கவேண்டும்.

ஸோமாம்சத்தில், மாலிகாமத்தியில் கூபஸ்தானம் கூறப்பட்டிருக்கிறது. (கூபம்-கிணறு) 64

𑌅𑌥𑌵𑌾𑌽𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌸𑌂
(𑌹𑍍𑌰𑌂) 𑌦𑍇𑌶𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌮𑍍 ।
𑌶𑌕𑍍𑌰𑌶𑌾𑌂𑌕𑌰𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 ‡𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ॥

𑌶𑌂𑌕𑌰𑌶𑍍𑌰𑍀𑌦𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ।
𑌯𑌾𑌮𑍍𑌯𑌪𑌾𑌵𑌕𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑌣𑍍𑌡𑌪𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥௬௬॥

𑌯𑌾𑌮𑍍𑌯𑌨𑍈𑌰𑍍𑌋𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌨𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌜𑌲𑌾𑌶𑌯-
𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌨𑍈𑌰𑍍𑌋𑌤𑌿𑌵𑌾𑌰𑍁𑌣𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌰𑌵𑌣𑌮𑌣𑍍𑌡𑌪𑌮𑍍 ॥

𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌵𑌾𑌰𑍁𑌣𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌆𑌯𑍁𑌧𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।

அல்லது, வேறுவிதமாக இடங்களைக்கூறுகிறேன். கிழக்கு திக்கு, ஈசான திக்கு இவைகளின் மத்தியில் [1]வித்தியாஸ்தானம் கூறப்பட்டிருக்கின்றது. 65

ஈசான் திக்கு, வடக்குதிக்கு, இவைகளின் மத்தியில் தனஸ்தானம் கூறப்பட்டிருக்கின்றது.

தெற்குதிக்கு அக்னிமூலை, இவைகளின் மத்தியில் புஷ்ப மண்டபம் கூறப்பட்டிருக்கின்றது. 66

தெற்குதிக்கு, நிருருதிமூலை, இவைகளின் மத்தியில் ஸ்நானம் செய்வதற்கான ஜலாசயம் கூறப்பட்டிருக்கிறது.

நிருருதிமூலை, மேற்குதிக்கு இவைகளின் மத்தியில் தர்மோபதேசங்களைக் கேட்பதற்கான மண்டபம் கூறப்பட்டிருக்கிறது.

வாயுமூலை, வருண திக்கு, இவைகளின் மத்தியில் ஆயுதங்களை வைக்குமிடம் கூறப்பட்டிருக்கிறது,

---

‡ 𑌯𑌾𑌗𑌸𑍍𑌥𑌾𑌨𑌂, 𑌇𑌤𑌿 𑌦𑍍𑌰𑍁 𑌵𑌾𑌹𑍋 𑌯𑌥𑍋 𑌪𑌾𑌠𑌿 ।

1. யாகசாலை என்று இருக்கவேண்டும்.

[illegible] ॥ ௬௮ ॥

[illegible] ।
[illegible] ॥ ௬௯ ॥

[illegible] ।
[illegible] ॥

[3] [illegible] ।
[illegible] ॥ ௭௰ ॥

[illegible] ।

வாயு மூலை, குபேர திக்கு, இவைகளின் மத்தியில் சயன ஸ்தானம கூறப்பட்டிருக்கிறது. (சயநம்-படுக்கை). 68

ஈசான திக்கு, வடக்கு திக்கு, இவைகளின் நடுவில் [1] யாகசாலையைக் கல்பிக்கவேண்டும்.

ஜயந்த பதத்தில் ஸ்நான கிரஹமிருக்கவேண்டும். அக்கினி திக்கில் யாகசாலை இருக்கவேண்டும், 69

சுற்றிலும் மாலையில், (மாலாகாரமாக) ஸகல பேரங்களின் ஸ்தானங்கள் கூறப்படுகின்றன.

ஈசான திக்கில் நடராஜ மூர்த்தியை வைக்கவேண்டும்.

அக்கினி மூலையில், விருஷ வாஹன மூர்த்தியை வைக்க வேண்டும். 70

நிருருதி திக்கில், ஸோமாஸ்கந்த மூர்த்தியை வைக்க வேண்டும்.

வாயு திக்கில், கங்காள மூர்த்தியை வைக்கவேண்டும்.

---

1. [illegible] । [illegible] ।

2. [illegible] ।

3. வித்தியாஸ்தானத்தை, என்று இருப்பது பொருந்தும்

ஸுக்ரீவே ஹரிலிங்கம் ஸ்யாத் கந்தர்வே சந்த்ரஶேகரம் ।

ஶேஷாம்(ஶோஷாம்)ஶே காமதஹநம் முக்யாம்ஶே காலாரி-
மூர்த்திகம் ।

† உதிதேऽர்த்தநாரீஶமூர்த்திம் மாஹேந்த்ரே கல்யாண-
ஸுந்தரம் ॥ ௭௩ ॥

க்ஷேத்ரபாலம் ச பர்ஜந்யே யாம்யே
தக்ஷிணேஶ்வரம் ।
வாருணே லிங்கோத்பவம் ச ஸௌம்யே ச
கஜஹாரிணம் ॥ ௭௪ ॥

ஜயந்த பதத்தில், பிக்ஷாடந மூர்த்தியை வைக்க வேண்டும். 71

ஸத்திய பதத்தில், ஸுகாஸன மூர்த்தியை வைக்க வேண்டும்.

விதத பதத்தில், திரிபுராந்தக மூர்த்தியை வைக்க வேண்டும்.

ஸுக்ரீவபதத்தில், ஹரியுடன் கூடிய மூர்த்தியை (சங்கர நாராயண மூர்த்தியை) வைக்கவேண்டும்.

கந்தர்வ பதத்தில், சந்திரசேகரமூர்த்தியை வைக்க வேண்டும். 72

சேஷாம்சத்தில் (சோஷபதத்தில்) காமதஹநமூர்த்தியையும், முக்கியாம்சத்தில், காலாரி (காலஸம்ஹார) மூர்த்தியையும், உதிதாம்சத்தில் (ஆதிகாம்சத்தில்) அர்த்தநாரீசமூர்த்தியையும், மஹேந்திரபதத்தில் கல்யாணஸுந்தர மூர்த்தியையும், பர்ஜந்யபதத்தில் க்ஷேத்ரபாலக மூர்த்தியையும், யாம்யபதத்தில தக்ஷிணாமூர்த்தியையும், வருண பதத்தில், லிங்கோத்பவ மூர்த்தியையும், ஸௌமியபதத்தில், கஜஸம்ஹார மூர்த்தியையும், கல்பிக்கவேண்டும். 74

---

† ஶ்ருங்கிதே அர்த்தநாரீஶம், உதி யாம்ஶ: பாட: ।

इत्थं धर्मार्थ (र्थ) धर्मार्थदाः शम्भोर्मध्यभागेषु
कल्पयेत् ।
मूलहर्म्यं वीक्षमाणान् सकलान् स्थापयेत् क्रमात् ॥

प्राकारेषु चतुर्दिक्षु द्वारशोभादि कल्पयेत् ।
प्राकारमध्ये (त) तन्मध्ये दैर्घ्यमध्येऽथवा
(मध्येऽपि) तु ॥७६॥

अथवा मूलहर्म्यस्य मध्यसूत्राश्रितं भवेत् ।
एकप्रधानद्वारकं वा द्वयं वान्यत्तु जालकम् ॥७७॥

प्राकारमेवमाख्यातं बाह्ये विधिर्विधीयते ।
ककुप्सु चतुर्दिक्षु द्वारं बाह्यादि (बाह्ये तु)
विन्यसेत् ॥७८॥

இவ்விதமாக, தர்மம், அர்த்தம், இவைகளையளிக்கக் கூடிய சிவமூர்த்திகளை, மத்திய பாகங்களில் கல்பிக்க வேண்டும்.

மூலஸ்தானத்தைப் பார்த்திருக்கும்படி, ஸகலபேரங்களை, ஸ்தாபனம் செய்யவேண்டும். 75

பிராகாரங்களில், நான்கு 4 திக்குகளிலும், துவாரசோபாதிகளைக்கல்பிக்கவேண்டும்.

பிராகாரங்களின் மத்தியில், அதன் நீளத்தின் மத்தியில் துவாரசோபாதிகளைக்கல்பிக்க வேண்டும். 76

அல்லது, அது, மூலஹர்மியத்தின் மத்தியஸூத்திரத்தை யொட்டி இருக்கவேண்டும்.

ஒன்று 1 அல்லது, இரண்டு 2 பிரதானதுவாரம் இருக்கவேண்டும்.

மற்றது ஜாலகமாக இருக்கவேண்டும். 77

பிராகாரமானது, இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது.

இனி, பாஹ்யவிதியானது, விதிக்கப்படுகிறது.

𑌤𑌦𑍍𑌬𑌾𑌹𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌤𑍍𑌰𑌯𑌃 𑌶𑍍𑌰𑍇𑌣𑍀𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍇𑌵𑌂 𑌵𑌿𑌧𑌾
𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌶𑍈𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌚𑍍𑌯 (𑌚𑍍𑌯𑌾) 𑌉𑌵𑌾𑌸-
𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌪𑍍𑌰𑌾𑌚𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌸𑍌𑌮𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌵𑌾𑌸𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌦𑍈𑌵𑌜𑍍𑌞𑌾𑌂𑌶𑍍𑌚 𑌭𑌿𑌷𑌜𑌾𑌂 𑌵𑌾𑌸𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌚 𑌯𑌾𑌮𑍍𑌯𑌕𑍇 ॥௮௰॥

𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌾𑌹𑌾𑌰𑌜𑌾 (𑌜𑍀) 𑌵𑌾𑌨𑌾𑌂 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 𑌵𑌾𑌸𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾𑌸𑌉𑌤𑍍𑌤𑌰𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑍇 ॥ ௮௧ ॥

அந்த துவார சோபாதியானது, வெளியில் (பித்திக்கு வெளிக்கையில்) ஒன்று 1, இரண்டு 2, மூன்று 3, நான்கு 4, அல்லது, ஐந்துகோலளவு நீண்டிருக்கவேண்டும். 78

அதற்கு வெளியில், மூன்று 3 சிரேணிகளை, இவ்விதமான முறையுடன் கல்பிக்கவேண்டும். (சிரேணி-வரிசை)

சிவபரிவாரங்களுக்கு (சிவனடியார்களுக்கு) கிழக்கு திக்கில், வாஸஸ்தானமிருக்கவேண்டும், என்று கூறப்பட்டிருக்கிறது. 79

தேசிகர்களுக்கு (குருக்களுக்கு) கிழக்கு திக்கிலோ, வடக்கு திக்கிலோ வாஸஸ்தானம் கூறப்பட்டிருக்கிறது.

தெற்கு திக்கில் தைவஞ்ஜர்கள், (ஜியௌதிஷிகர்கள்) நாவிதர்கள், வைத்தியர்கள், இவர்களின் வாஸஸ்தானம் கூறப்பட்டிருக்கிறது. 80

வேலைக்கேற்ற கூலி என்ற நிபந்தனையுடன் ஜீவிப்பவர்களுக்கு, மேற்கு திக்கில், வாஸஸ்தானம் கூறப்பட்டிருக்கிறது

ஸகல பக்தர்களுக்கும், உத்தரபார்சுவத்தில் (வடக்கில்) வாஸஸ்தானம் கூறப்பட்டிருக்கிறது.

ஆக்னேயே மஹாவ்ரதஸ்தானம் யாம்யே பாசுபதாலயம் |
கா(கா)லாமுகம் து நைர்ருத்யே சோர்த்வாலயம்
து வாருணே ‖ ௮௨ ‖

வாயவ்யே து ஆர்ஹதஸ்தானம் ஸௌம்யே ஸத்ப்ராஹ்மண-
ஸத்ம(த்ம)கம் |
ஜ்ஞாநப்ரபாதயஃ (திகம்) கல்ப்யா வைஶ்யாநாம்
து விஶேஷதஃ ‖ ௮௩ ‖

தத்பாஹ்யே ஈஶதிக்பாகே கல்ப்யம் மஹாஜலாஶயம் |
யாம்யாக்னேய்யோர்மத்யே கோஶாலாம் ஸம்ப்ரகல்பயேத் ‖

வாருணீநைர்ருதீமத்யே ஸூதிகாவாஸமீர்யதே |

அக்னிதிக்கில், மஹாவ்ரதத்தை யனுஷ்டிப்பவர்களின் ஸ்தானத்தையும், தெற்குதிக்கில், பாசுபதர்களின் (லிங்கங் கட்டிகளின்) ஆலயத்தையும், நிருருதிதிக்கில், காலாமுகர் களின் ஸ்தானத்தையும், (காலாமுகர்—மதுமாம்ஸங்களை பலிகொடுத்து பைரவரை ஆராதிப்பவர்கள்) மேற்குதிக்கில் ஊர்துவாலயத்தையும், வாயுதிக்கில் ஆர்ஹதர் (பௌத்தர்) களின் ஸ்தானத்தையும், வடக்குதிக்கில், பிராம்ஹணர்களின் வீடுகளையும் கல்பிக்கவேண்டும்.

(இவைகளில்) விசேஷித்து, வைசியர்களுக்கு ஞ்ஜானப் பியாஸாதிகளை கல்பிக்கவேண்டும். 83

அதற்கு வெளிக்கையில், (இரண்டாவது வரிசையில்) ஈசானதிக்கில், மஹாஜலாசயத்தைக்கல்பிக்கவேண்டும்.

தெற்கு திக்கு, அக்கினிமூலை, இவைகளின் மத்தியில், கோசாலையைக்கல்பிக்கவேண்டும். 84

மேற்கு, தென்மேற்கு திக்குகளின் மத்தியில், ஸூதி காவாஸம் (பிரசவசாலை) இருக்கவேண்டும் என்று கூறப் பட்டிருக்கிறது.

வாருணாநிலயோர்மத்யே ரோகார்தாநாம்
நிவாஸ: ஸ்யாத் ॥ ௮௫ ॥

ஸௌம்யவாயவ்யயோர்மத்யே பாலஶிக்ஷார்தமண்டப: ।
ஸௌம்யஶாங்கரயோர்மத்யே *தாந்யஸங்க்ரஹிகா பவேத் ॥

தத்பஹிர்ஹே த்விஜஶ்ரேஷ்ட தாஸீநாம் கணிகாநாம் ।
ந்ருத்தகேயாப்யாஸிநாம் ச க்ரயவிக்ரயஜீவிநாம் ॥ ௮௭ ॥

சக்ரிணாம் வாபகாநாம் ச கர்ஷகாணாம் ததைவ ச ।
மத்ஸ்யமாம்ஸோபஜீவாநாம் நடாநாம் (ந்ருத்த) காரக-
யோஷ்டாநாம் (யோஷிதாம்) ॥ ௮௮ ॥

மேற்கு திக்கு, வாயு மூலே, இவைகளின் மத்தியில், வியாதியினாலே துன்பமடைபவர்களின் வாஸஸ்தலம் வைத்திய உதவிக்கான சிகித்ஸாலயம் இருக்கவேண்டும்.

வடக்கு திக்கு வாயுதிக்கு, இவைகளின் மத்தியில் பாலர்களுக்கு கல்விகற்பிப்பதற்கான மண்டபத்தைக் கல்பிக்கவேண்டும்.

வடக்குதிக்கு ஈசானதிக்கு, இவைகளின் மத்தியில் தானியங்களை வைக்குமிடம் இருக்கவேண்டும். 86

ஹே அந்தணனே புத்திமானாக இருப்பவன், அதற்கு வெளியிலுள்ள வரிசையில், தாஸிகள், கணிகைகள், நாட்டியம் கானம் இவைகளைப்பியாஸம் செய்பவர்கள், பதார்த்தங்களை விலைக்கு வாங்கி விற்பவர்களான வியாபாரிகள், விதைப்பவர்கள், (பயிரிடுபவர்கள்) சக்கிரி எனப்படும் குயவர்கள், மத்ஸியம் மாம்ஸம் இவைகளினால் இவைகளை விற்று ஜீவிப்பவர்கள், நாட்டியக்காரர்கள் அவர்களின்

---

* தாந்யாநாம் ஸங்க்ரஹயே । இதி பாடாந்தர: ।

தாராஶ்ச (விஶேஷாத்) ஶூத்ராணாம் ச கோபாலானாம்
ச கர்மிணாம் ।
†காருணானாம் க்ருஹஶ்ரேணீ சாபஶஸ்த்ராலயஸ்ததா
(வநகம்) க்ரமாத் ॥ ௮௯ ॥

பஹிஸ் தஸ்ய ஈஶாந்ய திக்பாகே
(ஈ) ஶானபாகம் (ஸம்வேஶ ...) ।
தத்பாஹ்யே ஶ்வீஶதிக்பாகே ஶ்மஶானம் பரிகல்பயேத் ॥

தக்ஷிணே சோத்தரே வாபி ஸ்தபத்யாதி நிவாஸகம் ।
தேஷாம் பாஹ்யே து கர்த்தவ்யம் ரஜகானாம் நிவாஸகம் ॥

தத்பாஹ்யே க்ரோஶமாத்ரே து சண்டாலஶ்ரேணி-
ராவஸேத் ।

மனைவிகள், விசேஷித்து சூத்திரர்கள், இடையர்கள், கொல்லுவேலை செய்பவர்கள், தச்சர்கள் முதலானவர்கள், வில் முதலிய ஆயுதங்களை வைக்குமிடம் இவைகளை, முறையே, கிழக்கு முதல் ஈசானதிக்குவரையில் கல்பிக்க வேண்டும். 89½

அதற்கு வெளியில், ஈசானதிக்கில், ச்மசானத்தைக் கல்பிக்கவேண்டும். 90

தெற்கு திக்கிலாவது, வடக்கு திக்கிலாவது, ஸ்தபதி முதலியவர்களின் வாஸஸ்தானத்தைக் கல்பிக்கவேண்டும்.

அவைகளுக்கு வெளிக்கையில், ரஜகர்களின் (வண்ணான்களுடைய) வீடுகளிருக்கவேண்டும். 91

அதற்கு வெளியில், ஒரு 1 குரோசதூரத்தில் (கூப்பிடு

---

† தக்ஷாதீநாம், இதி பாடோ யுக்த: ।

ப்ராகாரலக்ஷணம் ஹ்யேவம் ப்ரோச்யதே த்விஜஸத்தம ||

இதி காஶ்யபஶில்பே ப்ராகாரலக்ஷணம் நாம
த்ரிசத்வாரிம்ஶ: படல: ||

—— O ——

தூரத்தில்) சண்டாளர்களின் சிரேணி இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

ஹே அந்தணனே! பிராகாரலக்ஷணமானது, இவ்விதமாகக்கூறப்பட்டிருக்கிறது. 92

காசியப சில்பத்தில் பிராகார லக்ஷணம் என்னும்
நாற்பத்திமூன்றாவது படலம் முற்றும்.

——*——

𑌅𑌥 𑌚𑌤𑍁𑌶𑍍𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

𑌮𑌣𑍍𑌡𑌪𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌅𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌮𑌣𑍍𑌡𑌪𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑍇 𑌹𑍍𑌯𑍇𑌕𑌭𑍌𑌮𑍇 𑌤𑍁 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍇
𑌮𑍁𑌖𑌮𑌣𑍍𑌡𑌪𑌃 ॥ ௧ ॥

𑌜𑌾𑌤𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌨𑌾𑌭𑌾𑌸𑌾𑌨𑌾𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌾𑌗𑍍𑌰𑌮𑍁𑌖𑍇 𑌚𑍈𑌵 𑌦𑌿𑌶𑌾𑌸𑍁 𑌵𑌿𑌦𑌿𑌶𑌾𑌸𑍁 𑌵𑌾 ॥

𑌆𑌰𑌾𑌮𑌾𑌣𑌾𑌂 𑌤𑍁 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌦𑌿𑌶𑌾𑌸𑍁 𑌵𑌿𑌦𑌿𑌶𑌾𑌸𑍁 𑌵𑌾 ।
𑌉𑌦𑍍𑌯𑌾𑌨𑍇 𑌵𑌾 𑌨𑌦𑍀𑌤𑍀𑌰𑍇 𑌤𑌟𑌾𑌕𑍇 𑌵𑌾 𑌯𑌥𑌾 𑌵𑌾𑌸𑌤𑌃 ॥ ௩ ॥

𑌦𑍇𑌵𑌾 (𑌵𑌾𑌸𑌾) 𑌰𑍍𑌥𑌂 𑌮𑌣𑍍𑌡𑌪𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌷𑍍
𑌅(𑌇)𑌷𑍍𑌟𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌮𑍁𑌖𑌮𑌣𑍍𑌡𑌪𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌤𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌷𑍍 𑌮𑌣𑍍𑌡𑌪𑌂 𑌤𑍁
𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌮𑍍 ॥ ௪ ॥

நாற்பத்திநான்காவது படலம்

மண்டபலக்ஷணம்

இனி, விசேஷித்து, மண்டபங்களின் லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

ஏகபூமிகமான பிராஸாதத்தில், முகமண்டபமானது, கூறப்பட்டிருக்கிறது.

ஜாதி, சந்தம், விகல்பம், ஆபாஸம், என்னும் பிராஸாதங்களின் முன்பக்கம், விதிக்குகள், உத்தியானம், நதீ தீரம், குளம் (குளக்கரை) இவைகளில் தேவதைகளை வைப்பதற்காக, (அல்லது தங்குவதற்காக) எட்டு 8 திக்கிலும் (அல்லது இஷ்டமான திக்கில்) முகமண்டபத்தைக் கல்பிக்கவேண்டும். அந்த மண்டபமானது நான்கு 4 விதமாகும்.

प्रथमं मुखमण्डपं (पं) स्यात् प्रतिमामण्डपं ततः ।
स्नापनार्थं तृतीयं स्यात् नृत्तार्थं च चतुर्थकम् ॥

तेष्वेवाद्यं पुरा प्रोक्तं द्वितीयादिरथोच्यते ।
अन्तर्हा(हा)राणि वैतानि मध्यहाराणि
(णि) वा कल्पयेत् ॥ ६ ॥

मण्डपं (पात्) मण्डपं तत्र शालाया वा (याः)
मण्डपान्तरम् ।
अन्तरालमिति ख्यातं तल्लक्षणं शृणु ॥ ७ ॥

முதலாவது, முகமண்டபமாகும். இரண்டாவது, பிரதிமாமண்டபமாகும். மூன்றுவது, ஸ்நாபநார்த்தமான (அபிஷேகத்திற்கான) மண்டபமாகும். நான்காவது, நிருத்த மண்டபமாகும். 5

அவைகளில், முதலாவது மண்டபமானது, முன்பு கூறப்பட்டிருப்பதைப் போன்றதாகும்.

இனி இரண்டாவது முதலிய மண்டபத்தைக் கூறு கிறேன்.

இவைகளை, அந்தர்ஹாரங்களாகவோ, மத்திய ஹாரங் களாகவோ கல்பிப்பதாகும். 6

அதில், மண்டபத்திலிருந்து (மற்றொரு) மண்டபத் தையோ, சாலையிலிருந்து மண்டபத்தையோ கல்பிக்க வேண்டும்.

இது, (இவ்விதம் கல்பிப்பது) அந்தராளம் என்று (இடைவெளி, அல்லது மத்தியம்) பெயருடையதாகும்.

முதலில் அதன் லக்ஷணத்தைக் கூறுகிறேன் கேழ்ப்பா யாக. 7

ஏகத்வித்ரிசதுஷ்பஞ்ச ஷட்ஸப்தாஷ்ட கரம் து வா ।
நவதசைககரம் வாபி ருத்ரஹஸ்தமதாபி வா ॥ ௮ ॥

மண்டபானாம் விசாலம் து ருத்ரஸம்க்யா ப்ரகீர்த்திதா ।
யத்ர யன்மண்டபம் கல்ப்யதே தத்ர பங்க்த்யா
விசேஷத: ॥ ௯ ॥

ஏகத்வித்ரிசதுஷ்பஞ்ச பங்க்த்யா மத்யபாககம் ।
ஸாவகாசாங்கணம் வா பித்திமத்யமதாபி வா ॥ ௰ ॥

பித்திமத்யாங்கணம் சேத் பார்ச்வயோ: ப்ரவேசஸம்யுதம் ।

மத்திய மண்டபத்தின் மத்திய விஸ்தாரமானது, ஒன்று 1, இரண்டு 2, மூன்று 3, நான்கு 4, ஐந்து 5, ஆறு 6, ஏழு 7, எட்டு 8, ஒன்பது 9, பத்து 10, அல்லது பதினொரு 11 முழமிருப்பதாகும். 8

இவ்விதமாக மண்டபத்தின் மத்திய விஸ்தாரமானது, பதினொன்று 11 விதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

எங்கு எந்த மண்டபமானது கல்பிக்கப்படுகின்றதோ, அங்கு, அது, பங்க்தியினாலே (பத்தியினாலே) விசேஷமுடையதாகும். 9

(மண்டபத்தின்) மத்திய பாகத்தை, ஒரு 1 பத்தி, இரண்டு 2 பத்தி, மூன்று 3 பத்தி, நான்கு 4 பத்தி, அல்லது, ஐந்து 5 பத்திகளுடன் கூடியதாக கல்பிப்பதாகும்.

(அல்லது) பித்தி மத்தியமாக (சுவருகளின் மத்தியில்) போதுமான அல்லது அதிகமான இடைவெளியுள்ளதாகக் கல்பிப்பதுமாகும். 10

மண்டபத்தின் மத்தியமானது, சுவருகளின் நடுவிலிருந்தால், அது, இரு பக்கங்களிலும் வேசம் (நடைபாதை) உள்ளதாக இருக்கவேண்டும்.

[1] 𑌏𑌕𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾 𑌵𑍇𑌶𑌂 𑌸𑌮𑍍𑌮𑍁𑌖𑌮𑍇𑌵 𑌵𑌾 ।

𑌦𑍍𑌵𑌯𑍋𑌃 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑍍𑌯𑍋𑌶𑍍𑌚 𑌦𑍍𑌵𑌾𑌰𑌂 𑌜𑌾𑌲𑌕𑌂 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌉𑌤𑍍𑌤𑌰𑍇 𑌜𑌲𑌧𑌾𑌰𑌾𑌂 𑌚 𑌸𑍍𑌨𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௰௨ ॥

𑌯𑍁𑌗𑍍𑌮𑌾𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 (𑌗𑍍𑌮𑌾) 𑌤𑍁 𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌣𑍍𑌡𑌪𑍇
(𑌦𑍍𑌵𑍇) 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮 ।
𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌦𑌿𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌮𑌣𑍍𑌡𑌪𑌸𑍍𑌯 𑌸𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௰௩ ॥

𑌏𑌵𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌮𑌣𑍍𑌡𑌪𑌂 ।

வேசமானது[2] முன்பக்கத்தில் ஒன்று 1, இரண்டு, அல்லது மூன்று 3, தூண்களுடன் இருக்கவேண்டும். ஒரே பத்தியாக இருப்பதுமாகும். (இரண்டு பத்தி, அல்லது ஒரு பத்தி நடைபாதையிருக்கவேண்டும்.) 11

இரண்டு பத்திகளின் நடுவிலேயும் துவாரமிருப்பதாகும். அல்லது ஜாலகத்தைக் கல்பிப்பதுமாகும்.

மண்டபத்தின் வடதிசையில், ஸ்நானார்த்தமான (ஸ்நானம் செய்தால், ஜலம் ஓடுவதற்காக) ஜலதாரையை கட்டிக்கவேண்டும். 12

ஹே அந்தணனே! மண்டபத்தில் பத்தியானது, ஒத்தைப்படையாகவோ, இரட்டைப்படையாகவோ இருப்பதாகும்.

அதிஷ்டானாதிகளான ஸகல அங்கங்களும், மண்டபத்திற்கு ஸமமாக (ஏற்றதாக) இருக்கவேண்டும். 13

இவ்விதமாக, மண்டபத்தின் மத்தியமானது கூறப்பட்டிருக்கிறது.

---

1. 𑌵𑍇𑌶𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾, 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 ।

2. இரண்டு 2, அல்லது மூன்று 3, பாதங்கள், என்றிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

த்ரிஹஸ்தம் து ஸமாரப்ய த்வித்விஹஸ்தவிவர்த்திதா: ॥ ௰௪ ॥

†ஏகோநவிம்ஶம் து நவதா மண்டபம் பவேத் ।
ஆபாஸஸதநாநாம் து ஆபாஸம் மண்டபம் பவேத் ॥

ஏகவிம்ஶதி ஹஸ்தாதி த்வித்விஹஸ்தவிவர்த்திதா: ।
ஸப்தத்ரிம்ஶதிஹஸ்தாந்தம் விகல்பம் நவதா பவேத் ॥ ௰௫ ॥

ஆபாஸாநாம் ச தத்யோக்யம் ஸ்வஸ்யயோக்யமதாபி வா ।
நவத்ரிம்ஶதிமாரப்ய த்வித்விஹஸ்தவிவர்த்திதா: ॥ ௰௬ ॥

பஞ்சாயிகம் து பஞ்சாஶத்கராந்தம் ஸமுச்யதே ।

இனி மண்டப லக்ஷணத்தைக் கேழ்ப்பாயாக.

மூன்று 3, ஹஸ்தம் முதல், பத்தொன்பது 19 ஹஸ்தம் வரையில், இரண்டு 2, இரண்டு 2, ஹஸ்தம் விதம் கூட்டி வர, மண்டபமானது (மண்டபத்தின் மானமானது) ஒன்பது 9 விதமாகும்.

ஆபாஸ ஸதனங்களில், ஆபாஸ மண்டபமிருக்க வேண்டும். 15

இருபத்தோரு 21 ஹஸ்தம் முதல், முப்பத்தேழு 37, ஹஸ்தம் வரையில், இரண்டு 2, இரண்டு 2, ஹஸ்தம் விதமாகக் கூட்டிவர, விகல்ப மண்டபமானது, ஒன்பது 9, விதமாகும். 16

அது (அந்தமானமானது) ஆபாஸ மண்டபங்களுக்கும் தகுந்ததாகும். அல்லது, தனக்கு (விகல்ப மண்டபத்திற்கு) தகுதியுள்ளதுமாகும்.

முப்பத்தொன்பது 39, ஹஸ்தம் முதல் ஐம்பத்தைந்து 55, ஹஸ்தம் வரையில், இரண்டு 2, இரண்டு 2, ஹஸ்தம்

---

† ஏகோநவிம்ஶத்கராந்தம், இதி வா பாட: ।

ஸப்தஸங்க்யாஸ்யாத் விவிஸப்தவிவர்த்தநாத் ॥ ௰௭ ॥

ஸார்த்தஸப்தத்ரிஹஸ்தாந்தம் ப்ரஸரதா ஜாதிரூபதே ।
தத்விஸ்தாரஸமம் தீர்க்கம் ஸமாச்ரம் மண்டபம் பவேத் ॥ ௰௯ ॥

ஸார்த்தஹஸ்தாதிஹஸ்தாந்தம் ஷட்ஷடங்குலவர்த்தநாத் ।
பங்க்திஹஸ்தாவதிர்யாவத் பங்க்திவ்யாஸம் து
கல்பயேத் ॥ ௨௰ ॥

அர்த்தஹஸ்தம் ஸமாரப்ய யாவத் பஞ்சகராவதி ।
த்ர்யங்குலம் த்ர்யங்குலிவ்ருத்யா து பங்க்திவ்யாஸம்
ப்ரகல்பயேத் ॥ ௨௧ ॥

விதம் கூட்டி வர, சந்தமண்டபமானது, (ஒன்பது 9 வித மாகும்) என்று கூறப்பட்டிருக்கிறது. 17½

ஐம்பத்தேழு 57, ஹஸ்தம் முதல் எழுபத்திமூன்று 73, ஹஸ்தம் வரையில் கூட்டிவர, ஜாதி மண்டபத்தின் விஸ்தார மானது, (ஒன்பது 9, விதமாகும்.) என்று கூறப்பட்டிருக் கிறது.

அவைகளின் விஸ்தாரத்திற்கு ஸமமான நீள முடையது ஸமாச்ர மண்டபமாகும். 19

ஒண்ணரை 1½ ஹஸ்தம் முதல், ஐந்து 5, ஹஸ்தம் வரையில், ஆறு 6, ஆறு 6, அங்குலம் விதம் கூட்டிவர வேண்டும், இவை ஒவ்வொன்றும் பங்க்தி (பத்தி) யின் விஸ்தாரமாகக் கல்பித்துக்கொள்ளவேண்டும். 20

அரை ½, ஹஸ்தம் முதல், ஐந்து 5, ஹஸ்தம் வரையில், மூன்று 3, அங்குலம் விதம் கூட்டிவரவேண்டும், இவை களில் ஒவ்வொன்றும் பத்தியின் மானமாகும், 21

ஸார்த⁴த்³விஹஸ்தமாரப்⁴ய ஷட³ங்கு³லவிவர்த⁴நாத் ।
1 ஸ்தம்பா⁴நாமுத³யம் ஹ்யேவம் ஸ்தம்ப⁴வ்யாஸமதோ²ச்யதே ॥

வஸ்வங்கு³லம் ஸமாரப்⁴ய அர்தா⁴ங்கு³லவிவர்த⁴நாத் ।
ஏகோநவிம்ஶமாத்ராந்தம் த்ரயோவிம்ஶாம்ஶ விஸ்த்ருதம் ॥

பாதோ³ச்சம் த்³வாத³ஶருத்³ராம்ஶே (ஶம்) த³ஶைவ வாஷ்ட
வா ஹ்ருதே ।

---

*இரண்டரை 2½, ஹஸ்தம் முதல் (மயமதம், எட்டு 8, ஹஸ்தம் வரையில்) ஆறு 6 அங்குலம் விதம், (மயமதர்,- அல்லது மூன்று 3, அங்குலம் விதம்) கூட்டிவர ஒவ்வொன்றும் ஸ்தம்போச்சமாகும்.

இவ்விதமாக ஸ்தம்போச்சமானது கூறப்பட்டிருக்கிறது.

இனி, ஸ்தம்பத்தின் விஸ்தாரமானது கூறப்படுகிறது.

பாதத்தின் விஸ்தாரமானது, எட்டு 8, அங்குலம் முதல் பத்தொன்பது 19, அங்குலம் வரையில், அரை ½, அங்குலம் விதம் கூட்டிவர, இருபத்துமூன்று 23, விதமாகும். 23

பாதோச்சத்தை பன்னிரண்டு 12 பாகம், பதினொன்று 11 பாகம், பத்து 10 பாகம், அல்லது, எட்டு 8 பாகமாகச்

---

1. அத்ர ஸ்தம்போ⁴ச்ச்ராயவிதா⁴யகம் ஶ்லோகார்த⁴ம் நஷ்டம் பா⁴தி । அதோ மயமதோக்தம் ஶ்லோகார்த⁴ம் யோஜிதம் ।

“ யாவத³ஷ்டகரோத்ஸேத⁴ம் த்ர்யம்ஶம் மாத்ரைர்விவர்த⁴யேத் வா । ”

*இங்கு விட்டுப்போயிருக்கும் விஷயமானது, மயமதத்தில் கூறியுள்ளதைப்போல் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஏகாம்ஸம் ஸ்தம்பமூலாம்ஸம் † தந்தயுக்தம் ச சிகரம் ॥ ௨௪ ॥

தலோச்சம் ஸ்தம்பதுங்கார்தம் ஸாமான்யம் ஸர்வமண்டபே ।
தலோச்சம் தத்ர பஞ்சாம்ஸே த்விபாகம் வ (வா)
தலோதயம் ॥ ௨௫ ॥

மஸூரம் ஸ்தம்பதுங்காத் து பஞ்சவேதாம்ஸ

கமேவ (கமேவ) வா ।

உபபீடயுக்தாஷ்டானம் கேவலம் வா மஸூரகம் ॥ ௨௬ ॥

தராதலஸமம் ப்ரோக்தம் உபபீடோச்சம் ஏவ வா ।
உபபீடோதயம் ப்ரோக்தம் உபபீடாக்ய (க்ய) மேவ வா ।

செய்துகொள்ளவேண்டும். அவைகளில், ஒரு ¹, பாகமானது ஸ்தம்ப மூலத்தின் விஸ்தாரமாகும். அதன் உச்சியானது தந்தத்துடன் கூடியதாக இருக்கவேண்டும். (தந்தம்—கூறு, சிகை.) 24

தலத்தின் உயரமானது, தூணின் உயரத்தில் அரை ½ பங்காகும்.

இது ஸகல மண்டபங்களுக்கும், ஸாதாரணமாகக் கூறப்பட்ட விதியாகும்.

தலிபத்தின் உயரத்தில், ஐந்தி 5 ல் இரண்டு 2 பாகமானது, தலோதயமாகும். 25

மஸூரகமானது, தூணின் உயரத்தில், ஐந்து 5, அல்லது நான்கி 4 ல் ஒருபாக மிருப்பதாகும்.

அது, (தலமானது) உப பீடத்துடன் கூடியதாகவோ, அதிஷ்டானமாகவோ (உபபீடமில்லாத அதிஷ்டானமாகவோ) மஸூரகமாகவோ இருப்பதாகும். 26

உபபீடத்தின் உயரமானது, தராதலத்திற்கு ஸமமாக இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது (அதைப்

† தந்தயுக்தம் ச சிகரம் । இதி வா பாடோ யுக்த: ।

𑌉𑌪𑌪𑍀𑌠𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌂 𑌚𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑌰𑌂 𑌤𑌥𑌾 ।
𑌨𑍀𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌿𑌵 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ॥ ௨௮ ॥

𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌤𑍍𑌰𑌯𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌷𑍋𑌡𑌶𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌷𑍋𑌡𑌶𑌾𑌲𑍍𑌪𑌨𑌾𑌸𑌿𑌕𑍋𑌪𑍇𑌤𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌕𑍂𑌟𑌂 𑌤𑍁 𑌏𑌵 𑌵𑌾 ॥

𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌂 𑌵𑌾𑌥 𑌸𑌰𑍍𑌵𑌤𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑍍𑌵𑌾𑌰𑌯𑍁𑌤𑌂 𑌤𑍁 𑌵𑌾 ।
𑌅𑌷𑍍𑌟𑌦𑌿𑌗𑍍𑌦𑍍𑌵𑌾 (𑌕𑍍𑌦𑍍𑌵𑌾) 𑌰𑌮𑍇𑌕𑌂 𑌵𑌾 𑌦𑍍𑌵𑌯𑌂 𑌵𑌾
†𑌜𑌾𑌲𑌕𑍋𑌷𑍍𑌠𑌿𑌕𑍈𑌃 ॥ ௩௰ ॥

𑌬𑌾𑌹𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌂
𑌤𑍋𑌰𑌣𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ।

போல்) இரண்டு 2 பங்கு, அல்லது மூன்று 3, பங்கு இருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. உபபீடத்திற்குக் கூறப்பட்டிருப்பதைப்போலிருப்பதுமாகும். 27

உபபீடம், அதிஷ்டானம், சரணம், பிரஸ்தரம், நீப்ர வேசம், அலங்காரம், இவைகளை முன்பு கூறியிருப்பதைப் போலவே கல்பித்துக்கொள்ளவேண்டும். 28

மூன்று 3, பத்திகளுடன் கூடியதாக இருக்கவேண்டும். பதினாறு 16, தூண்களிருக்கவேண்டும். பதினாறு 16, அல்ப நாஸிகளுடையதாக இருக்கவேண்டும். அதன் மத்தியத்தில் கூடமிருக்கவேண்டும். அல்லது எங்கும் மண்டிதமாக (கூடமாக) இருப்பதுமாகும். நான்கு 4, (திக்குகளிலும்) துவாரமுடையதாகவோ, அல்லது, எட்டு 8, திக்குகளிலும துவாரமுடையதாகவோ, அல்லது, ஒரே துவாரமுடையதாகவோ, அல்லது, இரண்டு 2, ஜாலகங்களுடையதாகவோ (எட்டு 8, திக்குகளிலும் ஜாலகங்களுடையதாகவோ) இருப்பதாகும். 30

அது, அதன் வெளியில். தோரணங்களினாலே அலங்

---

† 𑌜𑌾𑌲𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 । 𑌉𑌤 𑌵𑌾 𑌵𑌾𑌰𑌿𑌣𑌾 𑌯𑍁𑌤𑌃 ।

तोरणादिविहीनं वा कल्पयेदेवं प्रथमं
(मण्डपं) भवेत् ॥ ३१ ॥

चतुर्भक्त्या विशालं तु अष्टदिग्द्वारसंयुतम् ।
*पूर्वापरद्व्येकभक्त्या विस्तारनीव्रकम् ॥ ३२ ॥

मध्यस्तम्भं परित्यज्य मध्यं (मध्ये) कूटं
द्विभक्तिकम् ।
अष्टपञ्जरसंयुक्तं द्वितीयं मण्डपं भवेत् ॥ ३३ ॥

पञ्चभक्त्या विशालं तु मध्ये कूटं द्विभागकम् ।

காரம் செய்யப்பட்ட படிக்கட்டுகளுடையதாக இருக்க வேண்டும். படிக்கட்டானது தோரணுதிகளில்லாமலிருப்பதுமாகும்.

இவ்விதம் கல்பிக்கப்படுவது முதலாவது மண்டபமாகும். 31

நான்கு 4, பத்தி விஸ்தாரமுடையதானுல், எட்டு 8, திக்குகளிலும் துவாரமுடையதாகவு மிருக்கவேண்டும்.

கிழக்கிலும், மேற்கிலும், இரண்டு 2, அல்லது ஒரு 1, பத்தி நீப்ரமுடையதாக இருக்கவேண்டும்.

மண்டபத்தின் மத்திய கூடமானது, தூணில்லாமல் இரண்டு 2, பத்தியுடையதாக இருக்கவேண்டும். அதில், எட்டு 8, பஞ்சரங்களிருக்கவேண்டும்.

இவ்விதமிருப்பது இரண்டாவது மண்டபமாகும். 33

ஐந்து 5, பத்தி விஸ்தாரமுடையதாக இருக்கவேண்டும். அதன் மத்தியில், இரண்டு 2, பத்தி விஸ்தாரத்தில் கூடமிருக்கவேண்டும்.

---

* पूर्वे चापरयोर्द्व्येक, इति वा पाठः ।

ஶ்லிஷ்டம் । ஸஹிதம் த்வாத்ரிம்ஶத்ஸ்தம்பஸமந்விதம் ।
நாஸிகாவிம்ஶதிஶ்சதுர்² ஸம்யுக்தம் பஞ்ஜராஷ்டக-
ஸம்யுதம் ।
ஸ்வேஷ்டதிக்த்வாரஸம்யுக்தம் த்வாரஹீநேஷு குட்யகம் ॥ ௩௫ ॥
த்வாரஸ்தானே து ஸோபானம் ஸர்வாலங்காரஸம்யுதம் ।
குட்யகும்பலதாத்யைஸ்து பூஷிதம் து த்ருதீயகம் ॥
சதுரஶ்ரம் து ஷட்பக்த்யா மத்யகூடம்
த்வி (த்வி) பாகயா (கம்) ।

மண்டபத்தைச் சுற்றிலும் முப்பத்திரண்டு 32, தூண்களிருக்கவேண்டும்.

அதில் இருபத்தினுன்கு 24, நாஸிகளும், எட்டு 8, பஞ்ஜரங்களுமிருக்கவேண்டும்.

மனதிற்குகந்த திக்கில் துவாரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும்.

துவாரமில்லாத மற்ற திக்குகளில் குட்டியமிருக்க வேண்டும். (குட்டியம்—சுவர்)

துவாரமிருக்குமிடத்தில், ஸகல அலங்காரங்களுடனும் கூடிய படிக்கட்டு இருக்கவேண்டும்.

குட்டிய கும்ப லதை முதலியவைகளினுலே (குட்டியமானது, கும்பம், லதை, முதலியவைகளினுலே) அலங்காரம் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

இவ்விதமிருப்பது, மூன்றுவது மண்டபமாகும். 36

சதுரச்ரமாகவும், ஆறு 6, பத்திகளுடையதாகவுமிருக்கவேண்டும், அதன் மத்திய கூடமானது, இரண்டு 2, பாகங்களையுடையதாக இருக்கவேண்டும்.

---

1. ஸஹிதஞ்சைவ, இதி வா பாடோ ஞாதும் ।
2. ஸாமாந்யம், இதி வா பாடோ ஞாதும் ।

தந்மத்யகூடமஷ்டபாதாட்யம் மத்யே ரங்கஸமாயுதம் ॥ ௩௭ ॥

சதுர்த்வாரஸமாயுக்தமிஷ்டதிக்கே த்வாரமேவ வா ।
த்விபக்திகம் ச ஹார (த்விவா) கம் சைவ ஸக்த்யாதி
பேதஸமாயுதம் ॥ ௩௮ ॥

அஷ்டதிக்ஷு பத்ரஸம்யுக்தம் சதுர்பத்ரமேவ வா ।
†சத்வாரிம்ஶதஷ்டாங்க்ரி யுக்தம் வா தத்ர
யோ (யொ) ஜிதம் ॥ ௩௯ ॥

சதுர்விம்ஶால்பநாஸ்யாட்யம் குட்யகும்பலதாந்விதம் ।

அந்த மத்திய கூடமானது, எட்டு 8, பாதங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும். (அதன் மத்தியில் தூண் இருக்கக்கூடாது என்பது பொருள்.) மத்தியில் ரங்கத்துடன் கூடியதாக இருக்கவேண்டும். 37

(மண்டபத்தின் நான்கு பக்கங்களிலும்) நான்கு 4, துவாரங்கள் இருக்கவேண்டும். அல்லது, இஷ்டமான திக்கில் (ஒரு 1) துவாரமிருப்பதுமாகும்.

(அதன் மத்திய கூடமானது) இரண்டு 2, பத்திகளினாலே சூழப்பட்டிருக்கவேண்டும். அது, முதல் பத்தி, இரண்டாவது பத்தி, என்று பிரித்துக் காட்டுவதாக இருக்க வேண்டும். 38

(மண்டபத்தின்) எட்டு திக்குகளிலும் பத்திராலங்காரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும். அல்லது, நான்கு 4, திக்குகளில் பத்திரத்துடன் கூடியதாக இருக்க வேண்டும்.

அது நாற்பத்தெட்டு 48, தூண்களுடன் கூடியதாக இருக்கவேண்டும். இருபத்துநான்கு 24, அல்ப நாஸிகளுடன் கூடியதாக இருக்கவேண்டும். குட்டியமானது, கும்பம், லதை, இவைகளுடன கூடியதாக இருக்கவேண்டும்.

† அஷ்டசத்வாரிம்ஶதங்க்ரி, இதி பாடோ யுக்த: ।

தோரணாஷ்டகஸம்யுக்தம் த்ருதீயம் (துரீயம்)
மண்டபம் ஸ்ம்ருதம் ॥ ௪0 ॥

சதுரச்ரம் து ஸப்தாம்சம் ஷஷ்டிஸ்தம்பஸமாயுதம் ।
நவாம்சேந து மத்யே து கூடம் வா அங்கணம் பவேத் ॥ ௪௧ ॥

த்வாத்ரிம்சதல்பநாஸ்யா வா திக்ஷு பத்ரஸமாயுதம் ।
த்ரிபாகைகாம்சவிஸ்தாரநிர்கமம் முகபத்ரகம் ॥ ௪௨ ॥

மத்யே ரங்கஸமோபேதம் இ(ஷ)ஷ்டகுட்யஸமந்விதம் ।
ஸர்வாலங்காரஸம்யுக்தம் பஞ்சமம் பரிகீர்த்திதம் ॥ ௪௩ ॥

எட்டு 8, தோரணங்களுடன் கூடியதாக இருக்க வேண்டும். இது நான்காவது மண்டபமாகும். 40

சதுரச்ரமாகவும், ஏழு 7, பத்திகளுடன் கூடியதாகவுமிருக்கவேண்டும். அது அறுபது 60, பாதங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

அதன் மத்தியில், ஒன்பது 9, பாகங்களுடன் கூடியதான கூடமிருக்கவேண்டும். அது அலங்காரமான அங்கணமாக இருப்பதுமாகும். 41

அது முப்பத்திரண்டு 32, அல்ப நாஸிகளுடன் கூடியதாகவும், நான்கு 4, திக்குகளிலும் பத்திராலங்காரத்துடன் கூடியதாகவுமிருக்கவேண்டும்.

அதன் முகபத்திரமானது, மூன்றில் 3 ல் ஒரு 1, பங்கு விஸ்தாரமான நிர்கமத்துடன் கூடியதாக இருக்கவேண்டும்.

அதன் மத்தியமானது, ரங்கத்துடன் கூடியதாக இருப்பதுமாகும்.

இஷ்டமான (திக்கில்) குட்டியத்துடன் கூடியதாக இருக்கவேண்டும்.

ஸகலவிதமான அலங்காரங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

இவ்விதமிருப்பது, ஐந்தா 5 வது மண்டபமாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. 43

चतुरश्रमष्टपङ्क्त्या तु *अशीतिस्तम्भान्वितम् ।
तन्मध्ये मध्यकूटं तु चतुष्पङ्क्तिसमन्वितम् ॥

चतुर्दिक्षु द्वारसंयुक्तमिष्टदिक्षु द्वारमेव वा ।
पादे सोपानकं त्र्यंशे द्वारं नीव्रसमन्वितम् ॥ ௪௫ ॥

मध्यरङ्गसमायुक्तं षडष्टनालिकान्वितम् ।
सर्वालङ्कारसंयुक्तं सप्तमं (षष्ठं तु)
मण्डपं भवेत् ॥ ௪௬ ॥

சதுரச்ரமாகவும், எட்டு 8, பத்திகளுடையதாகவுமிருக்கவேண்டும். அது [1]எழுபத்திரண்டு 72, தூண்களுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

அதன் மத்தியில், மத்தியகூடமானது நான்கு 4, பத்திகளுடன் கூடியதாக இருக்கும்படி கல்பிக்கவேண்டும்.

நான்கு திக்குகளிலும் துவாரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும். அல்லது இஷ்டமான (ஒரே) திக்கில் துவாரமுள்ளதாக இருப்பதுமாகும்.

முன்பக்கத்தில் படிக்கட்டானது, மூன்றில் ஒரு 1, பாகமிருக்கவேண்டும். அது, துவாரத்தின் நீப்ரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும். 45

மத்திய ரங்கத்துடன் கூடியதாகவும், 6×8= நாற்பத்தெட்டு 48 நாளிகளுடன் கூடியதாகவும், ஸகல அலங்காரங்களுடன் கூடியதாகவுமிருக்கவேண்டும். இது ஏழாவது (ஆறுவது) மண்டபமாகும். 46

---

* द्विसप्ततिस्तम्भसंयुतम् । इति पाठः पाठान्तरः ।

1 எண்பது 80, என்பது, எழுபத்திரண்டு 72, என்று திருத்தப்பட்டிருக்கிறது. இதுவே பொருந்தும்.

[1 चतुरश्रं नवांशं तु षण्णवत्यंघ्रिसंयुतम् ।
मध्यकूटं त्रिभागं स्याच्चतुर्दिक्द्वारसंयुतम् ॥

इष्टदिग्द्वारमेवाग्रे सोपानसंयुतम् ।
सर्वालङ्कारसंयुक्तं सप्तमं मण्डपं भवेत् ॥]

चतुरश्रं दशांशं तु द्वादशाधिकशतांघ्रिकं
(द्वादयधिकशतांघ्रिकम् ।

मध्ये षोडशभागस्य (मध्य) कूटसमायुतम् ॥

कूटोपरि नीव्रांशं (नीप्रांशं) चान्तरालं
प्रकल्पयेत् ।

---

2 [சதுரச்ரமாகவும், ஒன்பது 9 பத்திகளுடையதாகவும் தொண்ணூத்தாறு 96 பாதங்களுடையதாகவுமிருக்க வேண்டும்.

மத்தியகூடமானது, மூன்று 3 பாகமாகும் நான்கு 4 திக்குகளிலும் துவாரங்களிருக்கவேண்டும். இஷ்டமான திக்கில் துவாரமிருப்பதுமாகும். முன் பக்கத்தில் படிகட்டு இருக்கவேண்டும். ஸகலவிதமான அலங்காரங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும். இது, ஏழா 7 வது மண்டபமாகும்.]

சதுரச்ரமாகவும், பத்து 10 பத்திகளுடையதாகவுமிருக்கவேண்டும். (இது 112 தூண்களுடையதாகும்.)

மத்தியில் பதினாறு 16 பாகங்களைக்கொண்ட மத்திய கூடத்துடன் கூடியதாக இருக்கவேண்டும். 47

கூடத்திற்குமேலே நீவ்ருதாம்சத்தில் (நீப்ராம்சத்தில்) இடைவெளியை கல்பிக்கவேண்டும்.

---

1. अत्र नवपङ्क्तिकं चतुरश्रमण्डपं नष्टं भाति । पाठोऽयमत्र यथोचितं योजितं भवति ।

2. இங்கு 9 பக்தியுடன் கூடிய மண்டபம் விட்டுப்போயிருக்கிறது. அது, இடதத்ற்கேற்றவாறு சேர்க்கப்பட்டிருக்கிறது.

पार्श्वाग्रतोऽथवा सोपानं दिक्षु
(पूर्व) भद्रसमन्वितम् ॥ ४८ ॥

सर्वालङ्कारसंयुक्तमष्टमं मण्डपं भवेत् ।

एकादशपङ्क्त्या चतुरश्रं तन्मध्ये द्व्यंशेन कूटकम् ॥

अग्रे सोपानसंयुक्तमि(दि)ष्टदिक्षु
भद्रसंयुतम् ।

द्वारं तत्रैव(त्र) कुड्यमिष्टभागावसानकम् ॥

முன் பக்கத்தில், பக்கங்களிலிருந்து, அல்லது பக்கங்களிலும், முன்பக்கத்திலும், படிக்கட்டிருக்கவேண்டும்.

திக்குகளில் (முன்பக்கத்தில்) பத்திராலங்காரம் இருக்க வேண்டும். அது ஸகல அலங்காரங்களுடனும் கூடியதாக இருக்கவேண்டும். இது எட்டாவது மண்டபமாகும். 48½

பதினொன்று 11 பத்திகளுடன் கூடியதாகவும் சதுரச்ர மாகவுமிருக்கவேண்டும்.

அதன் மத்தியில் இரண்டு 2 அம்சங்களினாலே கூடம் இருக்கவேண்டும். (இது நூத்திநாற்பது 140 தூண்களுடையதாகும்.) 49

முன் பக்கத்தில் படிக்கட்டுடன் கூடியதாக இருக்க வேண்டும். இஷ்டமான திக்கில் (எட்டு 8 திக்கிலும்) பத்திரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும்.

அவ்விடத்திலேயே (முன்பக்கத்திலேயே) துவாரமிருக்கவேண்டும்.

வேண்டுமான பாகம் வரையில் குட்டியமிருப்பதாகும்.

[அல்லது, எட்டுதிக்குகளிலும் பத்திரத்துடன் கூடியதாகவும், அதன் முன்பக்கத்தில் படிக்கட்டுகளுடையதாகவும், துவாரமுடையதாகவுமிருக்கவேண்டும். துவாரம் நீங்கியவிடத்தில் இஷ்டபாகத்தின் அவஸானம் வரையில், அதாவது, திக்குக்கோடிவரையில் குட்டியாம்சமாக, குட்டியத்துடன் கூடியதாக இருக்கவேண்டும். என்றும் பொருள் கொள்ளுவது பொருந்தும்.) 50

ஸர்வாலங்காரஸம்யுக்தம் நவமம் மண்டபம் பவேத் ।
த்வாதஶாம்ஶே யுதாஶ்ரம் து மத்யே த்வ்யம்ஶேந கூடகம் ॥
மண்டபஸ்ய து பாஹ்யே து அம்ஶேநாலிந்த்ர
(ந்த) மிஷ்யதே ।
[1] தத்வம்ஶேந து விஸ்தாரநிஷ்க்ராந்த: ஸ்யாச்சதுர்திஶி ॥
ஸாஷ்டஷஷ்டிஶதம் (ஶதம்) பதமாத்யாங்கே து
பரிகல்பயேத் ।

ஸகலவிதமான அலங்காரங்களுடனும் கூடியதாக இருக்கவேண்டும். இவ்விதமிருப்பது ஒன்பதா 9 வது மண்டபமாகும்.

பன்னிரண்டு 12 அம்சங்கள் (பத்திகள்) உள்ளதாகவும் சதுரச்ரமாகவுமிருக்கவேண்டும்.

அதன் மத்தியில், இரண்டு 2 அம்சத்தினுலே கூடமிருக்கவேண்டும். 51

மண்டபத்திற்கு வெளியில், ஒரு 1 அம்சத்தினுலே (ஒரு 1 பத்தி அளவில்) அளிந்திரம் (அளிந்தம்) இருக்கவேண்டுமென்று விரும்பப்படுகிறது. (அளிந்தம் — வாசல்படிக்கு வெளியிலுள்ள இடம் தாவாரம், அல்லது (காறடு என்பதாகும்.)

[2]அதைப்போல் இரண்டு 2 பங்கு விஸ்தாரமுடையதான நிஷ்கிராந்தமானது (வெளியில் செல்லக்கூடிய பாதையானது), நான்கு 4 திக்குகளிலுமிருக்கவேண்டும். 52

இதன் முதலாவது அங்கத்தில் நூத்தறுபத்தெட்டு 168 பதங்களைக் கல்பித்துக்கொள்ளவேண்டும்.

---

1. தத்³வ்யம்ஶேந து விஸ்தாரம் நிஷ்க்ராந்தம் ஸ்யாச் சதுர்திஶி । இதி வா பாட²: ஶோதநீயோ பாதி ।

2. இங்கு மூலபாடம் பிழை நிறைந்திருப்பதால் திருத்தப்பட்டிருக்கிறது.

ஸர்வாலங்காரஸம்யுக்தம் தசமம் மண்டபம் விசேஷ ॥ ௫௫ ॥

[1] தாலம் த்ரயோதசாம்சேந மத்யே த்ர்யம்சேந கூடகம் ।
இஷ்டதிக் கோஷ்டஸம்யுக்தம் சதுர்திக்ஷு பத்ரஸம்யுதம் ॥

அக்ரதோ நவபாகேந முகபத்ரம் ப்ரகல்பயேத் ।
[2] ஸசயம் நவதீஹஸ்தாக்ர ஹஸ்தாம்க்ரி வ (க) ஸம்யுதம் ॥ ௫௬ ॥

ஸர்வாலங்காரஸம்யுக்தம் ஏகாதசம் பத்ரஸம்ஜ்ஞகம் ।

இது, ஸகலவிதமான அலங்காரங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும். இது, பத்தா 10 வது மண்டபமாகும்.

[3] பதிமூன்று பத்திகளிருக்கவேண்டும். நடுவில் மூன்று 3 அம்சத்தில் கூடமிருக்கவேண்டும்.

இஷ்டமான திக்கில் குட்டியமிருக்கவேண்டும். நான்கு 4 திக்கிலும் பத்திரத்துடனிருக்கவேண்டும். 54

முன் பக்கத்தில், ஒன்பது 9 பாகத்தில் முக பத்திரத்தைக் கல்பிக்கவேண்டும். அது, நூற்றித்தொண்ணூற்றிரண்டு 192 பாதங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

ஸகலவிதமான அலங்காரங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும். இது, பதினொன்றாவது மண்டபமாகும்.

---

1. ஆயதஅந்தராச்சதுரச்ரலக்ஷணமத்யே யோஜிதா: ஸார்த்த ச்லோகா: ப்ரகரணாந்தரோபயோகத்வாத் அத்ர யோஜிதா: ।

2. த்விநவத்யதிகசததலம்வர்காம்க்ரி ஸம்யுதம் । இதி பாடோ யுக்த: ।

3. 13 பத்திமுதல் 16 பக்திவரையிலுள்ள சதுரச்ர மண்டப லக்ஷணமானது, நீண்ட சதுரச்ர மண்டப லக்ஷண மத்தியில் பதிக்கப்பட்டிருக்கிறது, அது இடத்திற்குப் பொருத்தமாக இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது.

1[[illegible] ।
[illegible] ।

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।]
[illegible] ॥ ௫௬ ॥

1[பதினான்கு 14 பந்திகளுடன் கூடியதாக இருக்க வேண்டும். மத்தியில் நான்கு 4 அம்சங்களில் கூடமிருக்க வேண்டும். அதில், இருநூற்றிப்பதினாறு 216 தூண்களிருக்கவேண்டும்.

நான்கு திக்குகளிலும் பத்திராலங்காரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும.

இஷ்டமான திக்குகளில் குட்டியத்தை (சுவற்றை)க் கல்பிக்கவேண்டும்.

முன் பக்கத்தில் ஒன்பது 9 பாகங்களில் முகபத்திரத்தைக்கல்பிக்கவேண்டும்.

ஸகல விதமான அலங்காரங்களுடனும் கூடியதாக இருக்கவேண்டும். இது, பன்னிரண்டாவது 12 வது மண்டபமாகும்.

பதினைந்து 15 பத்தி விஸ்தாரமும் நீளமுமுள்ளதான சதுரச்ரமாக இருக்கவேண்டும். 56

---

1. [illegible] ।

3. 14 பத்திமண்டபம் மூலத்தில் விட்டுப்போயிருக்கிறது. அது, இடத்திற்கேற்றமுறையில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

மத்யகூடம் த்ர்யம்ஶேந [1] ஶ்லேஷேண ஸம்யுக்தஸமன்விதம் |
த்ர்யம்ஶம் விஸ்த்ருதாயாம் முகபத்ரஸமன்விதம் || ருஎ ||

இஷ்டதிக்குட்யஸம்யுக்தம் [2] (பாத) ஸ்தம்பஸமன்விதம் |
[3]த்விபஞ்சாஶம் த்விஶதாஸ்தம்பை: ஸம்யுதம் மண்டபம் ததா || ருஅ ||

ஸர்வாலங்காரஸம்யுக்தம் மண்டபம் து த்ரயோதஶம் |
ஷோடஶாம்ஶம் சதுரஶ்ரம் து மத்யகூடம் விதானகம் ||

த்ருஷ்டாஶீதிபதாயுக்தஸம்யுதம் பாதபந்தகே |

மத்திய கூடமானது மூன்று 3 அம்சங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

மூன்று 3 அம்சவிஸ்தாரம் நீளமுடையதான முக பத்திரத்துடன் கூடியதாக இருக்கவேண்டும். 57

இஷ்டமான திக்கில் குட்டியத்துடனிருக்கவேண்டும். அது, (குட்டியமானது) தூண்களுடன் இணைந்திருக்க வேண்டும.

அந்த மண்டபமானது, இருநூற்றைம்பத்திரண்டு 252 தூண்களுடன் கூடியதாக இருக்கவேண்டும். 58

ஸகலவிதமான அலங்காரங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும். இவ்விதமிருப்பது பதிமூன்று 13வது மண்டபமாகும்.

மண்டபமானது, பதினாறு 16 பத்திகளுடன் கூடியதான சதுரச்ரமாக இருக்கவேண்டும். 59

1. ஸம்யுக்தகூடகஸமன்விதம் | இதி வா பாட: |

2. ஸ்தம்பை:, இதி வா பாட: |

3. த்விபஞ்சாஶத்விஶதிகஸ்தம்பஸமன்விதம் | இதி வா பாட: |

[illegible] ॥ ௬௰ ॥

ஸர்வாலங்காரஸம்யுக்தம் [illegible] ।
ஏவம் ஹி [illegible] விதா⁴: ॥ ௬௧ ॥

[illegible] ।
[illegible] ஸர்வாலங்காரஸம்யுத: ॥

பி⁴த்திம் ஸ்தம்ப⁴ம் ச [illegible] ।
[illegible] ॥ ௬௩ ॥

அது, இருநூற்றெண்பத்திரண்டு 282 தூண்களுடன் கூடியதாக இருக்கவேண்டும். என்று கூறப்பட்டிருக்கிறது.

அதன் (முன்பக்கத்தில்) முகபத்திரமானது. மூன்று 3 அம்சத்தில் இருக்கவேண்டும். மற்றதிக்குகளில் (முக பத்திரமானது) அதில் பாதியளவில், ஒன்றரை 1½ அம்சத்தில் இருக்கவேண்டும். ஸகல அலங்காரங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும். இது, பதினான்கா 14 வது மண்டபமாகும்.

இவ்விதம் சதுரச்ர மண்டபமானது பதினான்கு 14 விதமாகும், என்று கூறியுள்ளார்கள். 61

இதற்குமேலே, மண்டபத்தின் எல்லையானது, முப்பத்திநான்கு 34 பத்திவரையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த சதுரச்ர மண்டபங்கள், ஸகலவிதமான அலங்காரங்களுடன் கூடியவைகளாக இருக்கவேண்டும். 62

பித்தியையும், ஸ்தம்பங்களையும், அல்லது பித்தியுடன் இணைந்த ஸ்தம்பங்களையும், எஜமானனுடைய அபிப்பிராயத்தையனுஸரித்து (மேற்கூறப்பட்ட மண்டபத்தைச்) சுற்றிலும் அமைத்துக்கொள்வதாகும்.

[1] விஸ்தாரம் பங்க்திதோ ஜ்ஞேயம் ஆயதம் வாபி பங்க்தய: ।
விஸ்தாரபங்க்திமானம் து த்ர்யங்குலாத் த்ர்யங்குலவிவர்தனாத் ॥

ஸப்தவிம்ஶாங்குலம் யாவத் [2] தாவதாயம் நவோதிதம் ।
[3] பங்க்திக்ஷீணம் ததா வாபி ஹீனேன கரோதிதம் ।

நாங்குலேந கரம் பங்க்திம் ஹீனம் து ஸமாசரேத் ।
[4] அஶேஷபங்க்திஸம்பூர்ணம் து ப்ராஸ்தாயாமமாசரேத் ॥௬௬॥

ஸமாச்ரமண்டபமானது, இவ்விதமாகக் கூறப் பட்டிருக்கிறது.

இனி, ஆயதாச்ர (நீண்ட சதுரச்ர) மண்டபம் கூறப் படுகின்றது. 63

ஆயத சதுரச்ர மண்டபத்தில், விஸ்தாரத்தில் எவ்வளவு பத்திகளிருக்கின்றனவோ, அவ்வளவு பத்திகள், நீளத்திலு மிருக்கவேண்டும்.

பத்தியின் விஸ்தாரமானத்தை, மூன்று 3 அங்குலம் வீதமாக இருபத்தேழு 27 அங்குலம் வரையில் விருத்தி செய்துவர, ஆயாம (நீள)மானமானது, ஒன்பது 9 விதமாகும்.

[ஆயுத சதுரச்ர மண்டபத்தை, அகலம் நீளம் இவைகளில், ஸமமான பத்திகளுடன் கல்பிப்பதானால், அப்பொழுது] முதலில், முழத்தாலே அளவிடக்கூடாது.

அந்த மண்டபத்திலுள்ள பத்தியைக்கணக்கிட்டுக்

---

1 விஸ்தாரபங்க்திதோ ஜ்ஞேயா ஆயதாஸ்த்வாபி பங்க்தய: । இதி வா பாடோ யுக்த: ।

2. த்ர்யாயாமம் நவதோதிதம் । இதி பாடோ யுக்த: ।

3. பங்க்திகம் வா ஸ்வயம் வாபி, இதி பாடோ யுக்த: ।

4. அஶேஷபங்க்திஸம்பூர்ணம், இதி வா பாடோ யுக்த: ।

(ஸ்ஷீலோவாலஸோ) வைதஸ்ஸோவலோ க்ஷாயதம் ।
தவைலாவிதவிஸாமம் த ஷுசவா வா ஸம்ஸ்ய ஸ ॥

வஷீ்க்ஷீ த்ருயவிஸாலம் த‡வாஸவஜீக்ஷிவிஸாலகம் ।
[1] வாகவாஸ்ஷு வா (வரே) வாய வா
(வா) ரஸம்ஸோக கஸ்பயேத் ॥ சுஅ ॥

[2] வாஸ்ஷு வா (வா) ரயாதம் வை த த்ரிம்ஸம்ஹி-
வஸ்ரிதம் ।

கொண்டு, முன்பு கூறியுள்ளதைப்போல, நீளத்தைக்கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். 66

(அகல நீளங்களில்) ஸம பத்திகளுடன் கூடிய மண்டபத்தின் (தீர்கசதுரச்ர மண்டபத்தின்) அந்த நீளத்தை உசிதம் போல் பகர்ந்து, அந்த மண்டபத்தைக் கல்பிக்கவேண்டும். 67

மூன்று 3 பத்தி விசாலமும், ஐந்து 5 பத்தி நீளமுமுடையதாக இருக்கவேண்டும்.

[1] அதன் இரண்டு 2 பக்கங்களிலும், ஒரு 1 அம்சத்தில் வாரத்தை (தாவாரத்தை)க் கல்பிக்கவேண்டும். அல்லது முன்பக்கத்திலும் மற்றும் இரண்டு 2 பக்கங்களிலும், ஒரு 1 அம்ச அளவில் வாரத்தை (துவாரத்தை)க் கல்பிக்கவேண்டும்

‡ வஷவஷீக்ஷாபதம் தயா । உதி வாமொ யாதா ।

1. வாஸ்ஷயோ வாரதஸ்ராவி வாரஸம்ஸோக கஸ்பயேத் । உதி வா வாமொ யாதா ।

2. வாஸ்ஷயோஸ்ஷு வாரயாதம் , உதி வா வாமொ யாதா ।

3. இந்த மூலம் எவ்வித அர்த்தத்தையும் கொடுக்கவில்லை, ஆகவே, இடத்திற்கேற்ப திருத்தப்பட்டிருக்கிறது.

தஸ்யைவ பஹி꞉கோணேஷு [1] ஸ்தம்பாஹ்யங்க்ரய꞉ ॥ ௬௯ ॥

[2] பார்ச்வத்வயே(அ)பி ஹாரம் சேத்யஷ்டாவிம்சாங்க்ரி-
ஸம்யுதம் ।
[3] பார்ச்வே வாரயுதம் சேத்து சரணம் சாஷ்டவிம்சதி꞉ ॥

அக்ரே வா வாரஹீனம் தத் த்ரிரஷ்ட சரணான்விதம் ।
பாதம் ப்ரத்யுத்தநாஸாட்யம் வேதிஜாலகதோரணம் ॥ ௭௧ ॥

இவ்விதம் மூன்று 3 பக்கங்களிலும் வாரமுடையதாக இருந்தால், அது, முப்பது 30 தூண்களுடையதாகும்.

அப்பொழுது, அந்தத்தாவாரங்கள், மண்டபத்திற்கு வெளியில் சேர்க்கப்பட்டிருப்பவைகளாகும். 69

வெளியில் (முன் பக்கத்தில்) வாரமில்லாததாக இருந்தால், (இரண்டு 2 பக்கங்களிலும் வாரமுடையதாக இருந்தால்) அது, இருபத்தெட்டு 28 பாதங்களுடையதாகும்.

(அந்த மண்டபமானது) முன்பக்கத்தில் மட்டிலும் தாவாரமுடையதாக இருந்தால், அது, இருபத்தாறு 26 தூண்களுடையதாகும். 70

அல்லது, வாரமில்லாததாக இருந்தால் அந்த மண்டபமானது, இருபத்திநான்கு 24 தூண்களுடையதாகும்.

அதன் ஒவ்வொருபாதமும், அல்பநாஸியுடன் கூடியதாக இருக்கவேண்டும். வேதிகை, ஜாலம், தோரணம், இவைகளுடனிருக்கவேண்டும். 71

---

1. ஸ்தம்பஸ்ய பஹிர்தேசே । இதி வா பாடோ யுக்த꞉ ।

2. பார்ச்வே வாரஹீனம் சேத், இதி வா பாட꞉ சோத-நீய꞉ ।

3. பார்ச்வே வாரயுதம் சேத்து ஷட்விம்சச்சரணா-ன்விதம் । இதி வா பாட꞉ சோதநீய꞉ ।

நாநாகூடஸமாயுக்தம் த்வஜைர்யுக்தம் ப்ரதமம் பவேத் |
சதுர்ப்பக்திவிஸ்தாரம் து ஆயாமே து ஷட்பதகம் || எ௨ ||

§ஹாரம் பரிதோ ஏகபதம் மத்யே கூடம் த்விபதம் பவேத் |
விஸ்தாரம் ஏகபக்த்யா து முகபத்ரகம் || எ௩ ||

த்வாத்ரிம்ஶத்ஸ்தம்பஸம்யுதம் மண்டபம் து த்விதீயகம் |
விஸ்தாரம் பஞ்சபக்த்யா ஸ்யாதாயாமே ஸப்தபக்திகம் || எ௪ ||

த்ரி பஞ்சபக்திவிஸ்தாரதீர்க்கா மத்யே ஸபா பவேத் |

அதில், பறபல விதமான குடபங்களும், கொடிகளும் கல்பிக்கப்பட்டிருக்கவேண்டும்.

இவ்விதமிருப்பது, ஆயத சதுரச்ரமண்டபங்களில் முதலாவது மண்டபமாகும்.

நான்கு 4 பத்தி விஸ்தாரமும், ஆறு 6 பத்தி நீளமுமிருக்கவேண்டும். சுற்றிலும் ஒரு பத்தி தாவாரமிருக்கவேண்டும். நடுவில் கூடமிருக்கவேண்டும். அது, இரண்டு 2 பத்தி அகலம் (நான்கு 4 பத்தி நீளமுள்ளதாக இருக்கவேண்டும்.)

அதன் முகபத்திரமானது, ஒரு 1 பத்தியளவுடையதாக இருக்கவேண்டும்.

அது, முப்பத்திரண்டு 32 தூண்களுடன் கூடியதாக இருக்கவேண்டும். இவ்விதமிருப்பது, இரண்டாவது மண்டபமாகும். 73½

ஐந்து 5 பத்தி விஸ்தாரமும் ஏழு 7 பத்தி நீளமும் இருக்கவேண்டும். அதன் நடுவில், மூன்று 3 பத்தி விஸ்தாரமும், ஐந்து 5 பத்தி நீளமுமுள்ளதான ஸபை அமைந்திருக்கவேண்டும்.

---

§ ஹாரம் து, இதி பாடோ யுக்தஃ |

†ணோவம் வரிதொரம்ஸெ ஜஷடிகீ ஹஸ்ரவம்யாதடு ॥

வக்வாரிம்ஸக் வாதயாக்ம் வலவுமுகாரவம்யாதடு ।
வெதிகாதெஷ்ஹேயாக்ஷா தூதியம் ணோவம் ஹவெக் ॥ எசு ॥

ஷவஹக்கிவிஸாரும் தஹவஸ்ஹா ஷூ்பகம் ஹவெக்
விவதாஹக்ஷிவிஷாரகீவப்ம் உவெது உவெறாதயடு ॥ எஎ ॥

உணோயம் வரிதெதஷ்ம் (தெரா யூம்) ஸகிஷ்டீவபக ஹஸ்ரகடு ।
ஷஷிவம்வூறம்ஷிவம்யாக்ம் வதாயபும் உணோவம் ஹவெக் ॥

அந்த மதத்திய கூடத்தைச் சுற்றிலும், ஒரு 1 பத்தி வாரமிருக்கவேண்டும்.

(அதன் முன்பக்கத்தில்) ஒரு 1 பத்தியளவில் முக பத்திரமிருக்கவேண்டும். 75

அது, நாற்பது 40 பாதங்களுடனிருக்கவேண்டும். ஸகலவிதமான அலங்காரங்களுடன் கூடியதாக இருக்க வேண்டும். வேதிகை முதலியவைகளுடன் கூடியதாக இருக்கவேண்டும். இவ்விதமிருப்பது மூன்று 3 வது மண்டபமாகும். 76

ஆறு 6 பத்தி விஸ்தாரமும், எட்டு 8 பத்தி நீளமுமிருக்க வேண்டும். அதன் நடுவில், இரண்டு 2 பத்தி விஸ்தாரமும், நான்கு 4 பத்தி நீளமுமுள்ளதான சிறந்த அல்லது உயரமான மண்டபம் இருக்கவேண்டும்.

அதைச்சுற்றிலும் இரண்டு 2 பத்திகளிருக்கவேண்டும். அதன் முகபத்திரமானது, மனதிற்குகந்த நீளமுள்ளதாக இருப்பதாகும்.

அது, அறுபது 60 தூண்களுடன் கூடியதாக இருக்க வேண்டும். இது, நான்கா 4வது மண்டபமாகும். 78

† வரிதொவாரஉம்ஸெஷ கூஸெ்ரஷ உவஹஸ்ரகடு । உதி வா வாடொ பாக: ।

*ஸப்தஹஸ்த விஸ்த்ருதம் நவஹஸ்தாயாமஸமம் க்ரமாத் |
மண்டபே பரிதோ த்வ்யம்சே ச (ஞ) த்விதீக
ஸஹஸ்ர ஸம்யுதம் || ௭௧ ||

ஸ்ரீஹஸ்தவிஸ்த்ருதா சைவ ஹஸ்தா தத்பார்ஶ்வஹஸ்தகம் |
ஸப்தாயிக த்வயாயிகம் பாதயுக்தம் விதீயதே || ௭௨ ||

ஸர்வாலங்கார ஸம்யுக்தம் பஞ்சமம் மண்டபம் பவேத் |

---

[1]ஏழு 7 பத்தி விசாலமும் ஒன்பது 9 பத்தி நீளமுமுள்ளதாக இருக்கவேண்டும்.

அதன் மத்தியமண்டபமானது மூன்று 3 பத்தி அகலமும், ஐந்து 5 பத்தி நீளமுமுள்ளதாக இருக்கவேண்டும்.

மத்தியமண்டபத்தைச்சுற்றிலும் இரண்டு 2 பத்திகளிருக்கவேண்டும.

அதன் முகபத்திரமானது, ஒரு 1 அம்சமிருக்க வேண்டும

இந்த மண்டபமானது, எழுபத்திரண்டு 72 பாதங்களுடையதாகும, என்று கூறப்பட்டிருக்கிறது.

இது, ஸகல அலங்காரங்களுடன் கூடியதாக இருக்க வேண்டும. இவ்விதமிருப்பது, ஐந்தாவது மண்டபமாகும்.

---

* ஏதத்ஸ்தானே பாட: ஶோதநீய: —

"ஸப்தஹஸ்தவிஶாலம் ச நவஹஸ்தாயதம் ததா | த்ரிபஞ்ச-ஹஸ்தவிஸ்தாராயாமம் தத்மத்யமண்டபம் || மண்டபம் பரிதோ த்வ்யம்ஶம் ஹஸ்தா தத்பார்ஶ்வஹஸ்தகம் | த்விஸப்ததிபாதயுக்தம் மண்டபம் ஸம்வி-தீயதே ||" இதி |

1. இங்கு மூல பாடம் பிழைகளுள்ளதாகவும், விஷயங்கள் மாறுதலாகவுமிருக்கின்றது. ஆகையால், திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றது.

வஸுஹஸ்தவிசாலம் ச தசஹஸ்தாயதா (யதா) ஸ்ம்ருதம் ।

த்விசதுர்ஹஸ்தவிஸ்தாரதீர்கம் மத்யமண்டபம் (மண்டபம்) ।
பரிதோ மண்டபம் த்ர்யம் (த்ர்யம்) சம் மத்யஸ்தம்ப-
விவர்ஜிதம் । ௮௨ ।

† [illegible] ।
ஷண்ணவதி ஸ்தம்பஸம்யுக்தம் ஸர்வாலங்காரஸம்யுதம் ।

ஷட்வேதம் (வேத) மண்டபம் ப்ரோக்தம் [illegible]
சிவாஹ்லாதகம் ।

எட்டு 8 பத்திவிசாலமும், பத்து 10 பத்தி நீளமுமிருக்கவேண்டும். அதன் மத்திய மண்டபமானது, இரண்டு 2 பத்தி விஸ்தாரமும், நான்கு 4 பத்தி நீளமுமுடையதாக இருக்கவேண்டும்

அந்த மண்டபத்தைச் சுற்றிலும் மூன்று 3 பத்திகளிருக்கவேண்டும்.

மத்திய மண்டபத்தின் மத்தியில் தூண்களிருக்கக் கூடாது.

ஹே நல்ல வ்ரதானுஷ்டானமுள்ளவனே! இதன் கிழக்கு திக்கில், நான்கு 4 பங்கு நீளம், இரண்டு 2 பங்கு அகலத்தில் முகபத்திரமிருக்கவேண்டும்

தொண்ணூத்தாறு 96 தூண்களுடன் கூடியதாகவும், ஸகலவிதமான அலங்காரங்களுடன் கூடியதாகவுமிருக்கவேண்டும். 83

இவ்விதமிருப்பது, ஆறு வேது மண்டபமாகும். இது பரமேசுவரனுக்கு உகந்ததாகும்.

---

† [illegible] ।

[illegible] ॥ அச ॥

[illegible] ॥ அரு ॥

[illegible] ॥ அசா ॥

[illegible]

(மண்டபமானது) ஒன்பது 9 பத்தி விஸ்தாரமும், பதினொன்று 11 பத்தி நீளமுமிருக்கவேண்டும்.

[3] இதன் மத்திய மண்டபமானது ஒரு 1 பத்தி அகலமும், மூன்று 3 பத்தி நீளமுமிருக்கவேண்டும்.

மத்திய மண்டபத்தைச் சுற்றிலும், நான்கு 4 பத்திகளிருக்கும்படி, இந்த மண்டபத்தைக் கல்பிக்கவேண்டும்.

இதன் முகபத்திரமானது, மூன்று 3 பாகம் அகலமும், நான்கு 4 பாகம் நீளமுமுள்ளதாக இருக்கவேண்டும். அது, ஸகலவிதமான அலங்காரங்களுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

இவ்விதமிருப்பது ஏழா 7 வது மண்டபமாகும். [இது 112 தூண்களுடைய மண்டபமாகும்.] 86

---

1. [illegible]

2. [illegible]

3. மத்திய மண்டபமானது மூன்று 3 பத்தி அகலம் ஐந்து 5 பத்தி நீளமிருக்கவேண்டும். என்றிருக்கவேண்டும்.

𑌏𑌵𑌂 𑌹𑌿 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌂 𑌚 𑌸𑌾𑌯𑌤𑌂 𑌮𑌣𑍍𑌡𑌪𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ ௮௭ ॥

𑌤𑍍𑌰𑌿 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌞𑍍𑌚 𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤 𑌸𑌂𑌕𑌣𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌵𑌾
(𑌮𑌧𑍍𑌯𑌾𑌯𑌤𑌂) ।

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌮𑌣𑍍𑌡𑌪𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌭𑌿𑌤𑍍𑌤𑌿𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌤𑍁 𑌪𑌞𑍍𑌚𑌧𑌾 ॥

𑌪𑌾𑌦𑌾𑌯𑌾𑌮𑌵𑌿𑌶𑌾𑌲𑍇𑌨 𑌦𑌾𑌰𑍁𑌪𑌾𑌦𑍇𑌨 𑌵𑌾 𑌦𑍍𑌵𑌯𑌂 (𑌸𑌮𑌂) ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌮𑍁𑌖𑌭𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌮𑌣𑍍𑌡𑌪𑌾𑌕𑍃𑌤𑌿 ॥

𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌸𑍋𑌪𑌾𑌨𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌹𑌸𑍍𑌤𑌿𑌹𑌸𑍍𑌤𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑌞𑍍𑌚𑌷𑌟𑍍𑌸𑌪𑍍𑌤𑌾𑌷𑍍𑌟𑌨𑌵 𑌦𑌣𑍍𑌡𑌂 𑌵𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ॥

மண்டபத்தின் ஸகல அங்கங்களும் அழகாகவும் இஷ்டமான திக்கிலும், சுற்றிலும அமைத்துக்கொள்ளுவதாகும். இவ்விதமாக நீண்ட சதுரச்ர மண்டபமானது, பதினான்கு விதமாகும், என்று அறிந்து கொள்ளவேண்டும்.

மத்திய மண்டபத்தின் நீளமானது, மூன்று 3, நான்கு 4, ஐந்து 5, ஆறு 6 அல்லது ஏழு 7 பாகங்களிருப்பதாகும்.

மண்டபங்கள் எல்லாவற்றிற்கும், பித்தி விஸ்தாரமானது, ஐந்துவிதமாகும். அது, பாதத்தின் நீளம், அகலம், இவைகளினால் கூறப்பட்டிருப்பதாகும். தாரு பாதத்தினாலேயும் (அது மரத்தூணாக இருந்தாலும் ஸமானமாகும். கீழே கூறியபடியேயாகும்.) 88½

ஸகல முகபத்திரத்தின் அமைப்பும், மண்டபத்தின் உருவத்தைப்போலவே இருக்கவேண்டும்.

அதன் பக்கத்தில் (பக்கங்களில்) படிக்கட்டுடன் கூடியதாக இருக்கவேண்டும். அது (படிக்கட்டானது) யானையின் துதிக்கையைப்போல் அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதன் (படிக்கட்டின்) விஸ்தாரமானது, ஐந்து 5,

ஸபாதம் ஸார்த்தஹஸ்தம் வா ஹஸ்திஹஸ்தோதயாந்விதம் ।
1 யஷ்டிகாஸமயுக்தம் வா வ்ருத்தம் ஹஸ்திகஹஸ்தி(ஸ்த)கம் ॥

2 தஸ்மூலம் ஸிவாக்ரோரஸ்ய ஸமம் க்ஷுத்ரகாக்ருதி ।
மூலாதஷ்டாம்ஸஹீனம் தத் க்ரமாத்ஸ்யாத் க்ரமாக்ரகம் ॥ ௯௨ ॥

ஹஸ்திஹஸ்தஸ்ய மத்யம் து ஏகம் வா த்வயம் யஷ்டய:
(யஷ்டிகம்) ।
தண்டம் ஸபாததண்டம் வா ஸார்த்தம் வா த்வித்ரிதண்ட
(தண்டோ)கம் ॥ ௯௩ ॥

ஆறு 6 ஏழு 7, எட்டு 8, அல்லது ஒன்பது 9, தண்டமிருப்பதாகும். 90

ஒண்ணேகால் 1¼ முழம், அல்லது ஒண்ணரை 1½ முழம், யானைத்துதிக்கையின் உயத்துடன் (தோற்றத்துடன்) இருக்கவேண்டும். அந்தத்துதிக்கையானது, (தரையில் கிடக்கும்) மரத்தின் மேல்பக்கத்தைப்போலவோ, ஸ்வச்ர (சதுர) மாகவோ இருப்பதாகும். 91

அதன் நீப்ரமானது. பக்கங்களிலிருப்பதாகும். அதன் நுனியானது, சுழித்திருக்கவேண்டும்.

ஹஸ்தி ஹஸ்தத்தின் நுனியானது அதன் அடிப்பக்கத்தின் கனத்தில் எட்டில் ஒரு 1 பாகம் முறையே நுனி வரையில் சிறுத்திருக்கவேண்டும். 92

ஹே அந்தணனே! ஹஸ்திஹஸ்தத்தின் மத்தியமானது தடியைப்போன்ற வடிவத்தில், ஒன்றாகவோ இரண்டாகவோ இருப்பதாகும்.

அது, ஒன்று 1, ஒண்ணேகால் 1¼, ஒண்ணரை 1½, இரண்டு 2, அல்லது. மூன்று 3, கோளவு இருப்பதாகும். 93

---

1. யஷ்டிகாஸமயுக்தம், இதி வா பாடோ யுக்த: ।

